Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 சித்திரை 31 செவ்வாய்க்கிழமை (14.05.2013) பக்கங்கள் 20 ஓசை – 226

Tilko Jaffna City Hotel
❖ Banguet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxrious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E.Mail - tilkojaffna@gmail.com T.P - 0212225969
Web - www.Cityhoteljaffna.com Hotline: 0212229497
(C/2486)
















# வடக்கை உலுக்கிய "மகாசென்" சூறாவளி

## இயல்பு நிலையிலும் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் நேற்றுக்காலை மகாசென் சூறாவளி மற்றும் பலத்த மழையினால் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டதுடன் சொத்துக்களும் பெருமளவில் சேதமடைந்துள்ளன.

குறிப்பாக குடாநாட்டிலேயே அதிகளவு சேதங்கள் ஏற்பட்டுள்ளன. வீட்டுக்கூரைகள் தூக்கி வீசப்பட்டதுடன் பனைமரங்கள், வாழைகள் முறிந்து வீழ்ந்ததுடன் மக்களும் காயமடைந்த அதேளை குருநகர் பகுதியிலுள்ள கார்மேல் மாதா ஆலயம் மீது வீழ்ந்த இடியினால் அவ்வாலயம் முழுமையாக சேதமடைந்துள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிலுள்ள மல்லாகம் கோணப்புலம் நலன்புரி நிலையத்திலேயே அதிகளவு பாதிப்புக்கள் ஏற்பட்டன. மயிலிட்டி, தையிட்டி போன்ற பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து நீண்டகாலமாக இப்பகுதிகளில் வசித்து வரும் மக்கள் நேற்றைய அசாதாரண காலநிலையால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். குறிப்பாக அந்தப் பகுதியில் நின்ற பனைமரங்கள் நலன்புரி நிலைய குடியிருப்புக்கள் மீது வீழ்ந்ததனால் 15 வீடுகள் முழுமையாக சேதமடைந்ததுடன் மூவர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சூசைதாசன் சுமதி (வயது - 42), அவரது ம்கனான சூசைதாசன் சுயந்தன் (வயது - 13) மற்றும் மாவை கலட்டி பகுதியைச் சேர்ந்த தி.சதீஸ்வரன் (வயது - 43) ஆகியோரே

19 ஆம் பக்கம் பார்க்க

## நகர்கிறது மகாசென்

(கொழும்பு)

வங்காள விரிகுடாவின் தென்மேற்கில் திருகோணமலைக்கு வடகிழக்காக 750 கிலோ மீற்றர் தூரத்தில் நேற்றுப் பகல் 12.00 மணிக்கு மகாசென் என்ற தீவிரமடையாத சூறாவளி மையங்கொண்டுள்ளதாக வானிலை அவதான நிலைய அதிகாரி வசந்தகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகாசென் சூறாவளியானது தற்போது நாட்டைவிட்டு விலகி வடதிசையில் நகர்கின்றது.

19 ஆம் பக்கம் பார்க்க

## கைதடியில் கோர விபத்து; பயணிகள் 31 பேர் காயம்



(கைதடி)

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கி பயணித்த பயணிகள் பஸ் வண்டியும் வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த பயணிகள் பஸ் வண்டியும் கைதடிப் பாலத்தில் நேற்று முற்பகல் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியதில் அதில் பயணித்த 31 பயணிகள் வரை காயமடைந்ததுடன் அவர்களில் மூவர் படுகாயங்களுக்குள்ளாகினர். இரண்டு பஸ் வண்டிகளும் பலத்த சேதங்களுக்குள்ளாகின.

19 ஆம் பக்கம் பார்க்க

## கைத்தொழில்துறை மேம்பாடு அமெரிக்க பிரதிநிதிகளுடன் பேச்சு



(கொழும்பு)

இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில் துறைகளை மேம்படுத்துவது தொடர்பில் ஐக்கிய அமெரிக்க அபிவிருத்தி நிதியின் கருத்திட்ட பிரதிநிதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து குறித்த விடயம் தொடர்பாக கலந்துரையாடியுள்ளனர்.

கொழும்பு மருதானையில் அமைந்துள்ள அமைச்சில் மேற்படி விடயம் தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

இதன்போது பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் ஊடாக, நாடளாவிய ரீதியில் சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில் துறைகள் முன்னேற்றம் கண்டு வரும் நிலையில், குறித்த தொழிற்துறைகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் வெவ்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையில் ஐக்கிய அமெரிக்க அபிவிருத்தி நிதியத்துடன் இணைந்ததாக அமைச்சின் கீழான பனை அபிவிருத்தி சபை, கைத்தொழில் அபிவிருத்தி சபை, தேசிய வடிவமைப்பு நிலையம், தேசிய அருங்கலைகள் பேரவை ஆகிய நிறுவனங்களுக்கு கீழான பல்வேறுபட்ட

19 ஆம் பக்கம் பார்க்க

## 13 ஆவது திருத்தம் வலுவிழந்தால் இன நல்லிணக்கம் காணாமற்போகும்

### சுமந்திரன் எச்சரிக்கை

அரசியல் சட்டத்தின் 13 ஆம் திருத்தச் சட்டத்தை வலுவிழக்கச் செய்யும் முயற்சிகள் இனநல்லிணக்கத்தை பாதிக்கும் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாணசபைத் தேர்தலுக்கு முன்னதாக 13 ஆம் திருத தச் சட்டத்தின் சில சரத்துக்களை இரத்து செய்ய முயற்சி எடுக்கப்பட்டு வருவதாக தகவல்கள் கிடைத்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறான நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டத்தை வலுவிழக்கச் செய்வதன் மூலம் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சிகள் பாதிக்கப்

19 ஆம் பக்கம் பார்க்க

## வல்வெட்டித்துறையில் மீனவரைக் காணவில்லை

### தொழிலுக்கு சென்றவர் கடலில் மாயம்



(வடமராட்சி)

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடற்றொழிலாளி ஒருவர் கடலில் மூழ்கி காணாமற்போயுள்ளார்.

இக்கடற்பரப்பில் படகில் தொழில் செய்து கொண்டிருக்கும்

19 ஆம் பக்கம் பார்க்க

உள்ளே...

க.பொ.த உயர்தரத்துக்கான ஆங்கிலம்

## அதிகாலை விழுந்தது இடி தகர்ந்தது தேவாலயம்

### குருநகரில் போர்க்கள காட்சி



(குருநகர்)

யாழ். குருநகர் பகுதியில் அமைந்துள்ள புனித கார்மேல் மாதா ஆலயம் நேற்றுக்காலை இடி மின்னல் தாக்கம் காரணமாக. சேதமடைந்துள்ளது.

நேற்று அதிகாலை 6.30 மணியளவில் இந்த ஆலயத்தில் வழிபாடுகளில் அப்பகுதி மக்கள் ஈடுபட்டிருந்த சமயம் இடி மின்னலுடன் கனமழை பெய்துகொண்டிருந்ததாகவும் இதன்போது பாரிய சத்தத்துடன் இடி ஒன்று ஆலயத்தின் முன்பக்கத்தில் விழவே அந்த ஆலயத்தின்

19 ஆம் பக்கம் பார்க்க

# அனர்த்தத்தை எதிர்கொண்ட மக்களுக்கு உணவல்லாத நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

சூறாவளி அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மல்லாகம் கோணப்புலம் நலன்புரி நிலையத்தினை நேற்று ஈ.பி.டி.பி.யின் பிரதிநிதிகள் நேரில் சென்று பார்வையிட்டதுடன், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உணவு மற்றும் உணவல்லாத பொருட்களையும் வழங்கி வைத்துள்ளனர்.

காலை வீசிய 'மகாசென்' சூறாவளி காரணமாக அதிகளவில் பாதிக்கப்பட்ட கோணப்புலம் நலன்புரி நிலையத்திற்கு ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்த்திரி அலன்ரின் (உதயன்), ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்), ஈ.பி.டி.பி.யின் சர்வ்தேச முக்கியஸ்தர் விநதன், ஈ.பி.டி.பி.யின் வலி. வடக்கு பிரதேச இணைப்பாளர் ஜெயபாலசிங்கம் (அன்பு) ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

அத்துடன், அங்கு தங்கியுள்ள குடும்பங்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய சமைத்த உணவினை வழங்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொண்டதுடன், கூரைவிரிப்பு (தறப்பாள்) மற்றும் உணவல்லாத பொருட்களையும் வழங்கிவைத்தனர்.

இதனுடன் சேதமடைந்த குடியிருப்புக்களை உடனடியாக புனரமைக்கும் வகையில் கூரைத் தகடுகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை சூறாவளி காரணமாக பனை மரமொன்று முறிவடைந்து குடியிருப்பில் வீழ்ந்ததால் மூவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## பிக்குகளுக்கு மொழிப் பயிற்சி

கல்வி அமைச்சின் பிரிவெனா கல்விப் பிரிவினால் பிரிவினாக்களின் பௌத்த துறவிகள் 25 பேருக்கு யாழ். தேசிய கல்வியல் கல்லூரியில் வெளிக்கள தமிழ்மொழிப் பயிற்சிப் பாடநெறி ஒன்று கடந்த 14 தினங்களுக்கு அங்கு நடைபெற்றிருந்தன. இதன் இறுதித்தினமான 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையாகிய இன்றைய தினம் விழாவொன்று இக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் ஆளுநர் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (05)

## 'மகாசென்' தந்த அவலங்களின் பதிவுகள்


யாழ். நகரப்பகுதியில்...





படம் - ராஜ்குமார்

மல்லாகம் கோணப்புலம் நலன்புரி நிலையத்தில்






படம் - 02


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2426 திகதி 11-05-2013

ஆங்கில எழுத்து: T

வெற்றி எண்கள்: 04 19 21 45

போனஸ் இல: 30

ஜக்பொட் பரிசு ரூ. 32,636,675/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 261517 | 20/- | 5,230,340/- |
| 2 இல | 18601 | 100/- | 1,860,100/- |
| 3 இல | 392 | 1,000/- | 392,000/- |
| 4 இல | 1 | 1,000,000/- | 1,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10434 | 40/- | 417,360/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 727 | 1,000/- | 727,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 12 | 10,000/- | 120,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 32,636,675/- | - |
| 1 இல + போனஸ் இல | 12430 | 100/- | 1,243,000/- |
| 2 இல + போனஸ் இல | 589 | 500/- | 294,500/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 497 | 200/- | 99,400/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 25 | 1,500/- | 37,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 01 | 150,000/- | 150,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 305231 | | 12,071,200/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2013 மே 15 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ. 33,350,350/-

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை

356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02
தொ.பே: 2333546/7

(C/2739)


## வீதி விபத்துக்களை தவிர்ப்பது எப்படி?

### மாணவர்களுக்கு விழிப்புணர்வு

நெடுங்கேணி மாறலுப்பை அரசினல் தழிழ்கலவன் பாடசாலையில். நெடுங்கேணி பொலிஸாரினால பாடசாலை மாணவர்களுக்கு. தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும். வாகன விபத்து தொடர்பாக அதில். இருந்து எவ்வாறு பாதுகாப்பது தொடர்பாக நெடுங்கேணி, பொலிஸ் பொறுப்பதிகாரி. S.I சிஸ்சரவின். தலமையில். வீதி பாதுகாப்பு தொடர்பாகன நடமுறைகளை மாணவர்களுக்கு வழங்கியதோடு பாடசாலை மாணவர்களுக்கு நெடுங்கேணி, பொலிஸ்சரினால். கற்ரல் உபகரணங்கள் 53 மாணவர்களுக்கு. வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## கரணவாயில் வீதி விபத்து

கரணவாய் மூத்த விநாயகர் ஆலயத்திற்கு அண்மையில் நேற்றுமாலை வீதி விபத்து ஒன்று இடம்பெற்றது. தண்ணீர் எடுக்கச்செல்லும் பவுசர் ஒன்றுடன் கார் ஒன்று மோதியதால் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. கார் பலத்த சேதமடைந்துள்ளது.(18)

## நாய்களின் தொல்லை

வரணிப் பொதுச்சந்தை வளாகத்தில் பகலில் குட்டைநாய்கள் கூட்டம் கூட்டமாகப் படுத்துறங்குவதைக் காணமுடிகிறது. வியாபாரிகள் வெளியேறியபின் சந்தைக் கட்டடத்திற்குள் படுத்துறங்கி அசிங்கப்படுத்துவதாக வியாபாரிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர். (150)


### சிறுவிளம்பரங்கள்

#### வீடு விற்பனை

நல்ல சுற்றாடலில் ஒரு காணியிலுள்ள சகல வசதிகளும் கொண்ட இரண்டு வீடுகள் தனித் தனியாகவோ, ஒன்றாகவோ விற்பனைக்குண்டு. பார்வையிடும் நேரம்: காலை 12 மணி வரையும், மாலை 3 மணிவரையும்.

தொடர்பு: க.சீவறட்ணம் (சிவராசா), றியிஸ்ரார் சம்பந்தர் லேன், சுதுமலை (R/181)


## கலந்துரையாடல்

உடற்கல்வி டிப்புளோமா தாரிகளின் பணி நியமனம் தொடர்பான அவசர கலந்துரையாடல் ஒன்று பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அமைச்சரின் யாழ். அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அனைவரையும் உரிய நேரத்தில் ஒன்று கூடுமாறு டிப்ளோமா பட்டதாரிகள் சங்கச் செயலாளர் கருணாகரன் கேட்டுள்ளார்.

# சுந்தரபுரம் - மணிபுரம் வீதி புனரமைப்பு எப்போது?


(வவுனியா)

வவுனியா சுந்தரபுரத்தில் இருந்து மணிபுரம் செல்லும் பிரதான வீதி மிகவும் மோசமான நிலையில் பாதிப்படைந்துள்ளமையினால் அவ் வீதியைப் புனரமைப்புச் செய்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வீதி கடந்த சில வருடங்களாக புனரமைப்புச் செய்யப் படாமையினால் குண்டும் குழியுமான நிலையில் காணப்படுகின்றது. எனவே இவ்வீதியினை பயன்படுத்தும் குறித்த கிராம மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதுடன் உரிய நேரத் தில் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாதுள்ள தாக கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இவ் வீதியினால் பயணிக்கும் பேருந்துகளுக்கு சேதம் ஏற்படுவதனால் தமது சேவையினை நிறுத்தப்போவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவ் வீதி தொடர்பாக இப்பிரதேசத்திலிருந்து தெரிவு செய் யப்பட்ட பிரதேச சபை உறுப்பினருக்கும், வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைக்கும் பல தடவைகள் முறைபாடுகள் செய்தும் எந்தப் பயனும் கிடைக்கவில்லை என இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (160)



கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலையிலிருந்து இடைவில கிய மாணவர்களை பாடசாலையில் மீள இணைத்த பின்பு அவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை யாழ். வணிகர் கழத் தின் அன்பளிப்பாக வழங்கும் நிகழ்வு அரசாங்க அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றபோது வாழ் நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மாணவிக்கு கற்றல் உபகரணங்களை வழங்குவதைக் காணலாம். (90)

# சமயம்சார் விழுமியங்களை இளையோர் பின்பற்றவேண்டும்

## – ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள்

இந்துசமய கலாசாரப் பண் பாடுகள் பேணிப் பாதுகாக்கப் படவேண்டும், சிவாகம விதி களுக்கிணங்க ஆலயங்களில் பூசைகள் மேற்கொள்ளப்பட வேண்டும், சைவமக்கள் ஒவ் வொருவரும் பூசை பற்றிய முழுமையான அறிவும், பயிற் சியும் பெற்றிருக்கவேண்டும், தங்கள் வீடுகளில் தினமும் பூசை செய்யவேண்டும் என யாழ்.சின்மயாமிஷன் வதிவிட ஆச்சாரியாராக விளங்கும் பிரம்மச்சாரி ஜாக்கிரதசைதன்ய சுவாமிகள் தெரிவித்தார்.

நல்லூர் செட்டித்தெரு வீதி யில் அமைந்துள்ள இலங்கை சின்மயாமிஷனின் யாழ்.மாவட்ட தலைமை ஆச்சிரமத்தில் நடை பெற்ற சின்மயாநந்தரின் அவ தாரதின நிகழ்வில் கலந்து கெண்டு பூசை பற்றிய பயிற் சியை வழங்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுவாமிகள் தொடர்ந்து தனது அருளுரையில் இந்தியா வில் உள்ள பெங்களூரைத் தலைமை ஆச்சிரமாகக் கொண்டு இயங்கிவருகின்ற சின்மயாமிஷன் உலகில் 200 இற்கும் அதிகமான நாடுகளில் கிளைகளை நிறுவி ஆன்மிகப் பணிகளை மேற்கொண்டுவரு கிறது.

இதன் ஸ்தாபகராக பூஜ்ய குருதேவரான சுவாமி சின்ம யானந்தர் விளங்குகின்றார். இவரின் சமாதிநிலையை அடுத்து தற்போது சுவாமி தேஜோமயானந்தர் ஆச்சிரமப் பொறுப்பை ஏற்று வழிநடத்தி வருகின்றார்.

இன்றைய இளைய தலை முறையினர் இந்து மதம் காட் டும் அறநெறியில் செல்லாது அதனின்றும் விலகி தமது வாழ்வியலைக் கட்டமைக்க முற்படுகின்றனர். அதனால் பல் வேறு பிரச்சினைகளையும், கலாசார சீரழிவினையும் எதிர் கொள்கின்றனர்.

இந்து மதத்திற்கு காலத் திற்குக் காலம் ஏற்பட்டுவரு கின்ற சவால்கள் எல்லாம் கடந்து நம்சமயம் நின்று நிலைக்கின்றது என்றால் நம்சமயத்தில் உறை ந்து காணப்படுகின்ற அர்த்தம் நிறைந்த தத்துவங்கள் தான். அவற்றை இன்றைய இளைய தலை முறையினர் அறிந்து பின்பற்ற வேண்டும்.

யாழ்மாவட்டத்திலும், ஏனைய பகுதிகளிலும் நடைபெறும் சின் மயாமிஷனின் ஆன்மிகப் பய ணத்தில் அனைவரும் இணை ந்து சின்மியாமிஷன் இளைஞர் அணி, மாணவர் அணி, பெரி யோர் அணி, மகளிர் அணி என பெரும் ஆன்மிக அணியாகி எமது மதத்தை நிலைநிறுத்தி உன்னத வாழ்வினைப் பெற வேண்டும் என்றார். (10)

# வருடாந்த பொதுக்கூட்டம்

(வடமராட்சி)

மேலைப்புலோலி சதாவதானி சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தின் 26 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நிலைய மண்டபத்தில், நிலையத்தலைவர் பா.ரகுநாதன் தலைமையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக் யாழ்.மாவட்ட சிக்கனக் கடனுதவிக் கூட்டு றவுச் சங்க சமாசத் தலைவர் செ.இலகுநாதன் கலந்துகொள்ள வுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி நல்லொழுக்கமன்ற உபதலைவர் திருமதி சரஸ்வதி தியாகராஜன், நக்கீரன் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.கணேசன் (ஜே.பி) ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். அன்றையதினம் புதிய நிர்வாகத்தெரிவும் இடம்பெறும். (109)

# இரதோற்சவம்

(வடமராட்சி)

தொண்டைமானாறு கெருடா வில் ஸ்ரீ வீரமகாளி அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி, திருவிழா நடைபெற்று வருகிறது.

இத்திருவிழாவை சிவஸ்ரீ த.விசாகரத்தினக் குருக்கள் பிரதம குருக்களாக இருந்து நடாத்திவருகிறார். எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேர்த்திருவிழா நடைபெறவுள் ளன. (01)

# புதிய செயலாளர் நியமனம்

(வவுனியா)

வவுனியா நகரசபைக்கு புதிய செயலாளராக க.சத்தி யசீலன் பதவியேற்றுள்ளார்.

வவுனியா நகரசபையில் செயலாளராக கடமையாற்றிய வீ.வசந்தகுமார் திடீரென யாழ்ப் பாணத்திற்கு இடமாற்றம் செய் யப்பட்டதை அடுத்தே க.சத்திய சீலன் செயலாளராக நியமிக்கப் பட்டுள்ளார்.

வவுனியா பிராந்திய சுகா தாரசேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நிர்வாக உத்தி யோகத்தராக கடமையாற்றிய இவர் நேற்று வவுனியா நகர சபையின் செயலாளராக 'கட மைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (160)

# புத்தாக்குநர் கழகங்களை பாடசாலைகளில் அமைக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை புத்தாக்குநர் ஆணைக்குழுவும், இலங்கை கல்வியமைச்சும் இணைந்து நாட்டிலுள்ள பாடசாலை மாணவர்களிடையே புத்தாக்கக் கண்டுபிடிப்புக்களை ஊக்கு விக்கும் நோக்கில் இளம் புத் தாக்குநர் கழகங்களை பாட சாலைகளில் அமைப்பது குறி த்து சுற்று நிருபத்தில் அறிவித் துள்ளது.

இந்த அறிவித்தல் நாட்டி லுள்ள எல்லா மாகாணக் கல் விப் பணிமனைகளுக்கும் வல யக்கல்விப் பணிமனைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

1AB, 1C வகை II பாட சாலைகளில் இளம் புத்தாக்குநர் கழகம் அமைக்குமாறு அறி வுறுத்தப்பட்டுள்ளது. இளம் புத்தாக்குநர் கண்டுபிடிப்புகளி னால் பாடசாலைகளுக்கும், ஊருக்கும் பெருமை சேர்ப்ப துடன் பொருளாதார ரீதியில் நன்மைபெறமுடியும் எனவும் ஆணைக்குழு கருதுகிறது.

ஒரு இளம் புத்தாக்குநர் கழ கத்தை அமைக்கும்முறை, செயற்படுத்தும் விதம், வலயக் கல்வி அலுவலகம் மேற் பார்வை செய்யும் விதம் பற்றி யும் சுற்று நிருபத்தில் அறிவிக் கப்பட்டுள்ளது.

இச்சுற்று நிருபம் சகல பாட சாலைகளிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (06)

# வாழ்வாதாரத்தை மேம்படுத்த வங்கிக்கடன் வசதி

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் அண் மையில் மீளக்குடியேற்றம் இடம்பெற்ற பிரதேசங்களில் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் முகமாக இலங்கை வங்கி பருத்தித் துறைக்கிளை பல்வேறு கடன் வசதிகளை வழங்கிவருகிறது.

மீன்பிடிக்கடன்கள், விவசாயக் கடன்கள், வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழான கடன்கள், வாழ்வாதாரக் கடன்கள், புனர் வாழ்வாதாரக் கடன்கள் எனப் பல்வேறு வகையான கடன்கள் சுமார் 800 வங்கி வாடிக்கையா ளர்களுக்கு வழங்கப்பட்டுள் ளன.

இக்கடன்களைப் பெற்றுக் கொண்ட 750 கடனாளிகள் கடன்களை ஒழுங்காகச் செலுத் திவருவதாகவும், 30 கடனாளிகள காலம் கடந்து கடன்களைச் செலுத்திவருவதாகவும், 20 கடனாளிகள் கடன்களைச் செலுத்தத் தவறியுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

வங்கியின் கடன்களைப் பெற்று ஒழுங்காகக் கடன்களை மீளச்செலுத்துபவர்களுக்கு மீண்டும் கடன்களை வழங்கி உதவுவதற்கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது. (01)





வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் அன்மையில் இடம்பெற்ற சின்னம் சூட்டும் விழாவை அதிபர் திருமதி பாலராணி ஸ்ரீதரன் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்துவைப்பதனையும், பிரதம விருந்தினராகக் கலந்துகெண்ட வைத்திய கலாநிதி மீ.சியாமளா உரையாற்றுவதையும், பிரதம விருந்தினருக்கு அதிபர் நினைவுப் பரிசில் வழங்குவதையும் காணலாம். (01)

பயத்தை உன்னிடமே வைத்துக்கொள், உன் துணிவை மட்டும் மற்றவர்களிடம் பகிர்ந்துகொள். - பொன்மொழி.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## தமிழ்த் தலைமை செய்த துரோகம்!

ஒருவனிடம் சில பிராணிகள் இருந்தன. ஒரு துறவிக்குப் பிராணிகள் மொழி தெரியும் என்று கேள்விப்பட்டு அவரிடம் சென்று, அனைத்து மொழியையும் கற்றுவந்தான். ஒருதடவை இவன் வளர்த்துவந்த கோழிகளில் ஒன்று, அங்குள்ள குதிரை இறந்துவிடும் என்று நாயிடம் கூறியதைக் கேட்டான். உடனே அக்குதிரையை விற்று நஷ்டம் வராமல் தப்பினான்.

மற்றொரு சமயம் நாய், அந்த வீட்டிலுள்ள அடிமை சாகப்போகிறான் என்று கோழியிடம் சொல்லியது. அவசரமாய் அடிமையை விற்று நஷ்டப்படுவதைத் தவிர்த்தான். சிறிதுநாளில், கோழி நாயிடம் "நம் எசமானன் இறக்கப்போகிறான்" என்றது. இதைக்கேட்ட எசமானன் அலறியடித்துக்கொண்டு துறவியிடம் ஓடினான். துறவியோ நிதானமாக, "இப்பொழுது உன்னை விற்று நஷ்டம் வராதவாறு பார்த்துக்கொள்" என்றாராம்.

தங்களை அறிந்துகொள்ளாதவரை எந்த அறிவும் பயன்படாது என்பதைச் சொல்லும் கதை அது. தமிழ்ச் சமூகமும் காலத்துக்குக் காலம் ஏமாற்றப்பட்டே வந்திருக்கிறது என்பது உண்மைதான். அந்தக் கைங்கரியத்தைப் பெருமளவுக்குச் செய்தவர்கள் வெளியார் யாருமல்ல; தமிழ் சமூகத்திற்குள்ளேயே தான் அவர்கள் இருந்தார்கள்.

முதல் பெரிய ஏமாற்று, உலகத்துச் சமூகங்களை எல்லாம் விடப் புத்திசாலிச்சமூகம் என்றொரு புரட்டை நம்பப் பண்ணி, மற்றவர்களை எல்லாம் அலட்சியம் செய்யவும், இணக்கம் காணமுடியாதவர்களாக எடுத்தெறிந்து விலகவும் பழகிக் கொண்டோம். இந்த விலகலை மேலும் மேலும் தூண்டி நம்மை மற்றவர்களிடமிருந்து அந்நியப்பட வைத்துப் பதவி வேட்டையாடியவர்கள், வெற்று உணர்ச்சிகர ஆவேசங்களால் நம்மை பியர் நுரை போலப் பொங்கவைத்து வாழ்வைச் சீரழித்து முடித்தார்கள்:

எம்பிக் கதிரைகளைப் பிடிப்பதற்காக இனப்பெருமையைப் பேசி முழக்கியும், இதே நாட்டிலுள்ள ஏனைய சமூகங்களை எதிரிகளாகக் கட்டமைத்தும் மக்களிடம் ஆவேசம் விதைத்து வந்தமையால் விளைந்திருக்கும் அறுவடையே இன்றைய நிலைமை! அறிவுகொண்டு யோசிக்க விடாமல் ஆண்டபரம்பரைக் கதைகள் பேசிய முட்டாள்த்தன ஆவேசங்களிலேயே சமூகத்தை உசுப்பேத்திவிட்டது இந்த மேட்டுக்குடித் தலைமை!

அழிவுகளாலும் கல்லறை வழிபாடுகளாலும் தனிஅதிகாரப் பொன்னுலகை நோக்கிப் போவதாய் நம்பி, மற்றெதையும் பார்க்க மறுக்கும் கேட்க மறுக்கும் உசார்மடச் சமூகமாய் அழிவுகளை ஆராதித்துச் சிதைந்தது நம்குடி!

கதிரைகளுக்காக எதையும் பேசலாம், எந்த நாசமறுப்புக்காரர்களுடனும் சேரலாம், எந்தத் திருகுதாளப் பொய்களையும் அரங்கேற்றலாம் என்று முழுச்சுயநலத்தோடு செயற்பட்ட நம் மேட்டுக்குடி அரசியல்வாதிகளும், படிப்பாளிகளும்(?), மக்களைக் காக்கும் சொல்லறியாச் சுயநலமிகளான எழுத்தாளர்களும் ஊடகர்களும் சேர்ந்து சாதித்து முடித்ததே தமிழ்சமூகத்தின் இன்றைய நிலைமை!

இவர்களது அகங்காரமும், இனத்திமிரும், முட்டாள்த்தன ரோசங்களும், பிறர்மீது பொங்கும் வெறுப்பும், அழிவுகள் அவலங்கள் மூலமாய்ப் பெற்றுக்கொள்ளும் அதிகார ருசியும், புத்துலகின் நாகரிக வாழ்வுணர்வுகள் அறங்கள் எதையுமறியாத பழம்பெருமைப் பாமரத்தனமும் சாதாரண மக்களிடத்திலும் ஆழ ஊறித் தேங்கும்படி செய்துவிட்டிருக்கிறார்கள்.

ஏனைய சமூகங்களிடம் இணக்கம் காணமுடியவில்லை, இயைந்து பேச முடியவில்லை, பிற மனங்களின் புரிதலை வெல்லமுடியும் என்று நம்புவதற்கு ஆகவில்லை. முரண்பாடுகளைப் பேசித்தீர்க்கும் பெற்றி கூடவில்லை. வன்முறை என்பதே இருபக்கமும் சீவித்தள்ளுகிற கூரிய கத்தி என்பதை உணர்ந்து நிதானித்து மக்களைச் சரியான வழி நகர்த்தும் விவேகம் வாய்க்கவில்லை.

நம் சமூகத்தை இந்த இடத்திற்குக் கொண்டுவந்து நிறுத்தியிருப்பவர்கள் எவர் என்று புரிகிறதா? - ஆசிரியர்

# அடிப்படை வசதிகள் இல்லாது அவதியுறும் அரச பணியாளர்கள்

(வவுனியா)

மாந்தை கிழக்கு பிரதேசத்தில் உள்ள அரச திணைக்களங்களில் வேறு பிரதேசங்களில் இருந்து பணிபுரிய வருபவர்களுக்கு போதியளவு வசதி வாய்ப்புகள் காணப்படவில்லை என மாந்தை கிழக்கு பிரதேச சபையின் உபதலைவர் சி. செந்தூரன் தெரிவித்துள்ளார்.

மாந்தை கிழக்கு பிரதேசத்தின் நிலைமைகள் தொடர்பில் அவர் மேலும் தொடர்ந்தும் இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

உத்தியோகத்தர்களுக்கான விடுதிகள் இல்லாத நிலை காணப்படுகின்றது.

இதனால் ஏனைய பிரதேசங்களில் இருந்து வரும் உத்தியோகத்தர்கள் தங்குமிடத்திதை பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொளகின்றனர்.

அத்துடன் அவர்கள் தங்கியுள்ள சில இடங்கள் மற்றும் பல அரச திணைக்களங்கள் உட்பட பல தனியார் நிறுவனங்களுக்கு மின்சார வசதி இல்லாமல் காணப்படுகின்றது. இதனால் இப்பகுதி மக்களும் உத்தியோகத்தர்களும் சொல்ல முடியாத துன்பங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

இவ்வாறான நிலையினால் மாந்தை கிழக்கு பிரதேசத்தில் எமது சபை உட்பட அனைத்து திணைக்களங்களில் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது. குறிப்பாக நட்டான்கண்டல் பிரதேச வைத்தியசாலையில் தாதியர் மற்றும் உத்தியோகத்தர்களின் பணியினை அங்கு கடமையாற்றும் வைத்தியரே மேற்கொள்ள வேண்டியுள் ளது.

இதற்கு சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் தீர்ப்பதற்கு முன்வரும் பட்சத்திலேயே உத்தியோகத்தர்களும் மக்களும் தமது தேவைகளை பூரணமாக பெறமுடியும் என்பதுடன் அடிப்படைத்தேவைகளும் பூர்த்தி செய்யப்படும்.

இதேவேளை 5 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் இந்திய வீட்டுத்திட்டம் வழங்கப்பட்டுள்ளபோதிலும் இம் மக்கள் வீடுகளைக் கட்டி முடிப்பதற்கு பெரும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கின்றனர்.

வீட்டுத்திட்டத்திற்கான மணலைப்பெறுவதில் தொடர்ச்சியாக சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதன் காரணமாக குறித்த காலப்பகுதியில் வீட்டுத்திட்டத்தை நிறைவேற்ற முடியாதவர்களாக மக்கள் காணப்படுகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். (160)

# சட்டவிரோத ஆயுதங்கள் திராய்மடுவில் மீட்பு

(கொழும்பு)

மட்டு.திராய்மடு சுவிஸ் கிராமம் எப்.வலய காட்டுப்பகுதியில் வெட்டிய பனைமரத்தின் நடுவில் பாதுகாப்பான கறுப்பு பொலித்தீன் மற்றும் முள்ளுக் கம்பிகளினால் சுற்றி வைக்கப்பட்ட நிலையில் இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

ஜேர்மன் தயாரிப்பிலான புதிய இரண்டு கைக்குண்டுகளும், .ரி-56 ரக 60 தோட்டாவும், 2 மெகசினும் கைப்பற்றப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸ் நிலைய உதவிப் பொலிஸ். பரிசோதகரும், புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரியுமான என்.எம்.றஹீம் தெரிவித்தார்.

சுவிஸ் கிராமம் எப்.வலய காட்டுப்பகுதியில் விறகு வெட்டும் ஒருவர் மட்டக்களப்பு பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்கு வழங்கிய தகவலையடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த மட்டக்களப்பு பொலிஸ் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி என்.எம்.றஹீம் தலைமையிலான பொலிஸார் குறித்த சட்ட விரோத ஆயுதங்களை கைப்பற்றி அதனை மீட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் அனைத்தும் தற்போது மட்டக்களப்பு மாவட்ட தலைமையக பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும், விரைவில் இதனை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவுள்ளதாகவும் தெரிவித்த மட்டக்களப்பு பொலிஸ் புலனாய்வுப் பிரிவு பொறுப்பதிகாரி என்.எம்.றஹீம் சுவிஸ் கிராமம் எப்.வலய காட்டுப்பகுதியில் இருந்த ஒருவர் இந்த சட்ட விரோத ஆயுதங்களை வைத்திருந்திருக்கலாம் எனவும் பொலிஸாரின் பரிசோதனையின் பயத்தால் மறைத்து வைத்திருக்கலாம் எனவும் சந்தேகிப்பதாகவும் மேலும் தெரிவித்தார்.

# அவுஸ்ரேலியா செல்ல முயன்ற நால்வர் விளக்கமறியலில்

(கொழும்பு)

சட்டவிரோதமாக அவுஸ்ரேலியாவிற்கு செல்ல முயற்சித்தபோது திருகோணமலையில் கைதுசெய்யப்பட்டவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். திருகோணமலை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அவுஸ்ரேலியா செல்வதற்கு முயற்சித்த நால்வர் திருகோணமலை கிழக்கு கடற்பரப்பில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டதுடன் அவர்கள் பயணித்த இரண்டு படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தொலைபேசி இணைப்புக்கு விண்ணப்பித்து பலமாதங்களாகியும் பலன் இல்லை

(வவுனியா)

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபைக்குட்பட்ட கிராம மக்கள் தொலைபேசி இணைப்புகளுக்கு விண்ணப்பித்தும் பல மாதங்களாகியும் இது வரை இணைப்புகள் கிடைக்கப் பெறவில்லை என விசனம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மக்கள் கருத்துத் தெரிவிக்கையில், தொலைபேசி இணைப்புகளை பெற்றுக் கொள்வதற்காக இலங்கை ரெலிக்கொம் நிறுவனத்திற்கு விண்ணப்பங்களை முறைப்படி சமர்ப்பித்துள்ளோம். எனினும் பல மாதங்களாகியும் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்படவில்லை.

இது தொடர்பில் ரெலிக்கொம் நிறுவனத்துடன் நாம் தொடர்பு கொண்ட போது தொலைபேசிக் கம்பங்களை நாட்டுவதில் தாம் சிரமங்களை எதிர் கொள்வதாக கூறுகின்றனர். எனினும் தமக்கான தொலைபேசி இணைப்புகளை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் ரெலிக்கொம் நிறுவனத்தின் வவுனியா அலுவலகத்தினர் தெரிவிக்கையில், வவுனியாவில் கிராம மட்டத்தில் இருந்து புதிய தொலைபேசி இணைப்புக்கான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளது.

அதனை நாம் பரிசீலித்து இணைப்பை வழங்க நடவடிக்கை மேற்கொண்டு கம்பங்களை நடும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்தபோது வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபையினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக நாம் இணைப்புகளை மக்களுக்கு வழங்க முடியாது முடக்கப்பட்டுள்ளோம். பிரதேசசபை ஒவ்வொரு தொலைபேசி கம்பத்திற்கும் தமக்கு வருடாந்தம் பணம் செலுத்தவேண்டும் எனத் தெரிவிப்பதுடன் முற்பணமும் செலுத்துமாறு ரெலிக்கொம்மை வலியுறுத்தி வருகின்றனர்.

இது தொடர்பில் தலைமைக்காரியாலயம் பிரதேசசபையுடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடியபோதிலும் சாதகமான பதில் கிடைக்கவில்லை.

இதனால் நாம் எமது சேவையை மக்களுக்கு வழங்க முடியாதுள்ளது எனத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பிரதேசசபையின் தலைவர் க.சிவலிங்கத்திடம் தெரிவிக்கையில், தொலைபேசி இணைப்புகள் இலாபநோக்கம் கருதி வழங்கப்படுவதனால் நாம் எமது சபைக்கு வரி செலுத்துமாறு கோரியுள்ளோம். இது தொடர்பில் எமது சபை ஏகமனதாக முடிவெடுத்து வர்த்தமானியிலும் பிரசுரித்துள்ளது.

இந்தவகையில் ரெலிக்கொம் நிறுவனம் எமது சபைக்குட்பட்ட பகுதிகளில் நடும் ஒவ்வொரு கம்பத்திற்கும் 150 ரூபா முதல் தடவையில் செலுத்த வேண்டும். பின்னர் வருடாந்தம் 120 ரூபா வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார். (160)

**கடந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 4 கட்சிகளும் சேர்ந்து வடக்கில் எடுத்த மொத்த வாக்குகள் ஏறத்தாழ 65,000 ஆகும். மறுபக்கத்தில் அரசாங்க கட்சி (பிரதானமாக ஈ.பி.டி.பி) எடுத்த வாக்குகள் கிட்டத்தட்ட 45,000 ஆகும். அத்துடன் யாழ். மாவட்டத்திலேயே எந்தவொரு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளரும் பெறாத வகையில் ஆகக்கூடிய விருப்பு வாக்குகளை ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா தான் பெற்றார். அத்துடன் புலிகள் காலத்தில் தேர்தல் மோசடியில் ஈடுபட்டு 22 கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் 'தெரிவானது' போலல்லாமல், உண்மையான ஜனநாயக முறையில் தேர்தலும் நடந்தது.**

## வி.சின்னத்தம்பி கட்டுரையிலிருந்து



# வடமாகாணசபை தேர்தலில் தோல்வியை உணரும் கூட்டமைப்பு!

வடமாகாணசபைத் தேர்தல் இவ்வருட செப்ரெம்பரில் நடைபெறுமென அரசாங்கம் அறிவித்துள்ளது. இத்தேர்தலை நடாத்தாமல் நீண்ட காலம் இழுத்தடித்து வந்த அரசாங்க கட்சியும், மாகாணசபைகளால் தமிழ் மக்களுக்கு எவ்வித பிரயோசனமும் இல்லை என தொடர்ந்து பிரசாரம் செய்து வந்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும்தான், இந்த தேர்தலில் போட்டியிடும் இரண்டு பிரதான அணிகளாக இருக்கப் போகின்றன. எனவே தேர்தலில் இவர்களில் யார் வென்றாலும், தமிழ் மக்களுக்கு என்ன பிரயோசனம் என பொதுமக்களில் சிலர் எண்ணக்கூடும்.

பொதுமக்கள் நினைப்பதில் சில உண்மைகள் இருந்தாலும், வழமையாக தமிழ் தரப்பினர் அடம் பிடிக்கும் "கட்டினால் பட்டு வேட்டிதான், இல்லாவிட்டால் நிர்வாணமாகத்தான் இருப்பேன்" என கற்பனையில் ஆகாயத்தில் பறக்காமல்,கிடைப்பதை பெற்றுக்கொண்டு, இன்னும் கிடைக்க வேண்டியவற்றுக்காக உழைப்பதுதான் புத்திசாலித்தனம்.

அரசாங்கமும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் வடக்கு மாகாண சபை செயற்படுவதில் அக்கறையற்று இருந்தாலும், அரசாங்கத்தைப் பொறுத்தவரை வடக்கு மாகாணசபையை இயங்க வைப்பதில் சில தவிர்க்க முடியாத தேவைகள் உள்ளன. எனவே அந்த நிலைமையை அங்குள்ள மக்கள் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வது அவசியம்.

முதலாவதாக, அரசாங்கத்தைப் பொறுத்தவரை வடக்கு மாகாண சபைக்கு தேர்தலை நடாத்தி அதை இயங்க வைப்பதின் மூலம், யுத்தம் முடிவுற்ற போதிலும் தமது பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்ற வடக்கு தமிழ் மக்களின் ஏக்கத்துக்கு இது ஒரு வடிகாலாக அமையும். அதே நேரத்தில் சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களுக்கும் ஒரு பதிலாக அமையும்.

இரண்டாவதாக, வடக்கில் தெரிவு செய்யப்பட்ட ஒரு நிர்வாகத்தை ஏற்படுத்துவதன் மூலமும், பொருளாதார அபிவிருத்தியை துரிதப்படுத்துவதன் மூலமும், தமிழ் மக்கள் மத்தியில் அரசாங்கத்தின் செல்வாக்கை அதிகரிக்கவும், பிரிவினைவாத, பிற்போக்குவாத, ஏகாதிபத்திய சார்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தனிமைப்படுத்தவும் ஒரு வாய்ப்பு உருவாகும். இப்படியான ஒரு நிலை அரசாங்கத்தை பொறுத்தவரை எதிர்கால நாடாளுமன்ற, ஜனாதிபதி தேர்தல்களுக்கு அவசியமாகும்.

எனவே, வடக்கு மாகாணசபையை அரசாங்கம் விரும்பாவிட்டாலும், தத்துப் பிள்ளையாகத் தன்னும் வளர்க்க வேண்டிய ஒரு கட்டாயத்தில் இருக்கிறது.

ஆனால் தவிர்க்க முடியாமல் வட மாகாணசபை உருவானால், அதன் நிர்வாகத்தை கைப்பற்றி, அதன் செயற்பாடுகளை முடக்கி வைப்பது தான், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இன்றைய உபாயமாகும். ஏனெனில் மாகாணசபை தேர்தல் நடந்து, அது சீராக செயல்பட்டு, மக்களுக்கு அதனால் ஏதாவது பிரயோசனங்கள் ஏற்பட்டால், அது அரசாங்கத்துக்கு ஒரு வெற்றியாக அமைந்து விடும் என, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அஞ்சுகிறது.

கூட்டமைப்பு அஞ்சுவது போல நடக்குமானால், மாகாணசபைகள் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வல்ல என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாதம் அடிபட்டுப் போய்விடும். அதுமாத்திரமல்லாமல், அதனுடன் சேர்த்து "தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு தனித் தமிழீழம்தான்" என்ற கூட்டமைப்பினதும், புலம்பெயர் புலிகளினதும் வாதமும் அடிபட்டுப் போய்விடும்.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினதும், புலம்பெயர் புலிகளினதும் தற்போதைய வியூகம், வடக்கு மாகாணசபைத் தேர்தலில் என்ன பொய் புரட்டுகளைச் சொல்லி என்றாலும் வெற்றி பெறுவதும், அதன் பின்னர் அந்த மாகாணசபையை செயல்படாமல் செய்வதும்தான். அதாவது மக்கள் செல்வாக்கு தமக்கு இருக்கிறது என்று காட்டுவதும், அதேநேரத்தில் அம்மாகாணசபையின் செயல்பாடுகளுக்கு அரசாங்கம் இடையூறு செய்கிறது என பொய்ப்பிரசாரம் செய்வதும்தான்.

அதற்காகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று சிறு சிறு பிரச்சினைகளையும் ஊதிப் பெருப்பித்து, போராட்டம் என்ற பெயரில் இப்பொழுதே பல நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. அதன் மூலம் மக்களின் கவனத்தை திசை திருப்பி, அவர்களை எப்பொழுதும் ஒரு கொதி நிலையில் வைத்திருந்து, அவர்களின் வாக்குகளை கைப்பற்றி, மாகாண-சபைத் தேர்தலில் வெற்றியீட்டுவதற்கு வியூகம் வகுத்து வருகின்றனர்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் இதற்கு ஓர் உதாரணம். கடந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 4 கட்சிகளும் சேர்ந்து வடக்கில் எடுத்த மொத்த வாக்குகள் ஏறத்தாழ 65,000 ஆகும். மறுபக்கத்தில் அரசாங்கக்கட்சி(பிரதானமாக ஈ.பி.டி.பி) எடுத்த வாக்குகள் கிட்டத்தட்ட 45,000 ஆகும். அத்துடன் யாழ். மாவட்டத்திலேயே எந்தவொரு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளரும் பெறாத வகையில் ஆகக்கூடிய விருப்பு வாக்குகளை ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா தான் பெற்றார். அத்துடன் புலிகள் காலத்தில் தேர்தல் மோசடியில் ஈடுபட்டு 22 கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் "தெரிவா-னது" போலல்லாமல், உண்மையான ஜனநாயக முறையில் தேர்தலும் நடந்தது.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது, கூட்டமைப்பினர் திட்டமிட்டு ஒரு பொய்ப்பிரசாரத்தை கட்டவிழ்த்து விட்டே இந்தளவு ஆசனங்களைப் பெற்றனர். அதாவது சாவகச்சேரியில் கொலையுண்ட ஒரு மாணவனின் மரணத்துடன் ஈ.பி.டி.பி கட்சியைத் தொடர்புபடுத்தி பொய்ப்பிரசாரம் செய்தே வெற்றி பெற்றனர். அவ்வாறு அவர்கள் திட்டமிட்ட மோசடி பிரசாரத்தில் இறங்காமல் இருந்திருந்தால், அரசாங்க கட்சி மேலும் அதிக வாக்குகள் பெற்று, மேலும் ஓர் ஆசனம் கூடுதலாக 4 ஆசனங்களை வென்றிருப்பதுடன்,மேலும் ஒரு போனஸ் ஆசனத்துடன் சேர்த்து 5 ஆசனங்களை வடக்கில் பெற்றிருக்கும். அதன் மூலம் கூட்டமைப்பு பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கும்.

இந்த உண்மை கூட்டமைப்பினருக்கும் தெரியும். எனவே இம்முறை நடைபெறவுள்ள மாகாணசபை தேர்தலின் போதும் ஏதாவது ரகளையை ஆரம்பிக்க பார்ப்பார்கள். இராணுவம் - பொலிஸ் என்பனவற்றுடன் வலிந்து பிரச்சினைகளை உருவாக்குவார்கள். ஊடகவியலாளர்களை தாங்களே தாக்கிவிட்டு, ஊடக சுதந்திரம் பற்றி உரக்கக் கதைப்பார்கள். வலி. வடக்கு உயர் பாதுகாப்பு காணிப் பிரச்சினையை முழுத் தமிழ் மக்களினதும் பிரச்சினையாகக் காட்டுவார்கள். யாழ்ப்பாணத்தில் நம்மவர்களாலேயே ஏற்பட்டு வரும் கலாசார சீரழிவுகளை படையினர் தலையில் போடு வார்கள். தமது வேட்பாளர்களின் வீடுகளுக்குத் தாமே கல்லெறிந்துவிட்டு, "உங்களுக்குத் தெரியும்தானே இதை யார் செய்தது என்று?" கதை விடுவார்கள். இப்படி ஒருநூறு பிரச்சினைகளை கிளப்புவார்கள்.

கூட்டமைப்பினரது இந்த மோசடி அரசியலுக்கு வசதியாக, அவர்களிடம் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் நடத்தும் மஞ்சள் பத்திரிகை ஒன்றும் கைவசம் இருக்கிறது. போதாக் குறைக்கு கொழும்பிலிருந்து செயல்படும் ஐக்கிய தேசியக் கட்சி முதலாளிகளின் ஊடகங்களும், புலம்பெயர் புலி ஊடகங்களும் இருக்கின்றன.

ஆனால் என்னதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பலவிதமான அஸ்திரங்கள் வைத்திருந்தாலும், முற்போக்கு - ஜனநாயக சக்திகள் சரியான முறையில் மக்களை அணுகினால், வட மாகாணசபை-யை கைப்பற்றுவது ஒன்றும் சிரமம் அல்ல என்பதை, கடந்த நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் வாக்களித்த விதம் எடுத்துக் காட்டுகிறது.

குறைந்த பட்சம் வீட்டுக்கு ஒருவரை வெளிநாடுகளில் வைத்திருக்கும் வடக்கிலுள்ள குடும்பங்களுக்கு மாகாணசபையால்தான் வாழ்வு சிறக்க வேண்டுமென்ற அவசரம் இல்லை என்றாலும், வேறு வருவாய்கள் ஏதுமின்றி தமது உழைப்பிலேயே வாழும் அந்த மண்ணின் உண்மையான சொந்தக் காரர்களுக்குத்தான் மாகாணசபையும் தேவை, அதன் மூலம் கிடைக்கும் நன்மைகளும் தேவை. எனவே அப்படியான அடிமட்ட ஏழை எளிய மக்களை அணுகுவதன் மூலமும், முற்போக்கு - ஜனநாயக சக்திகள் தமது சிறு சிறு வேறுபாடுகளை மறந்து ஓரணியில் திரள்வதன் மூலமும், நிச்சயமாக வட மாகாண-சபை தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தோற்கடித்து வெற்றிவாகை சூட முடியும். அதன் மூலம் மாகாணசபையினால் கிடைக்கும் வரப்பிரசாதங்களை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கவும் முடியும். ●

# அரச கரும மொழிக்கொள்கை நிபுணர்களின் ஆலோசனை பெற ஏற்பாடு

## விசேட செயற்திட்டம் ஆரம்பம்




அரச கரும மொழிக் கொள்கைகள் தொடர்பான அடுத்த கட்ட நடவடிக்கைகளின் போது நிபுணர்களின் ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அரச கரும மொழிகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் விசேட செயற்றிட்டமொன்று நாளை மறுதினம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ரணவக்க தெரிவித்துள்ளார்.

அரச மொழி ஆணைக்குழுவின் அனைத்து ஆணையாளர்கள், நிபுணர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் இதில் கலந்துகொள்ளவுள்ளதாக அவர் கூறினார். விசேடமாக, கனடாவின் அரச மொழிகள் ஆணையாளர் இந்தச் செயற்திட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளதாக அரச கரும மொழிகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. ஆணைக்குழுவின் செயற்பாடுகளை வலுப்படுத்தல், கொளகைகளில் காணப்படும் பிரச்சனைகளை இனங்கண்டு அவற்றுக்கு தீர்வுகளை வழங்குதல் மற்றும் அதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான கருத்துக்களும், ஆலோசனைகளும் இதன்போது பரிமாறிக் கொள்ளப்படவுள்ளன. அத்துடன், ஐந்தாண்டுகளுக்கான எதிர்காலத் திட்டம் தொடர்பிலும் தீர்மானங்கள் எட்டப்படவுள்ளதாக அரச கரும மொழிகள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# நுளம்புக்குடம்பிகளுடன் வெப்பமானிகள் விசாரணைகள் உடனடியாக ஆரம்பம்



நுளம்புக் குடம்பிகளுடனான வெப்பமானிகள் இரண்டு, பாதுக்க பகுதியிலுள்ள வைத்தியர் ஒருவருக்கு கிடைத்துள்ளன.

குறித்த வெப்பமானிகளில் பாதரசம் காணப்படும் பகுதியில் நுளம்புக் குடம்பிகள் இருப்பதைக் காணக்கூடியதாக இருந்ததாக குறித்த வைத்தியர் குறிப்பிட்டார். பாதுக்க கிராமவாசிகளால் இந்த வெப்பமானிகள் வைத்தியரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த விடயம் தொடர்பில், ஔடதங்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் அதிகார சபையின் பணிப்பாளர் டாக்டர் ஹேமானந்த பெனரகம தெரிவிக்கையில், விசாரணைகளை உடனடியாக ஆரம்பிப்பதாக குறிப்பிட்டார். தனியார் மருந்தகங்களில் இருந்து வெப்பமானிகளைக் கொள்வனவு செய்யும் போது அவதானத்துடன் இருக்குமாறு டாக்டர் ஹேமானந்த பெனரகம அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

# பத்து இலட்சம் துண்டுப்பிரசுரம்

(கொழும்பு)

பிரிவினைவாதத்துடன் கூடிய வடக்குத் தேர்தல் வேண்டாம் என்ற தொனிப் பொருளில் நாட்டு மக்களைத் தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுப்பதற்கு தேசிய சுதந்திர முன்னணி தீர்மானித்துள்ளது. இதற்காக பத்து இலட்சம் துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்கவுள்ளதாக அக் கட்சி தெரிவித்துள்ளது.

இந்த வேலைத்திட்டம் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர், அமைச்சர் விமல் வீரவன்சவின் தலைமையில் நடைபெறவுள்ளது. இதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்று மாலை 3.00 மணியளவில் கொழும்பு, புறக்கோட்டை இரயில் நிலையத்திற்கு முன்னதாக இடம்பெற்றது.

# ஹலால் இறுதி அறிக்கை அமைச்சரவைக்கு

(கொழும்பு)

ஹலால் சான்றிதழ் விநியோகம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றக் குழு, விரைவில் இறுதி அறிக்கையொன்றை அமைச்சரவையில் சமர்ப்பிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் குழுவிற்கு முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க தலைமை தாங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமைச்சரவையில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக உறுப்பினர்கள் இது குறித்து கலந்தாலோசிக்க உள்ளதாக குழுவின் உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசி தெரிவித்துள்ளார். எவ்வாறெனினும், அறிக்கையின் உள்ளடக்கங்கள் பற்றி தெரியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இறுதியாக கூடி ஆராய்ந்து இறுதி அறிக்கை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# மாணவர் எண்ணிக்கையை வரையறுக்க நடவடிக்கை

அரசாங்கப் பாடசாலைகளில் முதலாம் ஆண்டு முதல் 12 ஆம் ஆண்டு வரையிலான வகுப்புகளில் மாணவர் எண்ணிக்கையை 35 ஆக மட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க உயர் நீதிமன்றில் வழங்கிய தீர்ப்பொன்றின்படி வகுப்பொன்றின் மாணவர் தொகையை 35 ஆக 2016 ஆம் ஆண்டுக்குள் மட்டுப்படுத்தும்படி தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதன்படி 2014 ஆம் ஆண்டு முதல் வகுப்பொன்றில் இருக்க வேண்டிய மாணவர் எண்ணிக்கையை 45 முதல் படிப்படியாக 40 ஆக குறைத்து 2016 ஆம் ஆண்டு 35 ஆக மட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் அமைச்சு தெரிவித்தது.

# விற்பனைக்குத் தயாராகும் வெள்ளைநிற பரசிட்டமோல்

## – பல்வேறு வர்ணங்களுக்குத் தடை

வட்ட வடிவான வெள்ளை நிற பரசிட்டமோல் மருந்து வில்லையை மாத்திரம் சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பல்வேறு நிறங்களிலும், பல்வேறு வடிவங்களிலும் பரசிட்டமோல் மருந்து வில்லை சந்தைக்கு விநியோகிக்கப்படுவதால் பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளதாக தேசிய ஔடத அதிகார சபைத் தலைவர் டாக்டர் ஹேமானந்த பெனரகம தெரிவித்தார்.

சில போலி வைத்தியர்கள் பல்வேறு நிறங்களிலும், பல வடிவங்களிலுமான பரசிட்டமோல் மருந்து வில்லைகளை நோயாளர்களுக்கு வழங்குவதன் ஊடாக உயிர் ஆபத்துக்கள் ஏற்படும் நிலை தோன்றியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் அதிகளவில் விற்பனை செய்யப்படுகின்ற மருந்து வகையில் மிக முக்கிய இடத்தினை பரசிட்டமோல் வகிப்பதாகவும், அது குறிப்பாக சிறுவர்களுக்கு வழங்கப்படுவதாகவும், அந்த மருந்து வகையை அதிகளவில் வழங்கும் பட்சத்தில் உயிர் ஆபத்துக்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கனடா மார்க்கம் நகரில் "வன்னி வீதி" திறந்துவைப்பு




கனடாவில் மார்க்கம் நகரில் உள்ள ஒரு தெருவுக்கு 'வன்னி தெரு' என்னும் தமிழ்ப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. இவ் வன்னி வீதித்திறப்புவிழா, மார்க்கம் நகர சபை மேயராலும், 7ஆம் வட்டார உறுப்பினர் லோகன் கணபதி அவர்களின் முயற்சியிலும், ஏனைய உறுப்பினர்களாலும் நேற்று முன்தினம் காலை 10:00 மணியளவில் 14ஆவது Avenue வில் Middlefied Road இற்கும் Markham Road இற்கும் இடையில் அமைந்துள்ள வன்னி வீதி திறந்துவைக்கப்பட்டது.

இவ் வீதியானது புதிதாக நிர்மானிக்கப்பட இருக்கும் சமூக நிலையத்திற்கு செல்லும் பாதையாக அமையும் என்பது குறிப்பிடத்தக்கது. 'வன்னி வீதி' என்ற பெயரினைச் சூட்டும் நிகழ்வு டெனிசன் வீதியிலுள்ள 'அமடேல்' சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. வைபவத்தில் மார்க்கம் மேயர் பிராங்க் ஸ்காபிற்றி உரையாற்றுகையில்,

கனடாவில் வன்னி என்னும் தமிழ்ப் பெயரில் திறக்கப்படும் முதல் வீதி இதுவாகும். 'கனடாவுக்குப் புலம் பெயர்ந்து வந்த ஏனைய நாட்டு மக்களைப் போலவே இலங்கையைச் சேர்ந்த தமிழ் மக்களாகிய நீங்களும் உங்கள் நாட்டை விட்டுப் பிரிய மனமில்லாமலே கனடாவுக்குப் புலம் பெயர்ந்து வந்தீர்கள்.

கனடாவுக்கு வரும் மக்களை பாகுபாடு எதுவுமே இன்றி வரவேற்று, மதிப்பளிப்பதில் எமது மார்க்கம் நகர சபை முன் நிற்கின்றது.

உங்கள் தாயகத்தை நினைவுறுத்தும் வகையில் 14வது அவெனியூவிலுள்ள வீதிக்கு வன்னி வீதி என்ற பெயரினைச் சூட்டுவதில் நாம் பெருமை அடைகின்றோம். நீங்கள் தினமும் 14ஆவது அவெனியூவின் ஊடாகச் செல்லும் போது வன்னி வீதியை பார்க்க முடியும் என்றார்.

ஆரம்பத்தில் வரவேற்புரை நிகழ்த்திய லோகன் கணபதி உரையாற்றிய போது, 'மார்க்கம் மாநகர் கனடாவில் மாத்திரமல்ல உலகிலேயே, சிறந்த மாநகராகத் திகழ்கின்றது. இங்கு அதிகளவு தமிழ் மக்களும்,தென் ஆசிய மக்களும் வாழ்ந்து வருகின்றனர் என்றார்.

# எதிர்மனுத் தாக்கல் தயாராகிறது ஜே.வி.பி.



முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக, நீதியரசர் பதவியில் இருந்து விலக்கப்பட்டமை தொடர்பில், உயர்நீதிமன்றத்தில் கடந்த 30ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட விசேட மேன்முறையீட்டு மனுவிற்கு எதிரான மனுவென்றினை தாக்கல் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஜே.வி.பி.தெரிவித்துள்ளது.

ஜே.வி.பி.யின் மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி சுனில் வட்டகல இதனைத் தெரிவித்தார். இந்த நிலையில், மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# மதவாச்சி - மடு இரயில் சேவை 27,வருடங்களின் பின் இன்று ஆரம்பம்

மதவாச்சியிலிருந்து மடுவரையிலான இரயில் சேவைகள் இன்று முதல் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக. இரயில்வேத்திணைக்களம் தெரிவித்துள்ளது. 43 கிலோ மீற்றர்களைக் கொண்ட குறித்த இரயில்ப் பாதை இந்திய அரசிடமிருந்து கடனாகப் பெற்ற நிதி மூலம் புனரமைக்கப்பட்டுள்ளது.

இதன்படி இன்று மதவாச்சியி லிருந்து மடுவரையிலான இரயில் சேவையும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இச்சேவைக்குப் பொறுப்பான அதிகாரி பீ.ஏ. ஆரியரத்ன தெரிவித்தார். காலை, பகல் மற்றும் பிற்பகல் ஆகிய மூன்று வேளைகளில் இந்த இரயில் சேவை இடம்பெறவுள்ளது. மதவாச்சி - மடு பிரதேச இரயில் சேவை இறுதியாக 1986ஆம் ஆண்டு இடம்பெற்றதாக இரயில் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். தலைமன்னார் வரையிலான இரயில் பாதை புனரமைப்புப்பணிகளை இவ்வருடம் டிசம்பர் மாதம் நிறைவுக்கு கொண்டுவர எண்ணியுள்ளதாக பீ.ஏ. ஆரியரத்ன குறிப்பிட்டார்.

# பரவலாக்கப்பட்ட இடமாற்றத்தால் மிகவும் அவதியுறும் ஆசிரியர்கள்

## - இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கண்டனம்

ஆசிரிய பரவலாக்கம் என்ற தோரணையில் எந்தவித முன் அறிவித்தலுமின்றி வன்னிப் பிரதேசங்களில் கடமையாற்ற ஒன்பது மாத கைக்குழந்தைகளுக்கும் மாகாண கல்வித் திணைக்களத்தினால் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அச்சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஸ்தாபன விதிக்கோவைகளுக்கு முரணாக ஆளுநரின் ஆணைப்படியென்று கடிதத்தில் குறிப்பிட்டு அடாத்தான முறையில் இடமாற்ற சபையினைக் கூட்டாது மாகாணக் கல்வித் திணைக்களம் ஆசிரியர்களுக்கு அவசரமாக இடமாற்றக் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது. இதுபற்றி மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் கேட்டால் ஆளுநரே இதனைச் செய்துள்ளதாகவும், இதற்கும் தமக்கும் பொறுப்பில்லை என்றும் கைவிரித்துள்ளார். தேசிய இடமாற்றக் கொள்கைகளைப் புறந்தள்ளி, ஸ்தாபன விதிக் கோவைகளை முற்றாக மீறி இந்த இடமாற்றங்களும் செயற்பாடுகளும் மிகமோசமாக முன்னெடுக்கப்படுகின்றன.

அதிபர், ஆசிரியர்களுக்கு வழங்கப்படாத நிலுவைகள், சீர் செய்யப்படாத கோவைகள், வழங்கப்படாத பதவியுயர்வுகள் குறித்து பலமுறை ஆதாரங்களுடன் எடுத்துக்கூறியும் அவற்றைச் சீர்ப்படுத்த முடியாத மாகாணக் கல்வித்திணைக்களம் அதிபர், ஆசிரியர்களை அரசியல் அதிகாரங்களுக்குப் பயந்து அடாவடித்தனமாக பழி தீர்க்க முனைவதனை இனி மேலும் பொறுத்துக்கொள்ள முடியாது.

பட்டதாரி ஆசிரியர்கள், ஆயிரம் பாடசாலைத்திட்ட ஆசிரியர்கள், கல்வியியற் கல்லூரிகளை முடித்த இரண்டு தொகுதி ஆசிரியர்கள் என பலநூறு ஆசிரியர்கள் வன்னிப் பிரதேச பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்ட நிலையில், யாழ. மாவட்டத்தில் உள்ள இளம் ஆசிரியர்களை அவர்களின் வருத்தம், குழந்தைப்பேறு, இடப்பெயர்வு என்பவற்றைக் கருத்தில் கொள்ளாமல் வலயக் கல்விப்பணிப்பாளருக்கோ, அன்றி அதிபர்களுக்கோ, ஆசிரிய சங்கங்களுக்கோ தெரியாமல் குறுகியகால எல்லைக்குள் இடமாற்றக்கடிதங்களை பாடசாலைகளுக்கு அனுப்பி உடனடியாக இடமாற்றம் வழங்கப்பட்ட பாடசாலைகளில் கடமையேற்க வேண்டுமென்று நிர்ப்பந்திப்பது மனிதஉரிமை மிறல் மட்டுமல்ல, ஜனநாயக சோசலிச குடியரசின் வரையறைகளை மிறிய அடக்குமுறையாகும்.

இதனை வன்மையாகக் கண்டிப்பதோடு கடமையைப் பொறுப்பேற்க முடியாத ஆசிரியர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறையிட்டு; நீதிமன்றத்திற்கும் செல்லமுடியுமெனத் தெரிவிக்கின்றோம்.

இந்த முறையற்ற இடமாற்றங்கள் இரத்துச் செய்யப்படாத விடத்து பல கோரிக்கைகளை முன்வைத்து வடமாகாணம் தழுவிய தொடர் சுகவீனப் போராட்டத்திற்கு அனைத்து அதிபர்களையும், ஆசிரியர்களையும் தயாராகுமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனக் குறிப்படப்பட்டுள்ளது.

## வளலாய் கிராம வீதிகளுக்கு மின்விளக்குகள் இல்லை

வளலாய் கிராமத்தில் உள்ள வீதிகளுக்கு மின்விளக்குகள் எவையும் பொருத்தப்படாத நிலையில் வீதிகள் இருள் சூழ்ந்து காணப்படுவதாக அப்பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் தாம் இரவில் வீதிகளில் பயணம் செய்யமுடியாத நிலை உள்ளதாகவும், அப்பகுதிகளுக்கு வரும் மின்சாரம் குறைந்தளவான நிலையில் இருப்பதால் மின் உபகரணங்களைத் தாம் உரியமுறையில் பயன்படுத்த முடியாத நிலை இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே, உரிய தரப்பினர் வீதிகளுக்கு மின் விளக்குகளைப் பொருத்தி மக்களின் போக்குவரத்துக்கு வழிசெய்யுமாறு மக்கள் கேட்டுள்ளனர். (85)

## வைத்தியசாலைக்குள் நாய்கள்; கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

(கொடிகாமம்)

சாவகச்சேரி வைத்தியசாலையில் தினமும் ஏராளமான நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்காக வருகின்ற நிலையில் வைத்தியசாலை வளாகத்தினுள் கட்டாக்காலி நாய்கள் கூட்டம் கூட்டமாக உலாவருவதால் மக்கள் அச்சத்துடன் சிகிச்சையைப் பெறவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

பகல் வேளைகளில் வைத்தியசாலைக்கு வெளியே உலாவுவதாகவும், இரவு வேளையில் வைத்தியசாலை கட்டடத்தினுள்ளே உலாவிவருவதனைக் காணமுடிகிறது.

வைத்தியசாலை வளவினுள் நாய்கள் உலாவருவதால் தொற்றுநோய்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், அதனைவிட வைத்தியசாலையில் சிகிச்சை பெற வரும் நோயாளர்கள் பார்வையாளர்கள் முதலானோர் நாய்களைக் கண்டு பயந்து செல்வதனைக் காணமுடிகிறது.

எனவே வைத்தியசாலை நிர்வாகத்தினர் உடனடியாக நடவடிக்கை எடுத்து வைத்தியசாலை வளாகத்தைவிட்டு நாய்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்களும், நோயாளர்களும் கோரிக்கைவிடுக்கின்றனர். (130)

## பொறுப்பேற்பு

(வடமராட்சி)

சாவகச்சேரியில் பிரதேச செயலகப்பிரிவின் கரம்பைக் குறிச்சி (ஜே/342) கிராம சேவை அலுவலராக இருந்து இளைப்பாறிய வல்லிபுரம் வேல்முருகுவுக்கு பொது நிர்வாக அமைச்சு, மீள் நியமனம வழங்கியுள்ளது.

அவர் மீண்டும் கரம்பைக் குறிச்சிக் கிராம சேவை அலுவலராகப் பொறுப்பேற்றுள்ளார். (01)

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மத்தி செல்வ பூமி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கு விசேட பூசைகள் இடம்பெற்று கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 28 ஆம் திகதி எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வும், தொடர்ந்து மண்டலாபிஷேகமும் இடம் பெற்று யூன் 9 ஆம் திகதி நிறைவுபெறவுள்ளது. (43)



யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் நடைபெற்ற அல்அஸ்ஹார் முன்பள்ளியின் விளையாட்டுப்போட்டி நிகழ்வின் போது யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் க.பொ.த. உயர்தரத்தில் சித்திபெற்ற மாணவிக்கு சம்மேளனத் தலைவர் சான்றிதழ் வழங்குவதையும், அருகில் யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் நிற்பதையும் காணலாம். (105)

# இருபக்கமும் வாகனங்கள் போக்குவரத்துக்கு இடையூறு

மந்திகை ஆதார வைத்தியசாலைக்குச் செல்லும் வீதியில் ஒருபக்கம் வாகனங்கள் நிறுத்தப்பட்ட நிலையில் மறுபக்கம் வர்த்தக நிலைய வாசலில் நிரம்பி வழியும் துவிச்சக்கரவண்டிகளால் வீதியால் செல்லும் பிரயாணிகள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதைக் காணமுடிகின்றது.

இவ்வீதியால் வரும் வாகன்ங்கள் ஒதுங்கிக்கொள்ளமுடியாத சூழல் ஏற்படும் நிலையில் விபத்துக்கள் ஏற்படக்கூடிய சூழல் பெருமளவில் காணப்படுகிறது.

எனவே உரியவர்கள் கவனமெடுத்து பயணிகள் மற்றும் நோயாளர் நலன் கருதி இப்படியான சூழலை மாற்றி மாற்றுவழி ஒன்றை ஏற்படுத்தி ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென பொதுமக்களும், பிரயாணிகளும் எதிர்பார்க்கின்றனர். (150)

## முரசின் இன்றைய பலன்

(14.05.2013 - செவ்வாய்க்கிழமை)

விஜய வருஷம் சித்திரை மாதம் 31 ஆம் திகதி.
நட்சத்திரம் திருவாதிரை மாலை 6.16 வரை. திதி சதுர்த்தசி பிற்பகல் 1.34 வரை. இராகுகாலம் 02.53 - 04.23 வரை.
சுபநேரம் 10.23 - 11.53 வரை. மரணயோகம்.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மனதில் அதிக நம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். முயற்சிக்கு பலன் வந்து சேரும். தொழில், செழிக்க அனுகூலம். பயன்படுத்தி உபரி வரவு பெறுவீர்கள். விரும்பிய பொருள் வாங்குவீர்கள். இனிய பயணம். அரசிடமிருந்து உதவி. |
| ரிஷபம் | மாறுபட்ட நிகழ்வுகளினால், மனதில் குழப்பம் அடைவீர்கள். அவசியம் முடிக்க வேண்டிய வேலைகளில் கவனம் கொள்வது நல்லது. தொழில் அலைச்சல் இருக்கும். பணவரவு தாமதம். குடும்பத்தினரிடம் வீம்பு காட்ட வேண்டாம். |
| மிதுனம் | அன்புக்குரியவரின் மாறுபட்ட நடத்தை வருத்தம் தரும். சொந்த வேலைகளில் மூழ்கி மறப்பீர்கள். கடுமையாக உழைப்பீர்கள். தொழில், நிலைமை சீராகும். தாராள பணவரவு. பிறர் பார்வைக்காக அதிக செலவு செய்ய வேண்டாம். |
| கடகம் | வேலையில் அதிக ஆர்வம். குடும்பத்தினர் உதவிகரமாக செயல்படுவர். தொழில் வளர்ச்சிப் பணி, இனிது நிறைவேறும். பணவரவும், நன்மையும் கூடும். உத்தியோகத்தர்களுக்கு பாராட்டு, வெகுமதி கிடைக்கும். இசை இரசித்து ஒய்வு. |
| சிம்மம் | செயல்களில் மதிநுட்பம் நிறைந்திருக்கும். உழைப்பிற்கான பலன், அதிகமாகும். தொழில், செழித்து சமூக அந்தஸ்து கூடும். பணவரவு திருப்திகரம். வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள். பிள்ளைகள் பெருமைப் படுத்துவர். |
| கன்னி | செய்த நன்மைக்கு பலன் தேடிவரும். உண்மை, நேர்மையில் அதிக நம்பிக்கை வைப்பீர்கள். தொழில், இலக்கு நிறைவேறும். உபரி வரவு. சமூக அந்தஸ்து உயரும். இல்லறத்துணை விரும்பியது செய்வீர்கள். மனதில் அமைதி. |
| துலாம் | போட்டியாளர்கள் உங்களைக் குறை சொல்வர். சாந்த குணத்துடன் விலகுவீர்கள். தொழில் வேலைச்சுமை கூடும். தவிர்க்க இயலாத செலவு வரும். கடனுக்கு கிடைக்கிறதென்று, பயன் தராப் பொருள் வாங்க வேண்டாம். |
| விருச்சிகம் | உங்கள் கௌரவத்திற்கு சிறு சோதனை வரலாம். பொறுமையுடன் நடந்து வெல்க. தொழில், அதிக உழைப்பு அவசியம். மிதமான பணவரவு. போக்குவரத்தில் கவனம். தாய்வழி உறவிடமிருந்து ஆதரவு. பயம் நீங்க பக்தியில் மனம். |
| தனுசு | உங்கள் துன்பத்தை பிறரிடம் காட்ட வேண்டாம். தனி முயற்சிக்கு நன்மை வந்து சேரும். தொழிலில், சிறு மாற்றம் நடந்தேறும். வரவை விட செலவு கூடும். வெளியூர் பயணத்திற்கு வாய்ப்பு. எதிர்பார்த்துச் சென்றது ஏமாற்றமாகலாம். |
| மகரம் | தகுதி, திறமையை வளர்த்து புகழுக்குரியவராவீர்கள். முடியாத வேலை, உங்கள் திறமையான உழைப்பால் முடியும். தொழில், வியத்தகு வளர்ச்சி. உபரி வரவினால், மகிழ்ச்சி அதிகரிக்கும். புத்திரர் விரும்பியது வாங்கித் தருவீர்கள். |
| கும்பம் | உங்களுக்கு வாக்குறுதி தந்தவர் நிறைவேற்ற மறுக்கலாம். புதிய முயற்சிகள் இன்று வேண்டாம். தொழில் நிலை, சுமார். வரவை விட செலவு கூடும். உடல் நலத்திற்கு உணவில் கவனம். மற்றியால் சிறு சச்சரவு வந்து நீங்கும். |
| மீனம் | முன்னர் தவறு விட்ட செயலை, சரியாக முடிப்பீர்கள். குடும்பத்தினர், அன்பும் அனுசரணையுமாக இருப்பர். தொழில், போட்டி குறையும். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும். இல்லறத்துணை அன்பில் மகிழ்வீர்கள். இறைகருமத்தில் ஈடுபாடு. |

# சமநிலையில் ருவென்ரி – 20



(புலவாயோ)

சிம்பாப்வே அணிக்கு எதிரான இரண்டாவது ருவென்ரி–20 போட்டியில், பங்களாதேஷ் அணி 34 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. இதன் மூலம் இரண்டு போட்டிகளைக் கொண்ட ருவென்ரி–20 தொடர் சமநிலையானது.

சிம்பாப்வே சென்ற பங்களாதேஷ் அணி, இரண்டு போட்டிகள் கொண்ட ருவென்ரி–20 தொடரில் பங்கேற்றது. முதல் போட்டியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே 1–0 என முன்னிலை வகித்தது. இரண்டாவது போட்டி புலவாயோ நகரில் நேற்று முன்தினம் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பாடத்தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய பங்களாதேஷ் அணி தமிம் இக்பால், ஷகிப் அல் ஹசன் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் பங்களாதேஷ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தமிம் இக்பால் 43, ஹகிப் அல் ஹசன் 40, நசீர் உசைன் 27, முஷ்பிகுர் ரஹீம் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் உஸ்சயா இரண்டு விக்கெட்டை வீழ்த்தினார்.

பதிலுக்கு 169 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சிம்பாப்வே அணி ஷகிப் அல் ஹசனின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியா–மல் திணறியது. இருப்பினும் சிபண்டா, சிகந்தர் ரஜா ஆகியோர் பொறுமையாக ஆடி கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற வழிவகுத்தனர். இறுதியில் சிம்பாப்வே அணி 20 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் சிபண்டா 32, சிகந்தர் ரஜா 32, பிரண்டன் டெய்லர் 15, வில்லியம்ஸ் 16 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஷகிப் அல் ஹசன் நான்கு, அப்துர் ரசாக், ஷபியுல் இஸ்லாம் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக ஷகிப் அல் ஹசன் தெரிவானார். இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட ருவென்ரி–20 தொடர் 1–1 என சமநிலையானது. முன்னதாக இவ்விரு அணிகள் மோதிய டெஸ்ட் தொடர் சமநிலையானதுடன் ஒருநாள் தொடரை சிம்பாப்வே அணி கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது.

# செரீனா, நடால் வசம் கிண்ணம்



(மட்ரிட்)

மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் தொடரில் செரீனா மற்றும் ரபெல் நடால் ஆகியோர் கிண்ணத்தைக் கைப்பற்றிக்கொண்டனர்.

மட்ரிட் ஓப்பன் ரென்னிஸ் போட்டி ஸ்பெயினில் நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டிகள் நேற்று முன்தினம் நடைபெற்றன. களிமண் தரை போட்டியானஇதன் பெண்கள் ஒற்றையர் இறுதிச் சுற்றில் முதல்நிலை வீராங்கனையும், நடப்பு சம்பியனுமான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸும், 2ஆம் நிலை வீராங்கனை ரஷ்யாவின் மரிய ஷரபோவாவும் மோதினார்கள்.

இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய செரீனா 6-1, 6-4 என்ற நேர் செட்டில் ஷரபோவாவை வீழ்த்தி பட்டத்தை கைப்பற்றினார். 2004ஆம் ஆண்டுக்கு பின்னர் இதுவரை செரீனாவை 13 முறை சந்தித்துள்ள ஷரபோவா அவை அனைத்திலும் தோற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

மகுடம் சூடிய செரீனாவுக்கு ரூ.4 கோடியும், 2ஆவது இடம் பிடித்த ஷரபோவாவுக்கு ரூ.2 கோடியும் பரிசாக கிடைத்தது. 18 ஆண்டுகளாக ரென்னிஸ் விளையாடி வரும் 31 வயதான செரீனாவுக்கு இது 50ஆவது சர்வதேச பட்டமாகும். இதன் மூலம் 50 மற்றும் அதற்கு மேல் பட்டம் வென்ற 10ஆவது வீராங்கனை என்ற சிறப்பை செரீனா பெற்றார்.

ஆண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் ஸ்பெயினின் ரபெல் நடால் 6-2, 6-4 என்ற நேர் செட்டில் சுவிட்சர்லாந்தின் வாவ்ரிங்காவை வீழ்த்தி பட்டத்தை தட்டிச் சென்றார். நடால் வென்ற 23ஆவது ஏ.டி.பி. மாஸ்டர்ஸ் பட்டமாகும். ஒட்டுமொத்தத்தில் இது அவரது 55ஆவது சர்வதேச பட்டமாகும்.

# வக்கார் அறிவுரை

டெஸ்ட் போட்டியைப்போன்று பந்து வீசுமாறு வக்கார் யூனிஸ் தமக்கு அறிவுரை கூறியதாக சன் ரைஸர்ஸ் அணியின் சகலதுறை வீரர் டரன் சமி தெரிவித்துள்ளார்.

புற்தரையில் டெஸ்ட் போட்டிகளை போன்று பந்துவீசினால் சிறப்பாக இருக்கும் என சன் ரைஸர்ஸ் அணியின் பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளர் வக்கார் யூனிஸ் குறிப்பிட்டுள்ளார்.

பஞ்சாப் அணியுடனான போட்டியில் டேவில் மில்லரின் விக்கெட்டை கைப்பற்றியமை மிகப் பெரியதொரு விடயம் எனவும் டரன் சமி கூறியுள்ளார்.

இந்தப் போட்டியில் சன்ரைய்ஸர்ஸ் அணி 30 ஓட்டங்களால் வெற்றிபெற்றதுடன், டரன் சமி நான்கு விக்கெட்டுக்களை கைப்பற்றியிருந்தார்.



# ஐ.பி.எல்லில் 10ஆவது அணி விரைவில் ஆலோசனை

(புதுடில்லி)

ஐ.பி.எல். போட்டியில் 10ஆவது அணியைச் சேர்ப்பது குறித்து விரைவில் ஆலோசனை நடத்தவுள்ளதாக அதன் தலைவர் ராஜீவ் சுக்லா தெரிவித்துள்ளார்.

தற்போது 6ஆவது ஐ.பி.எல். சீசன் போட்டிகள் நடந்து வருகிறது. இந்த போட்டிகள் முடிவடைந்தவுடன், 10ஆவது அணியை ஐ.பி.எல்லில் சேர்ப்பது குறித்து ஆலோசனை நடத்தவுள்ளோம். ஒரு அணியில் 4 வெளிநாட்டு வீரர்கள் விளையாடலாம் என்பதில் மாற்றங்கள் இல்லை. ஐ.பி.எல். போட்டிகள், கால்பந்து போட்டியை போல உலகம் முழுவதும் புகழ் பெற்றுள்ளது.

தற்போது 198நாடுகளில்ஐ.பி.எல். போட்டிகளை மக்கள் இரசித்து வருகின்றனர்.

இந்திய கிரிக்கெட் சபையின் சார்பில் பல்வேறு விளையாட்டுகளை ஊக்குவிப்பதற்காக ரூ.50 கோடி, மத்திய விளையாட்டுத்துறைஅமைச்சகத்திடம் அளிக்கப்பட்டது. ஆனால், வருமான வரித்துறை இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. இத்தனைக்கும் இந்த ஆண்டில் இந்திய கிரிக்கெட் சபை ரூ.950 கோடியை வருமான வரியாக செலுத்தி உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சம்பியன்ஸ் கிண்ணம் பாகிஸ்தான் சாதிக்கும்

(லாகூர்)

சம்பியன்ஸ் கிண்ண ஒரு நாள் தொடரில் பாகிஸ்தான் அணி கிண்ணத்தை வெல்லக் கூடிய முழு ஆற்றல் உள்ளது என அதன் முன்னாள் கப்டன் அக்ரம் தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணியில் சிறந்த சகல துறை வீரர்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதாலும் அதன் தரமும் வலுவாகவுள்ளது. கிண்ணத்தை வெல்லக் கூடிய அதிக வாய்ப்பு பாகிஸ்தானுக்கு உள்ளது. இந்திய அணியில் இசாந் சர்மாவை இணைத்தது எனக்கு வியப்பளிக்கின்றது. அவரது பந்து வீச்சு வெளிநாட்டு ஆடுகளங்களில் துடுப்பாட்ட வீரர்களுக்கு எவ்வித அச்சறுத்தலையும் ஏற்படுத்துவதில்லை. அந்த வகையில் அவரது தெரிவு இந்திய அணிக்குப் பலவீனமானது என்றே கருதுகின்றேன் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சி.பி.எல். அட்டவணையை மாற்ற இலங்கை கிரிக்கெட் சபை கோரல்

(கொழும்பு)


மேற்கிந்திய கிரிக்கெட் சபை முதல்முறை நடத்தவுள்ள கரிபியன் பிரிமியர் லீக் (சி.பி.எல்.) போட்டி அட்டவணையில் மாற்றம் கொண்டுவரும்படி இலங்கை கிரிக்கெட் சபை கேட்டுக்கொண்டுள்ளது. சி.பி. எல். போட்டி அட்டவணையும் இலங்கை பிரிமியர் லீக் போட்டி அட்டவணையும் குறுக்கிடுவதாலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சி.பி.எல். தொடர் எதிர்வரும் ஜூலை 29 மற்றும் ஓகஸ்ட் 26ஆம் திகதிக்குள் நடத்தப்படவுள்ளது. மறு புறத்தில் எஸ்.எல்.பி.எல். தொடர் ஆகஸ்ட் 10ஆம் திகதி ஆரம்பிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதில் சம்பியன்ஸ் லீக் ருவென்ரி – 20 தொடர் நடைபெறவுள்ளதால் எஸ்.எல்.பி.எல். தொடரில் மாற்றம் கொண்டுவர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சம்பியன்ஸ் லீக் தொடரில் எஸ்.எல்.பி.எல். இல் வெல்லும் அணி தகுதிபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

எமது போட்டிக்கான அட்டவணையை கடந்த ஆண்டிலேயே அறிவித்துவிட்டோம். இதனால் ஏனைய தொடர்களுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. இதனால் கரிபியன் பிரிமியர் லீக்கை மாற்ற நாம் கோரிக்கை விடுத்திருக்கிறோம் என இலங்கை பிரிமியர் லீக் இயக்குநர் அஜித் ஜயசேகர குறிப்பிட்டார்.

சி.பி.எல். தொடரில் விளையாடுவதற்கு இலங்கை முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் கைச்சாத்திட்டதைத் தொடர்ந்தே இரு போட்டிகளினதும் அட்டவணை முரண்படும் விவகாரம் கவனத்திற்கு வந்தது. இதில் தாம் எந்தத் தொடரில் பங்கேற்பது என்பது குறித்து முரளி இன்னும் இறுதி முடிவை எடுக்கவில்லை. முரளி எஸ்.எல்.பி.எல். இலும் பெரும் தொகைக்கு ஒப்பந்தமானவராவார்.

அதேபோன்று கிறிஸ் கெய்லும் எஸ்.எல்.பி.எல். இல் ஒப்பந்தமாகியுள்ளார். இந்நிலையில் ஊவா நெக்ஸ்ட் அணிக்கு விளையாடும் கெய்ல் தனது சொந்த நாட்டுத் தொடரில் விளையாடும் பட்சத்தில் எஸ்.எல்.பி.எல். இல் இருந்து விலக வாய்ப்பு உள்ளது.

# போட்டியை வெற்றிகரமாக முடிப்பதில் டோனி வல்லவர்



(மொகாலி)

ருவென்ரி-20 மற்றும் ஒருநாள் போட்டியில் ஆட்டத்தை வெற்றிகரமாக முடித்துவைப்பதில் இந்திய அணிக் கப்டன் டோனியே சிறந்தவர். தற்போதைய நிலையில் நிகர் எவருமில்லை என கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் அதிரடி வீரர் டேவிட் மில்லர் தெரிவித்துள்ளார்.

கடந்த சில ஆண்டுகளாக டோனி மிகவும் சிறப்பாக விளையாடி வருகிறார். ஆட்டத்தை முடித்து வைப்பதில் அவரது செயற்பாடு நன்றாக இருக்கிறது. சர்வதேச போட்டிகளில் ஆட்டத்தை வெற்றிகரமாக முடித்து வைப்பதில் தற்போது டோனியே சிறந்து விளங்குகின்றார்.

குளூஸ்னர் எனக்கு துடுப்பாட்டப் பயிற்சி அளித்தார். இது எனது அதிர்ஷ்டம். அவரது துடுப்பாட்ட நுணுக்கம் எனக்கு அதிக நம்பிக்கை அளித்தது. இதனால் என்னால் அதிரடியாக விளையாட முடிந்தது. எந்த அணிக்காக விளையாடுவது என்பது முக்கியமல்ல. விளையாடும் அணிக்காக எமது முழுப் பங்களிப்பையும் வெளிப்படுத்த முயற்சிக்க வேண்டும். ஆனால் கிரிக்கெட் போட்டியைப் பொறுத்த வரை எந்தவொரு வீரரும் சகல போட்டிகளிலும் பிரகாசித்ததாக வரலாறு இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



# பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட கால்பந்து
# ஹென்றிஸ், பற்றிக்ஸ், யாழ். மத்திய கல்லூரி சம்பியன்



(யாழ்ப்பாணம்)

மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி அணிகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டன.

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான மாவட்ட மட்ட கால்பந்தாட்டப் போட்டி அண்மையில் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் ஐந்து வலயங்களில் முதலிரு இடங்களைப் பிடித்த அணிகள் பங்குகொண்டன. இதில் 15, 17, 19 வயதுப் பிரிவு ஆண்கள் அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியும், மூன்றாமிடத்திற்கான போட்டியும் இடம்பெற்றது.

15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும், வடமராட்சி தேவரையாளி இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே சிறப்பான முறையில் ஆடிய இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் யாழ்.மத்திய கல்லூரி அணியும், அல்வாய் றோ.க. வித்தியாலய அணியும் மோதின. இரு அணிகளுமே ஆரம்பம் முதலே சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதும், இறுதி வரை கோல் எதனையும் போட முடிய வில்லை. இறுதியில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் யாழ். மத்திய கல்லூரி அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக்கொண்டது.

17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும், இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அணியும் மோதின. இதில் சிறப்பான முறையில் ஆடிய யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி 1-0என்ற கோல் கணக்கில்வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக்கைப்பற்றிக் கொண்டது.தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும், யாழ். சென் ஜேம்ஸ் வித்தியாலய அணியும் மோதின.இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணியும், சென். ஜோண்ஸ் கல்லூரி அணியும் மோதின. இதில் சிறப்பான முறையில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது. தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும், மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (93)

## விளையாட்டுச் செய்திகள்

# ஜெயசூரிய ஆதரவு

(கொழும்பு)

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறும் தீர்மானத்தை சச்சின் டெண்டுல்கரே மேற்கொள்ள வேண்டும் என்று இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் துடுப்பாட்ட வீரரும், இலங்கை கிரிக்கெட் தெரிவுக் குழுவின் தலைவருமான சனத் ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், எப்போது கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற வேண்டும் என்ற தீர்மானத்தை மேற்கொள்ள சச்சின் டெண்டுல்கருக்கு சுதந்திரம் வழங்கப்பட வேண்டும்.

சச்சின் டெண்டுல்கரின் ஓய்வு தொடர்பில் இந்தியாவில் பல்வேறு நிலைப் பாடுகள் காணப்படுகின்றன.எனினும் இது சச்சினின் தனிப்பட்ட விடயம். இதில் அவரே இறுதி தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும். தேவையில்லாமல் இது குறித்து கதைத்து அவ்ரை நெருக்கடிக்கு யாரும் ஆளாக்காமல் இருந்தால் எல்லோருக்கும் அது நல்லது என்று அவர் தெரிவித்துள்ளார்.

# போராடித் தோற்றது யாழ். பல்கலை



(மொறட்டுவ)

இறுதிப்போட்டி வரை முன்னேறிய, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி மொறட்டுவ பல்கலைக்கழக அணியுடன் போராடித் தோற்று, இரண்டாமிடத்தினைப் பெற்றுக்கொண்டது.

இலங்கை பல்கலைக்கழகங்களுக் கிடையில் மினி ஒலிம்பிக் என்று அழைக்கப்படும் 3 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும், தடகள மற்றும் பெரு விளையாட்டு நிகழ்வுகள் தற்போது மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் நடை பெற்று வருகின்றது.

மினி ஒலிம்பிக் ஹொக்கி போட்டியின் இறுதிப்போட்டி அண்மையில் பொலிஸ் பார்க் மைதானத்தில் மொறட்டுவ பல் கலைக்கழக அணிக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணிக்கும் இடையில் நடைபெற்றது.

முன்னதாக நடைபெற்ற அரையிறுதி போட்டிகளில், மொறட்டுவ பல்கலைக் கழக அணி ஜெயவர்த்தனபுரப்பல்கலைக் கழகத்தினை 1:0 என்ற கணக்கிலும், யாழ்ப்பாணப் பல்கலைகழக அணி களனி பல்கலைக்கழக அணியினை பெனால்டி முறையில் 5:2 என்ற கணக்கிலும் வெற்றிபெற்று இறுதிப்போட்டிக் குள் நுழைந்தன.

இறுதிப்போட்டியில் இரு அணிகளும், சிறப்பாக விளையாடின. மொறட்டுவ பல்கலைக்கழக அணி கோல்போடுவதை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி யினரால் தடுக்க முடியாமல் போக மொறட்டுவ அணி 2 கோல்களைப் போட்டது.

பதில் கோல் எதுவும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணி அடிக்காததினால், மொறட்டுவப் பல்கலைக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகியது.

யாழ். பல்கலைக்கழக வீரர்களின் ஆட்டத்தை பார்வையாளர்கள், விருந் தினர்கள் என அனைவரும் பாராட் டியமை குறிப்பிடத்தக்கது.

# மாவட்ட மட்ட பெண்கள் எல்லே
# மணற்காடு றோ.க. சம்பியன்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டப் பாடசாலை அணிகளுக்கிடையிலான எல்லே போட்டியில் மணற்காடு றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை அணி சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு எல்லே அணிகளுக்கிடையிலான எல்லே போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. பெண்களுக்கான எல்லே போட்டிகளில், மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை அணி சம்பியனாகியது. இரண்டாமிடத்தினை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியும், மூன்றாமிடத்தினை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி அணியும் பெற்றுக்கொண்டன. (93)

# யாழ்ப்பாணம் பிரதேச வருடாந்த விளையாட்டு
# போர்த் ஸ்ரார் கழகம் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டு விழாவில் யாழ். போர்த்ஸ்ரார் கழகம் முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது.

யாழ்ப்பாண பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா அண்மையில் பிரதேச செயலர் திருமதி சு. தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்றது. இதில் ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் முதலாமிடத்தை குருநகர் அணியும், இரண்டாமிடத்தை ஈச்சமோட்டை அணியும் பெற்றுக்கொண்டன. ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் முதலாமிடத்தை ஜெட்லைனர் அணியும், இரண்டாமிடத்தை யமஹா அணியும் பிடித்துக் கொண்டன. ஆண்களுக்கான கபடிப் போட்டியில் முதலாமிடத்தை பாரதி அணியும், இரண்டாமிடத்தை போர்த் ஸ்ரார் அணியும் பிடித்துக் கொண்டன. வலைப்பந்தாட்டப் போட்டியில் முதலாமிடத்தை போர்த் ஸ்ரார் அணியும், இரண்டாமிடத்தை கே.சி.சி. அணியும் பிடித்துக் கொண்டன. ஆண்களுக்கான எல்லே போட்டியில் முதலாமிடத்தை பாரதி அணியும், இரண்டாமிடத்தை ஜெட்லைனர் அணியும் பிடித்துக் கொண்டன. பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியில் முதலாமிடத்தை போர்த் ஸ்ரார் அணியும், இரண்டாமிடத்தை யமஹா அணியும் பிடித்துக் கொண்டன. பெண்களுக்கான எல்லே போட்டியில் முதலாமிடத்தை போர்த் ஸ்ரார் அணியும், இரண்டாமிடத்தை யமஹா அணியும் பிடித்துக் கொண்டன. .

ஒட்டுமொத்த போட்டிகளில் யாழ். போர்த் ஸ்ரார் விளையாட்டுக்கழகம் 54 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், யாழ். யமஹா விளையாட்டுக்கழகம் 38 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், யாழ். பாரதி விளையாட்டுக்கழகம் 20 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன. சிறந்த வீரராக போர்த் ஸ்ரார் கழகத்தைச் சேர்ந்த மடோநெல்வின்ஸ், சிறந்த வீராங்கனையாக யமஹா கழகத்தைச் சேர்ந்த வினோதினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இதேவேளை, உத்தியோகஸ்தர்களுக்கான சங்கீதக் கதிரை நிகழ்வில் முதலாமிடத்தை செ. ராஜாசெல்வி, இரண்டாமிடத்தை ஜே.கணேஸ்வதி, மூன்றாமிடத்தை ர.யசோதினி ஆகியோர் பிடித்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு விழாவின் பிரதம விருந்தினராக கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் வடமாகாணச் செயலர் சிவலிங்கம் சத்தியசீலன், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி எம்.ஆர். மோகனதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (எஸ்.பி.)

# தங்கத்தின் மறுபக்கம்

- நீச்சல்காரன் -

தங்கத்தின் தொழில்முறைப் பயனைவிட அதன் ஆபரண அல்லது வசீகரப் பயனே அதற்குச் சந்தையை வழங்குகிறது. மேலும் அதிகரிக்கும் தங்கத்தின் தேவையே தங்கத்தின் விலையை ஏற்றவும் காரணியாகிறது. திரும்பத் திரும்ப வாங்கி திரும்பத் திரும்ப தங்கத்தின் தேவையை அதிகரித்து திரும்ப வாங்கி நாமே சுவரொன்றில் முட்டிக் கொள்கிறோம். அடிப்படையில் தங்கத்தால் விளையும் இலாபம் முதலீட்டு லாபம் இல்லை, ஊகம் எனப்படும் பேரம் பேசி அதிகரிக்கப்படும் வெற்று வேட்டு.



தங்கம் என்பது இரும்பு, பாதரசம் போன்ற ஒருவகை உலோகம். ஆனால் மற்ற உலோகங்களைப் போல அதிகமாகத் தொழிற்துறையில் பயன்படுவதில்லை. இருந்தும் அதன் வசீகரக் குணமே அதன் மதிப்பை மற்ற உலோகங்களைவிட அதிகமாக்குகிறது. கொஞ்சம் இரும்பை வெட்டி எடுத்தால், அதன் மூலம் கனரக வாகனங்கள், விவசாய உபகரணங்கள், ஆயுதங்கள் எனப்பல விதத்தில் ஒரு நாட்டின் உள்நாட்டு உற்பத்திக்குத் துணைசெய்யும்; ஆனால் அதே அளவு தங்கத்தை வெட்டி எடுத்தால் (கவனிக்க, இதற்கு செலவும் அதிகம்) கொஞ்சம் மருத்துவத்துறையிலும், மின்னணு உற்பத்தியிலும் மட்டுமே பயன்பட்டு நாட்டின் உற்பத்திக்கு உதவும். மீதமுள்ள தங்கம் எல்லாம் ஆபரணங்களாக அல்லது செல்வமாக அடங்கிவிடும். தங்கத்தைப் போல இரும்பை ஆபரணமாக மாட்டி அழகு பார்க்கமுடியாதுதான் ஆனால் இரும்பைப்போல உற்பத்தியைத் தரவல்லதல்ல தங்கம். ஒரு நாட்டின் பார்வையில் தங்கம் என்பது உப்பைப் போல அவசியம் தேவை ஆனால் அளவாகத்தான் தேவை. தங்கத்தில் அதிக முதலீடு என்பது தனிமனிதக் குறுகிய பார்வையில் வளமானதாக இருக்கலாம், ஆனால் தொலைநோக்குப் பார்வையில் நாட்டின் வளர்ச்சி என்ற விரிந்த பார்வையில் அதுவொரு நட்டமே.

முதலில் நடைமுறை ஆதாரத்தைக் காண்போம். தனிமனிதனாக அனைவரும் தங்கத்தில் முதலீடு செய்தால் தங்கம் முதலில் விலையேறும், மக்களும் மகிழ்ந்து தங்கத்தில் மேலும் முதலீடு செய்வார்கள். தங்கம் விலை குறைவதற்கான வாய்ப்பில்லை என்பதில் ஐயமில்லை. ஆனால் மற்ற பொருட்களின் விலை பன்மடங்கு அதிகரிக்கும். இது தானாக ஏற்படுத்திக் கொண்ட பணவீக்கம். காரணம் ஒரு பசுவை வாங்கி பால் வியாபாரம் செய்பவர், தங்கத்தில் பணத்தைப் போட்டு வியாபாரத்திற்கு முழுக்கு போட்டால் பாலுக்கு என்ன செய்வோம்? விவசாயி அவ்வாறு செய்தால் சோற்றுக்கு என்ன செய்வோம், இதன் மூலம் விலையேற்றம்தான் பரிசாக்கப்படும். ஆரோக்கியமான முதலீடு என்பது உற்பத்தியுடன் லாபத்தைக் கொடுக்க வேண்டும். உற்பத்தி இல்லாமல் லாபம் மட்டும் வருகிறதென்றால் எங்கோ யாரோ நட்டப்படுகிறார் என்பது எளியமொழி.

நிலத்தில் அல்லது தங்கத்தில் என்று உற்பத்திக்கு ஒவ்வாத துறைகளில் போடப்படும் முதலீடு தனிமனிதனுக்கு வேண்டுமானால் லாபகரமாக இருக்கலாம், ஆனால் நாட்டுக்கல்ல.

இத்தகைய தங்கமயமாக்கலால், தொழில் தொடர்வோருக்கான பணம் முடக்கப்படுகிறது. நாட்டின் சேமிப்பு எல்லாம் மறுமுதலீடு ஆகாமல் ஒடுக்கப்படுகிறது. ஏர் உழாமல் தங்கத்துக்கு அடகு ஆகிறது. முன்பு விளைபொருட்களின் களஞ்சியமாக இருந்த கடை வீதிகள் எல்லாம் தங்க நகை மாளிகைகளாக மாறிவிட்டன. வேலைவாய்ப்புமில்லாமல் நாமோ அந்த கடை வீதிகளில் அலைந்து கொண்டிருக்கிறோம்.

தங்கத்தில் போடப்படும் பணம் எல்லாம் தூங்கும் பணமே. அதுவே வேலைவாய்ப்பைத் தரும் தொழிற்துறையில் போட்டால் நாட்டின் வளர்ச்சிக்கு உதவும். அதனாலேயே தங்கத்தில் போடப்படும் பணத்தை விட வங்கியில் போடப்படும் சேமிப்பே நாட்டிற்கும், எதிர்கால சந்ததிகளுக்கும் நன்மை பயக்கும்.

## நுளம்புத்திரி கவனம்!

- பிறந்த குழந்தைகள் நுளம்புத்திரிகளின் புகையைச் சுவாசித்தால் வலிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.
- மலட்டுத் தன்மை ஏற்படும்.
- நுரையீரல் புற்றுநோய் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.
- ஒரு நுளம்புத்திரி எரியும்போது அது வெளியிடும் சாம்பலின் அளவு 75 முதல் 137 சிகரெட்களை எரிப்பதனால் வரும் சாம்பலுக்குச் சமம்.



# பிழையின்றித் தமிழ் 19

- ஞானச்செல்வன் -

### எழுத்துப் பிழைகள்:

சொற்களின் பொருள் பற்றிய சிந்தனையின்மையால் ஊடகங்களில் பற்பல எழுத்துப் பிழைகளை அவ்வப்போது செய்து வருகிறார்கள். ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் மங்கையர்கரசி என்று பெயர் எழுத்தில் காட்டப்பட்டது. மங்கையர்க்கு+அரசி= மங்கையர்க்கரசி என்று சரியாக எழுதத் தோன்றவில்லை போலும். ஒரு செய்தித்தாளின் வார இதழில் அங்கயர்க்கண்ணி என்று எழுதியிருந்தார்கள். அம்+கயல்+கண்ணி = அங்கயற்கண்ணி என்றாகும். அழகிய மீன் போன்ற கண்களுடையாள் என்பது பொருள். கயற்கண்ணியைக் கயர்க்கண்ணி ஆக்குதல் அழகா?

"கொஞ்சம் கவிதை கொஞ்சம் தேனீர்"
என்று ஒரு நிகழ்ச்சி எழுத்தில் காட்டப்பட்டது. தேனீர் எனில் தேன் கலந்த நீர் (இனிய நீர்) என்று பொருள். இச்சொல் தேநீர் என்றிருத்தல் வேண்டும். தே(யிலை)+நீர்= தேநீர் ஆனது. இன்னும் சரியாகச் சொன்னால், TEA என்பதன் தமிழ் ஒலி தே இதனோடு நீர் சேர்த்துத் தேநீர் என்று ரீயைச் சொல்லுகிறோம். இவ்வாறே கொ..பீயைக் கோப்பி என்றுரைத்தல் சாலும். மூக்கைத் தலையைச் சுற்றிப் பிடிப்பதுபோல், மாட்டுக் குளம்பின் வடிவில் (பிளவுபட்டு) கோப்பிக் கொட்டை இருப்பதால் அதனைக் குளம்பி எனல் சரியானதுதானா? விவரம் தெரியாதவர் இதனைக் குழம்பி என்றுரைத்துக் குழப்பிவிடுகிறார்கள்.

படித்தவர்களும் ஐந்நூறு என்னும் சொல்லை ஐநூறு என்றெழுதுகிறார்கள். இதழ்களில் வருகின்ற கவிதைகளில் கதைகளில் இச்சொல்லைப் பலமுறை பார்க்க நேர்கிறது. ஐந்து + நூறு = ஐந்நூறு ஆதல் இலக்கண நெறி. "ஐ! நூறு" என்று வியத்தல் பொருளில் ஐநூறு விளங்குகிறது. ஐ - நூற்றை விட்டு இனி, ஐந்நூற்றைப் பிடிப்போம்.

சாமித்துரை என்ற பெயரை சாமித்துறை என்று ஒரு செய்தியேட்டில் காண நேர்ந்தது. துரையாக (பிரபு) இருப்பவரை ஒரு நீர்த்துறை - படித்துறை ஆக்குதல் சரியா? மற்றொரு செய்தித்தாளில் கழுத்தை அறுத்துக் கொள்ளப்படும் என்று படித்தபோது மனம் பதறியது. கழுத்தை அறுத்துக் கொல்லப்படும் ஆடுகளை விட்டு விட்டுத் தமிழை ஏன் கொல்லுகிறார்கள்?

வெளிநாட்டிலிருந்து ஒரு பெரிய தமிழ் விழாவுக்கான அழகான அழைப்பிதழ் ஒன்று வந்தது. அதில் "ராம காதையை உறைத்திடக் கேட்போரும் படிப்போரும் நரகமெய்திடாரே" என்று இறுதியில் பெரிய எழுத்துகளில் எழுதப்பட்டிருந்தது. உரைத்திட என்னும் இடையின ர கரத்திற்கு மாறாக உறைத்திட வல்லினம் போட்டு அழுத்திவிட்டார்கள்.

### பிழை தவிர்த்தல்:

பேசுவதிலும் எழுதுவதிலும் ஏற்படக்கூடிய பிழைகளைத் தவிர்த்தல் எப்படி? ஒற்றுப் பிழைகளைப் பொறுத்தவரையில் நாம் இயல்பாக வாய் விட்டுப் பேசிப் பார்த்தாலே எங்கு வல்லொற்று (க்,ச்,ட்,த்,ப்) மிகும் என்பதை அறியக் கூடும். வலிந்து நாமாக ஒற்றைத் திணித்தல் சரியன்று: ஒற்றை விட்டுவிட்டாலும் பொருட்சிதைவோ, விட்டிசைத்தலோ ஏற்படும்.

நிரம்பப் படித்தவர்களின் நூல்களில் கூட, ஒற்றுப் பிழைகளைக் காணும்போது அவை அச்சுப் பிழைகளா? அன்றி அறியாப் பிழைகளா என்று ஐயமுற நேர்கிறது. சில எடுத்துக்காட்டுகளைக் காண்போம்.

"நான்கு கட்டுரைக் கொண்ட இந்த நூலில்" என்று ஒரு தொடரைக் கண்ணுற்றேன். "கட்டுரைக்கொண்ட" - சொல்லிப் பாருங்கள். இயல்பாக உள்ளதா? இல்லை! ஏன்? அது "கட்டுரை கொண்ட" என இயல்பாக இருத்தல் வேண்டும். நான்கு கட்டுரைகளைக் கொண்ட - என்று வேற்றுமை உருபு விரிந்து வரும்போது வல்லொற்று மிகுதல் தானாகவே ஏற்படுகிறது.

இப்படி மற்றொன்று: "ஆழ்க்கடல் ஆய்வு செய்யும் குழுவினர்" என்று அறிஞர் ஒருவர் நூலில் படித்தேன். இ..து ஆழ்கடல் ஆய்வு என்று வல்லொற்று மிகாது அமைதல் வேண்டும். இதனை வினைத்தொகை எனலாம். ஆழமாய் இருந்த கடல், ஆழமாய் இருக்கும் கடல், ஆழமாய்ப் போகும் கடல். முக்காலத்தும் கடல் ஆழம் உடையதே. கடல் ஆய்வு பற்றிய நூலில் நாம் சொல்லாய்வு செய்கிறோம்.

"ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதிப் பெற்றுள்ளன" இப்படி ஒரு செய்தி படித்தோம். பாசன வசதி பெற்றுள்ளன என்று ஒற்று நீக்கி எழுதிட வேண்டும். பாசன வசதியைப் பெற்றுள்ளன எனில் சரியாம். வசதியை (ஐ) இரண்டாம் வேற்றுமை உருபு விரி என்று சொல்லுவோம். இவ்விடத்து வல்லொற்று மிகும்.

▸ செய்யுள் உள்ளிடவும்

எழுத்து | அசை - சீர் | தளை | அடி | மோனை | எதுகை

| சீர்கள் | வாய்ப்பாடு - அசை | தளை |
|---|---|---|
| அக/ர/ - முத/ல/ | புளிமா - நிரை | இயற்சீர் வெண்டளை |
| முத/ல/ - எழுத்/தெல்/லாம்/ | புளிமா - நிரை | இயற்சீர் வெண்டளை |
| எழுத்/தெல்/லாம்/ - ஆ/தி/ | புளிமாங்காய் - நேர் | வெண்சீர் வெண்டளை |
| ஆ/தி/ - பக/வன்/ | தேமா - நிரை | இயற்சீர் வெண்டளை |
| பக/வன்/ - முதற்/றே/ | புளிமா - நிரை | இயற்சீர் வெண்டளை |
| முதற்/றே/ - உல/கு/ | புளிமா - நிரை | இயற்சீர் வெண்டளை |




# நீச்சல் உடை பதிவிரதை!

மாடர்ன் தியேட்டர்ஸ் அதிபர் டி.ஆர்.சுந்தரம், லண்டனில் படித்துப் பட்டம் பெற்றவர். அங்கேயே காதல் வயப்பட்டு, தன்னுடைய லண்டன் மனைவியுடன் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார்.

இந்தியாவுக்கு வந்தவுடன், தந்தையின் நெசவுத் தொழிலை தொடரும் எண்ணம் அவருக்கு எழவில்லை. மாறாக, அவரது கவனம் வேறுபக்கம் திரும்பியது. அப்போது, 1933இல், சேலத்தில், ஏஞ்சல் பிலிம்ஸ் எனும் கம்பெனி, சினிமா படங்களை தயாரிப்பதில் ஈடுபட்டிருந்தது. படங்கள் எடுக்க வேண்டும் என்றால், அப்போதெல்லாம் கல்கத்தாவிற்கு போக வேண்டும். தமிழகத்தில் எந்த வழியும் இல்லை. ஏஞ்சல் பிலிம்ஸ் பாகஸ்தர்களான வேலாயுதம் பிள்ளை, சுப்பராய முதலியார் ஆகியோருடன், டி.ஆர்.எஸ்.சும் கூட்டுச் சேர்ந்து படம் எடுக்க தொடங்கினார்.

1933 - 1935 இரு ஆண்டுகளில், இரண்டு படங்கள் எடுத்தனர். எதற்கெடுத்தாலும் கல்கத்தாவிற்கு போக வேண்டும் என்கிற நிலை, டி.ஆர்.எஸ்.இற்கு அலுப்பு தட்டியது. அந்த வேலைகளை சேலத்திலேயே செய்து கொண்டால் என்ன என்று, அவர் தீவிரமாக யோசித்தார். அதன் விளைவு தான், "மாடர்ன் தியேட்டர்ஸ" என்கிற ஸ்டுடியோவின் உதயம்.

சேலம் - ஏற்காடு மலை அடிவாரத்தில் முத்லில் பத்து ஏக்கர் நிலம் வாங்கினார். ஸ்டுடியோவுக்குள் நுழைந்தால், படப்பெட்டியுடன் தான் வெளியே போக வேண்டும் என்கிற எண்ணத்தை அப்போதே மனதில் தேக்கி செயல்பட ஆரம்பித்தார். படப்பிடிப்பு தளம், படப்பிடிப்புக்கான உபகரணங்கள் - பரிபூரணமான ஒரு லபோரட்ரி, பாடல் பதிவுக்கு ஒரு ரெக்கோர்டிங் அறை. எடுத்தவரை படத்தை போட்டுப் பார்க்க ஒரு சிறு பிரிவியூ தியேட்டர். இவ்வளவையும் அவர் அந்த ஸ்டுடியோவிற்குள் நிர்மாணித்தார். 1935இல், இது ஒரு அசுர சாதனை என்று தான் சொல்ல வேண்டும். முன் வைத்த காலை பின் வைக்கும் பழக்கம் அவரிடம் இல்லை. ஸ்டுடியோ, தியேட்டர் வேலைகள் எல்லாம் முடிவடைந்த பின் தான், தயாரிப்பு வேலைகளில் அவர் ஈடுபட ஆரம்பித்தார். 1936இல், ஸ்டுடியோ முழுமை பெற்று விட்டது என்றாலும், தயாரிப்பை தொடக்கியது 1937இல் தான். முதல் படம், "சதி அகல்யா!"

இப்போதெல்லாம் தமிழ்படங்களில் நடிக்க, நடிகையர்களை தேடி, கர்நாடகா, ஆந்திரா, மும்பை போன்ற இடங்களுக்கு தயாரிப்பாளர்கள் போகின்றனர். இதில், முதல் புரட்சியை, டி.ஆர்.எஸ்., தன் முதல் படத்திலேயே ஆரம்பித்து விட்டார்.

கதாநாயகியை தேடி, அவர் இலங்கைக்குச் சென்றார். அவர் அங்கே சென்ற போது, அவரது கண்களில் பட்ட பெண் தான் சிங்களக் குயில் தவமணி தேவி!

தவமணி தேவிக்கு, டி.ஆர்.எஸ்., கொடுத்த வேடம் என்ன தெரியுமா? பதிவிரதா சிரோன்மணியான, "சதி அகல்யா" வேடம். அப்போதெல்லாம் பத்திரிகைகளில் நீச்சல் உடையில் அதிகமாக காணப்பட்ட தவமணி தேவியை, இப்படிப்பட்ட ஒரு தெய்வீக பாத்திரத்திற்கு போட துணிச்சல் வேண்டும். அது சுந்தரத்திற்கு நிறையவே இருந்தது. ரிஷி பத்தினியான, "அகல்யா" வேஷத்தை கொடுத்து, தவமணியை அதில் நடிக்க வைத்தார். நன்றாக வேலை வாங்கினார் என்று தான் சொல்ல வேண்டும். அந்தப் படம் திரையிட்ட போது, மக்கள் ரிஷிபத்தினியை தான் பார்த்தனர். நீச்சல் உடை தவமணி தேவியை பார்க்கவில்லை. படம் பெரும் வெற்றி பெற்றது.

**(ரா.வேங்கடசாமியின் 'முதலாளி' நூலிலிருந்து)**

# பாம்பு கடித்தால் கீரி சாகுமா?

சில சமயங்களில் மட்டும் பாம்பும் கீரியும் கடுமையாகச் சண்டை போடுவதைப் பார்க்கலாம். பாம்பு படம் எடுத்து பல தடவைகள் கீரிப் பிள்ளையைக் கடிக்கவும் 'படத்தால் அடிக்கவும் முயலும். இருப்பினும் கீரிப்பிள்ளை வேகமாக விலகி தப்பிக்கும். பாம்பு கொஞ்சம் சோர்வடையும் நேரத்தில் கீரிப்பிள்ளை பாம்பின் தலையைப் பிடித்துக் கடித்துக் கொன்று விடும். இப்படி பாம்புகளை கீரிப்பிள்ளை வெல்வதற்குக் காரணம் அதன் வேகமான



செயல்பாடுதான் என்றே சமீப காலம் வரை விலங்கியல் நிபுணர்கள் நினைத்திருந்தார்கள். நம் தமிழ் சினிமா கதா நாயகன், துப்பாக்கிக் குண்டுகளில் இருந்து தப்பிப்பது போல, "கீரிப்பிள்ளை அதீத சுறுசுறுப்புடன் பாம்பின் தாக்குதல்களில் இருந்து தப்பிக்கிறது. தப்பித் தவறி விஷப் பாம்பிடம் அது கடிபட்டுவிட்டால், நிச்சயமாக இறந்துவிடும்" என்றே சொல்லப்பட்டு வந்தது. ஆனால், பாம்பு கடித்தாலும் கீரிப்பிள்ளைக்கு காயம் ஏற்படுமே தவிர, விஷம் ஏறாது.

அதன் உடலில் இயற்கையாகவே உள்ள விஷ எதிர்ப்பு சக்திதான் இதற்குக் காரணம் என்று தற்போது புதிய கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள் இஸ்ரேல் நாட்டு விஞ்ஞானிகள். அங்குள்ள வொய்ஸ்மான் நிறுவனத்தில் பணியாற்றும் வாரா ஃப்யூடின் என்ற விஞ்ஞானி, பாம்பின் விஷத்தைக் கீரியின் உடலில் செலுத்தி என்ன நிகழ்கிறது என்று ஆராய்ந்தார். சாதாரணமாக மற்ற பிராணிகளின் உடலில் (மனிதன் உட்பட) அவ்விஷத்தைச் செலுத்தினால், பாதிக்கப்பட்ட இடத்தில் உள்ள கலங்கள் செயல் இழக்கும். விஷம் இரத்தத்தின் மூலம் பரவி, ஒவ்வொரு உடல் உறுப்புகளாக செயல் இழந்து கடைசியில் அது மூளையை எட்டும்போது ஆள் குளோஸ்! ஆனால் கீரியின் உடலில் விஷத்தைச் செலுத்தியபோது, அதன் செல்களில் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. கீரிப்பிள்ளையின் உடலில் உள்ள இந்த விஷத்தடுப்புச் சக்திக்குக் காரணமான இரசாயனப் பொருளை தொடர்ந்து ஆராய்ந்து வருகிறது ஃப்யூடின் தலைமையிலான ஆராய்ச்சிக் குழு. இதன் மூலம் பாம்புக்கடிக்கு மலிவு விலை விஷ முறிவு மருந்தோ அல்லது தடுப்பு ஊசியோ உருவாக்கப்பட வாய்ப்பு இருக்கிறது என்கிறார்கள் அவர்கள்.

# பொறாமையால் வந்த வறுமை



முந்தைய காலத்தில் இரு சகோதரர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்களில் ஒருவன் பெரிய பணக்காரன். அடுத்தவனோ பரம ஏழை.

ஒரு நாள் இரவு நேரம்.

ஏழைச் சகோதரன் வயல் வழியாக வீடு திரும்பிக் கொண்டிருந்தான். அப்போது யாரோ தன் மூத்த சகோதரனின் வயலுக்குத் தானியக் கட்டுகளைக் கொண்டு போவதைப் பார்த்தான்.

"நீ யார்?" என்று அந்த ஏழை கேட்டான்.

"நான்தான் உன் சகோதரனின் அதிர்ஷ்டம்"

"என் அதிர்ஷ்டம்?"

"வறுமைதான் உன் விதி!"

இதைக் கேட்ட ஏழை, தன் விதியிடமிருந்து எப்படியாவது தப்பி ஓடி விட வேண்டுமென்று முடிவு செய்தான். தன் மனைவி மக்களையும், தட்டுமுட்டுச் சாமான்களையும் வண்டியிலேற்றிக் கொண்டு கிளம்பினான்.

அவன் கைகள் குளிரால் சில்லிட்டுப் போயின. அப்போதுதான் தன் கையுறைகளை மறந்து வந்து விட்டது தெரிந்தது.

உடனே தன் குடிசைக்குள் ஓடினான்.

யாரோ வருத்தத்துடன் முனகிக் கொண்டிருந்த சத்தம் கேட்டது.

"யாரது" என்று அந்த ஏழை கேட்டான்.

"நான்தான் உனக்குச் சொந்தமான வறுமை. என்னைக் கைவிட்டு விடாதே! அப்படி நீ செய்தாலும் நான் எப்படியும் உன்னை பிடித்துக் கொள்வேன்" என்றது.

"என் வண்டியில் இடமில்லை. நீ என்னுடன் வர விரும்பினால், இந்தக் கண்ணாடிப் போத்தலுக்குள் புகுந்து கொள். உன்னை என்னுடன் கொண்டு செல்கிறேன்" என்று கீழே கிடந்த போத்தலைக் காட்டினான்.

அவன் சொன்னபடியே வறுமை அந்தக் போத்தலுக்குள் நுழைந்து கொண்டது. அவன் அந்தக் கண்ணாடிப் போத்லை மூடி, அருகிலிருந்த காட்டுக்குள் கொண்டு போய் புதைத்தான். பின்னர் வீட்டுக்குத் திரும்பி வந்தான்.

அதன் பிறகு அவனுடைய நிலைமையே மாறி விட்டது. அவனுக்கு வசதி வந்து விட்டது.

ஒரு நாள் அவன் தன் அண்ணனை விருந்துக்கு வரும்படி அழைத்தான்.

பணக்காரச் சகோதரன் வந்து, வயிறு நிறையச் சாப்பிட்டான். இவ்வளவு பணம் தம்பிக்கு எப்படி வந்தது என்று ஆச்சரியப்பட்டுக் கேட்டான்.

தன்னைப் பிடித்திருந்த வறுமையைக் கண்ணாடிப் போத்தலுக்குள் அடைத்துக் காட்டுக்குள் புதைத்து விட்ட கதையைக் கூறினான் அவன்.

அதைக் கேட்ட அண்ணனுக்கு தம்பியின் வசதி குறித்து பொறாமை எண்ணம் ஏற்பட்டது.

காட்டுக்குள் சென்று அந்தப் போத்தலை எடுத்து, அதிலிருந்து வறுமையை விடுவித்து விட்டால் அது தன் தம்பியை மீண்டும் வந்து பிடித்துக் கொள்ளும் என்று நினைத்துக் கொண்டான்.

காட்டுக்குள் சென்று அந்தக் கண்ணாடிப் போத்தலைத் தேடிக் கண்டுபிடித்தான். அதிலிருந்த வறுமையை விடுவித்தான்.

"என் தம்பி என்னை விடப் பணக்காரன் ஆனது எனக்குப் பிடிக்கவில்லை. மறுபடியும் நீ அவனிடம் போய் அவனை முன்போலவே ஏழையாக்கி விட வேண்டும். அதற்காகத்தான் உன்னை விடுவித்தேன்" என்றான்.

போத்தலிலிருந்து வெளியேறிய வறுமை அவன் சொன்ன எதையும் காதில் வாங்கிக் கொள்ளவேயில்லை.

அது அவன் மேல்சட்டையைப் பிடித்துக் கொண்டு, "உன் சகோதரன் பொல்லாத ஆசாமி! அவன் என்னைப் போத்தலுக்குள் அடைத்து இங்குப் புதைத்து வைத்து விட்டான். ஆறு ஆண்டுகளாகப் பூமிக்குள் புதைந்து கிடந்த என்னை விடுவித்த உன்னை எனக்கு மிகவும் பிடித்துப் போய்விட்டது. இனி நான் உன்னுடன்தான் இருக்கப் போகிறேன்" என்றபடி அவனுடன் ஒட்டிக் கொண்டது.

அண்ணன் அதனிடமிருந்து விடுபட எவ்வளவு முயற்சித்தும் அது பலனளிக்கவில்லை. அவன் தன் செல்வத்தையெல்லாம் இழந்து ஏழையானான்.

**- லிதுவேனியா நாட்டுப்புறக் கதை.**

# நிதானமாக சிந்தித்து செயற்பட்டால் சிறந்த ஒரு எதிர்காலம் அமையும்



(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரின் பொய்த்தனமான வாக்குறுதிகளை நம்பி உங்களுடைய இரத்தங்களை சூடேற்றாது நீங்கள் அனைவரும் நிதானமாக சிந்தித்து செயற்படுவீர்களாக இருந்தால் உங்களுக்குச் சிறந்த ஒரு எதிர்காலம் அமையும் என்பதில் நீங்கள் எந்தவிதமான அச்சமும் கொள்ளத்தேவையில்லை என ஈ.பி.டி.பி.யின் கோப்பாய் பிரதேச இணைப்பாளர் இ.ஐங்கரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 10ஆத் திகதி உரும்பிராய் தெற்கு உதயசூரியன் முன்பள்ளியின் 2013ஆம் ஆண்டு வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கிராமங்களின் அபிவிருத்திக்காக உழைப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களேயொளிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் அல்ல. அவர்கள் வெறும் தமிழ்த்தேசியத்தை மாத்திரம் நாவில் பேசிக் கொண்டு காலத்தைக் கடத்துகின்ற செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இன்று ஈ.பி.டி.பி.யினர் ஆட்சி செய்கின்ற பிரதேச சபைகளின் அபிவிருத்திக்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களால் 300 மில்லியன் ரூபா நிதி பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், வலி.கிழக்கு பிரதேசத்திற்குட்பட்ட இருபாலை கிழக்கில் வாழுகின்ற மக்களுக்கு தாகத்திற்கு குடிப்பதற்கு குடிநீர் அற்ற நிலையில் இன்று அம்மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். இதற்கு காரணம் தமிழ்த்தேசியம் என்ற வார்த்தையினை நம்பி உணர்ச்சி பொங்கி அவர்களிற்கு வாக்களித்ததே ஆகும்.

கடந்த 30 வருடகாலமாக இதே தமிழ்த்தேசியம் என்ற வார்த்தை உங்களிற்கு அழிவைத்தவிர எதையும் பெற்றுத்தரவில்லை என்பதும் உங்கள் அனைவருக்கும் நன்றா கத்தெரியும்.

நீங்கள் இன்று எங்களிடம் உங்களுடைய வீதிகளைப் புனரமைத்துத்தருமாறும், மலசல கூடவசதிகளைப் பெற்றுத்தருமாறும் கோரிக்கைகளை முன்வைத்திருக்கின்றீர்கள்.

உங்களுடைய கிராமங்களின் அபிவிருத் திக்காக மட்டும் அல்லாது உங்களுடைய பிள்ளைகளின் எதிர்கால வளர்ச்சிக்காகவும் அயராது உழைப்பவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா என்பதும் உங்களுக்கு நன்றாகத் தெரியும் எனத்தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவர் மா.கெங்காதரன், கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலய அதிபர் எஸ்.வாமதேவன், முன்பள்ளிகளின் இணைப்பாளர் மா.ஸ்ரீதரன், யோகாசன அறநெறி ஆசிரியர் சோதிமூர்த்தி, அறநெறி இணைப்பாளர் எஸ். அமல்காந், பழைய மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவி திருமதி.யோ.சறோஜினி, தற்போதைய மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத் தலைவி திருமதி. தர்ஷா, திருமதி.ச.கிரிஷாந்தினி, நலன் விரும்பிகள் எனப்பலரும் கலந் துகொண்டனர்.

இம்முன்பள்ளி மாணவர்கள் 49 பேருக்கு, பாடசாலை உபகரணங்களும், மாலை நேரவகுப்பு மாணவர்கள் 25 பேருக்கு கற்றல் உபகரணங்களும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




நெல்லியடி வட்டலயன்ஸ் கழகம் வடமராட்சிகிழக்கு அம்பன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையிலுள்ள வறுமைக்கோட்டிற்குக கீழ் வாழும் கல்வியில் ஆர்வம் மிக்க மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கியது. இக்கற்றல் உபகரணங்களை பாடசாலை அதிபர் லயன் எஸ்.பரமேஸ்வரன் மாணவி ஒருவருக்கு வழங்குகிறார். லயன் பீ.நிர்மலன் லயன். எம்.லோகசிங்கம் ஆகியோரையும் படத்தில் காணலாம். (01)

## கண்டி வைத்தியசாலைக்கு மாற்றம்

கொக்காவில் பகுதியில் கடந்த மாதம் 30 ஆம் திகதி இடம் பெற்ற வெடி விபத்தில் காயமடைந்தவர் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. முல்லைத்தீவு துணுக்காய்ப் பகுதியை சேர்ந்த ஜெகதீஸ்வரன் ஜெயராஜ் என்பவரே இவ்வாறு கண்ணில் ஏற்பட்ட பாதிப்பு காரணங்களுக்காக மேலதிக சிகிச்சை பெறுவதற்கு கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

கடந்த 30ஆம் திகதி கிரவல் ஏற்றுவதற்காக கொக்காவில் பகுதிக்குச் சென்ற போது அப்பகுதியில் இருந்த குப்பைகளுக்கு சிலர் நெருப்பு வைத்தபோது இவ்விபத்து ஏற்பட்டிருந்தது. இதனையடுத்து காயமடைந்த ஜெ. ஜெயராஜ் மல்லாவி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து வவுனியா வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்பட்டிருந்தார்.

அங்கு சில நாட்கள் சிகிச்சை பெற்ற நிலையில் மீண்டும் மல்லாவி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் அவருடைய கண் பகுதியில் ஏற்பட்ட பார்வைப்பாதிப்பு காரணமாக தற்போது கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (160)

## கண் நோய் தொடர்பில் ஆய்வு

நாட்டில் கண் நோய்க்கு உள்ளாகும் நபர்களைக் கண்டறியும் வகையிலான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. நாட்டில் கண் நோய்க்கு உள்ளாகியுள்ளவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுவதே இதன் நோக்கமாகும்.

இதுவரை நாட்டில் கண் நோய் உள்ளவர்கள் தொடர்பான உரிய தகவல்கள் எதுவும் பதிவாகவில்லை என சுகாதார அமைச்சு குறிப்பிட்டது. இந்த ஆய்வு நடவடிக்கைள் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு மட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன. இந்த ஆய்வுகளை மேற்கொள்வோருக்கு பயிற்சியளிக்கும் நடவடிக்கைள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது. அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள இந்த ஆய்வு நடவடிக்கைகளுக்காக 40 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பித்தக்கது.

## சேவையிலிருந்து இளைப்பாறல்



(யாழ்ப்பாணம்)

சென்ட்றல் இன்வெஸ்ட்மென்ற் பினான்ஸ் நிறுவனத்தின் யாழ்.பிரதேச முகாமையாளர் ஆர்.இராஜாமகேந்திரசிங்கம் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார். (01.05.2013 இலிருந்து)

தேசிய சேமிப்பு வங்கியின் ஓய்வுநிலை முகாமையாளரான இவர் 40 வருட வங்கியியல் அனுபவத்தைக் கொண்டவர். 2008ஆம் ஆண்டு இவருக்கு 36 வருட வங்கிச்சேவைக்குரிய சாதனை விருதைச் சேமிப்பு வங்கிவழங்கிக் கௌரவித்தது.

மலேசியா, லண்டன் போன்ற நாடுகளில் சிறிது காலம் கணக்காளராகப் பணியாற்றியவர். சிங்கப்பூர் முகாமைத்துவப் பல்கலைக்கழகத்தில் முகாமைத்துவத் துறையில் பட்டம் பெற்ற இவர். லண்டன் கணக்கியல் நிபுணத்து வப்பட்டதாரியும், வர்த்தகத்துறை சிறப்புப் பட்ட தாரியுமாவார். நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க இயக்குநர் சபைத்தலைவராகவும் பணியாற்றியவர்.

இராமகிருஸ்ணாலயத்தினூடாக பல ஆன்மிக சமூக சேவைகளை முன்னெடுத்ததோடு இலக்கிய, நாட்டிய, இசைத்துறைகளுக்கும் பங்களிப்பு வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (01)

## அதிகாரங்களை இரத்துச்செய்யாது மாகாணசபைத் தேர்தல் நடாத்தவேண்டும்

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை இரத்துச் செய்யாது, வடமாகாண சபைத் தேர்தல் நடாத்தப்பட வேண்டும் என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார். சிங்களவர்கள் இலங்கையில் பெரும்பான்மை இனம் என்பதால், அவர்களுக்கு பிரச்சினைகள் இல்லை எனவும், தமிழ் மகக்களுக்கு அதனை விடப் பிரச்சினைகள் இருப்பதாகவும் வடக்கிற்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் கிடைக்கும் வகையில் தேர்தல் நடாத்தப்பட




வேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணி மற்றும் பொலிஸ அதிகாரங்களை இரத்துச் செய்ய அரசாங்கம் தயாராகி வருவதாக கூறப்படுகிறது. இந்த அதிகாரங்கள் இரத்துச் செய்யப்படுவதை நாங்கள் முற்றாக எதிர்க்கின்றோம். இதற்கு இடமளிக்க முடியாது. அத்துடன் இந்த அதிகாரப் பரவலாக்கம் போதுமானதல்ல. எனினும் நாட்டின் சட்டத்தில் உள்ள அதிகாரங்களை யாவது பாதுகாக்க வேண்டும். அதிகாரத்தைப் பரவலாக்குவதே பிரச்சினைக்கான சிறந்த தீர்வு. சிங்கள மக்கள் பெருபான்மையின மக்கள். அவர்களை விட அதிகளவான பிரச்சினைகள் தமிழ் மக்களுக்கு உள்ளன. அவர்கள் சகல பக்கங்களில் இருந்து அழுத்தங்களை எதிர் நோக்கி வருகின்றனர் எனவும் விக்ரம பாகு கூறியுள்ளார்.



முழங்காவில் செல்வயோக சித்தி விநாயகர் ஆலயத்தில் கடந்த 10ஆம் திகதி அன்று பிற்பகல் 3.30 மணிக்கு திருநாவுக்கரசு நாயனார் நினைவுதினம் கோலாகலமாக இடம்பெற்றது. ஏழு அறநெறிப்பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (09)

# முதியவர்களை முறையாகப் பயன்படுத்தி நாம் முன்நிலைக்கு வரவேண்டும்

## வடமராட்சி வடக்கு பிரதேச செயலர்

(வடமராட்சி)

நாட்டிற்காகவும், மக்களுக் காகவும் உழைத்து, ஓய்ந்தவர் களே மூத்தோர்கள், அவர்கள் எங்களுக்குக்கிடைத்த அரிய பொக்கிஷங்கள் அவர்களிடமி ருந்து நாங்கள் கற்கவேண்டிய விடயங்கள் பலவுள்ளன அவர் களை நாங்கள் முறையாகப் பயன்படுத்திக் கொள்ளவேண் டும். முதியோர்களின் தேவை களைப் பூர்த்திசெய்வதில் நாம் முன்னணியில் திகழவேண்டும் என பருத்தித்துறை மூத்தோர் பேரவைக்கூட்டத்திலே சிறப்பு ரையாற்றிய வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆர்.ரி ஜெய சீலன் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை மூத்தோர் பேரவைத்தலைவர் சிவா.கிருஸ் ணமூர்த்தி தலைமையில் பிர தேச செயலக மாநாட்டு மண் டபத்தில் இக்கூட்டம் நடை பெற்றது. தொடர்ந்து பிரதேச செயலர் உரையாற்றுகையில்

மூத்தோர் தங்களது அறிவு, அனுபவங்களை மற்றவர்களு டன் பகிர்ந்து கொள்ளவேண்டும். மாறிவரும் காலத்திற்கும், சமூ தாய மாற்றத்திற்கும் ஈடுகொடுக் கக்கூடியவகையில் முதியோர் கள் தங்களது அறிவாற்றல் களைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

எமது பிரதேச மூத்தோர்க ளுக்குச் சிறந்த சேவைகளை வழங்குவதற்கான நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன. எமது பிரதேசத்தில் மூத்தோர்களுக்குச் சேவையாற் றக்கூடிய பிரதேச மூத்தோர் பேரவை, ஓய்வூதியர்சங்கம் என் பன மிக சிறப்பாக இயங்குவது மகிழ்ச்சிக்குரியதாகும். மூத் தோர்கள் மூலம் எமது கலை கலாசாரங்கள்பேணிப்பாதுகாக் கப்பட்டு, வளர்க்கப்பட வேண் டும்.

எமது பிரதேசத்தில் 800முதி யோர்களுக்கு அரச விசேட கொடுப்பனவு 1000 ரூபா வழங் கப்பட்டுவருகின்றது. அவர் களுக்கு முதியோர் அடையாள அட்டைகளும் வழங்கப்பட்டுள் ளன. அவர்களுக்கான மருத் துவ முகாம்களும் நடாத்தப்படு கின்றன. கண்வில்லைகள் பொருத்துவதற்கும், கண் வைத் திய சிகிச்சையைப் பெற் றுக்கொள்வதற்கும் நிதி உத விகள் வழங்கப்படுகின்றன. மூன்று சில்லுவண்டிகள் கைத்த டிகள் போன்றனவும் வேண்டிய வர்களுக்குக்கிடைக்கின்றன.

முதியோர்களிடமிருந்து அறி வையும், ஆலோசனைகளை யும் பெறக்காத்திருக்கும் இன் றைய தலைமுறையினருக்கும் குழந்தைகளுக்கும் முதியோர் கள் உதவவேண்டும். முதியோர் களின் அறிவாற்றல், அனுபவங் கள் சமூதாயத்திற்கு மிக இன்றி யமையாதன.

சமூதாயத்திற்கு சேவை வழங்கும் உத்தம சிந்தனையுடன் முதியோர்கள் செயற்படும் போது சமூகம் உயர்வடையும் என்றார். (01)

# வடமராட்சியில் மகளிர்தின விழா

(வடமராட்சி)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலக சர்வதேச மகளிர் தின விழா இன்று செவ்வாய்க்கிழமை மூத்த விநாயகர் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெற வுள்ள இந்நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை உளநல வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி முல்லை பரமேஸ்வரன் பிர தம விருந்தினராகவும், FORUT- FRIENDS நிறுவன மாவட்ட திட்ட இணைப்பாளர் செல்வி இரா.ஜேஸ்வரி கார்த்திகேசு சிறப்பு விருந்தி னராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் கவிதை, நாடகம் நடன நிகழ்வு, பட்டிமன்றம் என்பன இடம்பெறவுள்ளன. (18)

# வேலையால் வந்தவர் தாக்கப்பட்டு காயம்

(மந்திகை)

வேலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய இளம் குடும்பஸ் தர் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற் றுக்கிழமை வரணி அல்லையம் பதி வீதியில் நடைபெற்றுள்ளது. சம்பவம் தொடர்பாக பருத்தித் துறை பொலிஸாரிடம் புகாரிடப் பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்ட வரின் பெற்றோர் தெரிவித்தனர். என்ன காரணத்திற்காக இவர் தாக்கப்பட்டார் என்பது தெரிய வில்லை. சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய் யப்படவில்லை. பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (150)


# பாலவேலை முடிந்தும் திறக்கப்படாத வீதி

(பூநகரி)

பூநகரி சங்குப்பிட்டி பிரதான வீதியில் கடந்த வருடம் வேலை கள் ஆரம்பிக்கப்பட்டு பத்திற்கும் மேற்பட்ட பால வேலைகள் நிறைவு பெற்று இரண்டு மாதத்திற்கு மேலாகியும் பிரயாணத் திற்காக திறந்து விடப்பட்டாமையால் குண்டும் குழியுமாய் இருக்கும் துணைவீதியால் வாகனத்தை செலுத்துவதில் தாம் பெரும் சிரம மடைவதாக வாகன சாரதிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் வாகனங்களும் சேதமடைவதோடு, நேர கால தாமதமும் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உரியவர்கள் வேண்டிய நடவடிக்கை எடுப்பார்களா என கேள்வி எழுப்பியுள்ளனர். (112)



யாழ். கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் புத் தாண்டு விழாவை முன்னிட்டு நடாத்தப்பட்ட சமூக சேவை யாளர்களுக்கான சமூக திலகம் விருது வழங்கும் நிகழ்வில் சமூக சேவையாளர் லயன் சி.ஜெயசங்கருக்கு கல்வியி யல்துறை பேராசிரியர் சின்னத்தம்பி பொன்னாடைபோர்த்தி விருது வழங்கிக் கௌரவிப்பதைக் காணலாம்.

# முன்பள்ளியின் பரிசளிப்பு விழா

(வடமராட்சி)

கந்த முருகேசனார் முன்பள் ளியின் வருடாந்த விளையாட் டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதா னத்தில் வடமராட்சி வலய ஆரம்ப பிள்ளைப்பருவ அபிவி ருத்தி உதவிக்கல்விப்பணிப் பாளர் சி. தில்லைநாதன் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந் தினராக வட இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் த.ரவீந்திரன் சிறப்பு விருந்தினராக புலோலி அபிவிருத்தி மன்றத் தலைவர் மா. ரஜீவ்காந்தன், புலோலி அபிவிருத்தி மன்றச் செயலாளர் த. பாலகிருஷ்ணப் பிள்ளை யாழ். சனசமூக நிலைய அபிவி ருத்தி உத்தியோகத்தர் பரமேஸ் வரி யோகராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (109)

# பதிவிறக்கப் பெட்டகம்

தேசியவாதி என்பவனுக்கு அடிப்படையிலான தத்துவத் திலேயே ஜனங்களுடைய ஆதரவைப் பெற்றுவிடக் கூடிய சௌகரியம் இருக்கிறது. அதாவது 'அந்நிய ராஜ்ஜியத்தைத் தொலைத்துவிட்டு 'சுயராஜ்யம் பெற வேண்டாமா?' என இலகுவா கக் கேட்டுவிட வேண்டியதுதான் தாமதம், ஜனங்கள் 'ஆம்' என்று தலையசைத்து விடுகிறார்கள். ஆனால் சமயச் சீர் திருத்தக்காரனோ 'நமது இந்துமதம், சமூகம் முதலியவற்றை அடியோடு புதுப்பிக்க வேண்டும்' என்று சொன்ன மாத்திரத்தி லேயே அவன் மேல் கோபம் வந்துவிடுவதோடு, 'ஆயிரக் கணக்கான வருஷங்களாய் இருந்து வந்ததை.. அழிக்கவா பார்க்கிறாய்' என்று ஆவேசம் கொண்டுகத்துகிறார்கள்.... இன, மொழி, கலாச்சாரம், பாரம்பரியம் ஆகியவற்றின் அடிப் படையில் எவ்வளவு எளிதாக சிவசேனை மாதிரி அரசியல் பேசுகிறவர்களுக்கு தியாகி, அறிஞர், இனப் போராளி என் கின்ற பட்டங்கள் கிடைத்துவிடுகின்றன... ஆனால் சீர்திருத்த வாதியோ 'சமயத்துரோகி', 'நாத்திகன்'.... என்ற பட்டங் களையும், தூஷணங்களையும், அவதூறுகளையும் பெற வேண்டியுள்ளது.. எல்லோராலும் புறக்கணிக்கப்பட வேண்டி யுள்ளது...

**– குத்தூசி குருசாமி**

உம்பெர்ட்டோ ஈகோ சொன்னதுபோல 'மாற்றுக் கருத்துக் கள்', "பன்முக வாசிப்புக்கள்' என்பதற்கெல்லாம் ஒரு எல்லை உண்டு. ஹிட்லர், முசோலினி, ஹெட்கேவர், சாவர்க்கர் இவர் களின் கருத்துக்களை 'மாற்றுக்கருத்துக்கள்' 'பன்முக வாசிப்பு' என்பதா, மக்கள் விரோதக் கருத்துக்கள் என எதிர்ப்பதா?

**– அ.மார்க்ஸ்**

குரல் எழுப்ப முடியாதவர்கள் என்று யதார்த்தத்தில் யாரும் கிடையாது. வேண்டுமென்றே மௌனம் சாதிப்பவர்கள். குரலை கேட்காதது போல் பாவனை செய்பவர்கள். இந்த இரண்டு வகையினர் தான் உண்டு.

**– அருந்ததி ராய்**

குழந்தைகள் திரும்ப வாங்கி விடக்கூடிய பொருட்க ளையே போட்டு உடைக்கின்றன.. பெரியவர்களைப் போல மனங்களை அல்ல!

**– சௌம்யா**


இன்று ஆயுர்வேதம் அங்கீகரிக்கப்பட்ட ஆறு மருத்துவ முறைகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. அதேசமயம் பல் வேறு மருத்துவ பிரதிநிதிகள், கிராம வைத்தியர்கள், ஆயாக் கள், மந்திரவாதிகள், ஜோசியர்கள், பூசாரிகள் மற்றும் பாட்டி மார்கள் போன்றோரையும் சமாளிக்க வேண்டியுள்ளது. தவிர பாம்பாட்டிகள், மஞ்சள் காமாலைக்கு மருந்து கொடுப்ப வர்கள், ஆண்மைக் குறைவை அகற்றுபவர்கள் எனப் பல கூட்டங்களையும் சமாளிக்க வேண்டியுள்ளது.

**– சித்த மருத்துவர் மகாதேவன்**


"பூமியில்
பூக்கட்டி
பீடி சுற்றி
சுண்டல் வடை விற்று
சுக்குக்காப்பி விற்று
எப்படியும் பிழைக்கலாம்
மண் மாதிரி இருந்தால் போதும்"
[விக்கிரமாதித்யன்]

மண்மாதிரி இருப்பது என விக்கிரமாதித்யன் சுரணை கெட்ட தனத்தை குறிக்கிறார். எனக்கு இன்னொன்று தோன்று கிறது. மோகன்லாலின் வெற்றியைப் பற்றி குறிப்பிடும் போது இயக்குநர் பிரியதர்ஷன் அவருக்கு ஒரு அப்பாவித்தனமான முகம் வாய்த்தது அனுகூலம் என்கிறார். அந்த முகத்தை கொண்டு சீரியஸாக நடித்தாலும் நகைச்சுவை பண்ணினா லும் மக்களுக்கு ஈர்ப்பாக இருக்கிறது. தமிழில் இது ரஜினிக் கும் பொருந்தும். அவர் பண்ணுகிற அதே ஸ்டைலை கமல் செய்தால் நமக்கு அது அலட்டலாக தோன்றி எரிச்சல் தருகி றது. எல்லாத்துக்கும் முகம் தான் காரணம். அன்றாட வாழ்வி லும் இது போல் அப்பாவி முகம் கிடைத்தால் நல்லது. என்ன தான் கிரிமினல் வேலை பண்ணினாலும் சனம் சீக்கிரம் நம்பி விடும். எவ்வளவு தான் புத்திசாலியாய் இருந்தாலும் அது சட்டென்று வெளியே தோன்றினால் உடன் இருப்பவர்கள் நம்மை வெறுப்பார்கள். புத்திசாலித்தனத்தை மறைக்க கற்க வேண்டும். அதற்கென்று முகத்தை மாற்ற முடியாதல்லவா! சராசரிகள் புத்திசாலிகளை பார்த்து அஞ்சுகிறார்கள். எதிரி களை கூட விட்டு விடுவார்கள். ஆனால் உங்களை தேடி தேடி அழிப்பார்கள். அதனால் சராசரிகளால் காரியம் ஆகவேண் டிய போது மண்ணைப் போல் இரு! அதற்குள் விதை, புதை யல், கண்ணி வெடி என்னவேண்டுனாலும் இருக்கலாம். ஆனால் மேலாக மண்ணைப் போல் இரு.

**– அபிலாஷ் சந்திரன்**



# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்



## தொடர்பாடல் ஊடகக்கற்கை - 1

P.இராஜேஸ்வரன் (ஆசிரிய வள ஆளணி, தொடர்பாடல் ஊடகக்கற்கை நெறி)
கொக்குவில் இந்துக் கல்லூரி.

*(கடந்த சனிக்கிழமை வெளியான வினாக்களின் தொடர்ச்சி...)*

41) தொடர்பை துணிபவர் தொடர்பை மற்றவர்களுடன் பகிர்ந்து ஒரு பொதுமைப் பாட்டை உருவாக்குவதற்கு அவர் குறித்த செய்தியை தனக்குள்ளே உள்வாங்கிக் கொள்கின்ற செயன்முறை
1. குறியவிழ்ப்புச் செயன்முறை
2. வழிமாற்றும் செயன்முறை
3. குறிமுறையாக்கும் செயன்முறை
4. உற்பத்தி செயன்முறை
5. ஊடுகடத்தி செயன்முறை

42)
- ஒலி வடிவங்களை ஆதாரமாக கொண்டமைந்தது
- சொல் சார் தொடர்புக்கு அடிப்படையானது
- சிந்தனையை நெறிப்படுத்துதல்
- அறிவை சேமித்தல்

இவை சுட்டுகின்ற மிகப் பொருத்தமான ஊடகம்
1.குரல் 2.மொழி
3.சைகை 4.கருவி
5.குறியீடு

43) "சமூகத்தின் எதிர்பார்ப்புக்கேற்ப சமூக வாழ்க்கைச் சந்தர்ப்பங்களின் போது நடந்து கொள்ளவேண்டிய முறைகளை கற்பது சமூகமயமாக்கல் செயன்முறையாகும்".
A – போலச்செய்தல்
B – பின்பற்றுதல்
C – தகவல் திரட்டல்
D – வகிபாகம் ஏற்றல்
E – தேடல் உணர்வு

இவற்றில் சமூகமயமாக்கல் காரணிகளுடன் மிகத் தொடர்புள்ளவை
1.A,B மாத்திரம் 2.A,B,D மாத்திரம்
3.C,D,E மாத்திரம் 4.A,B,C,E மாத்திரம்
5.A,B,C,D,E ஆகியன எல்லாம்

44) குறித்த சம்பவம் ஒன்று செய்தியாக மாற்றமடைவதற்கு முக்கிய காரணியாக அமைவது,
1.குறித்த சம்பவம் அண்மித்த தன்மையுடையதாக அமைவதன் மூலம்
2.ஏனைய சம்பவங்களிடையே வெளிப்படையாக தோன்றுவதன் மூலம்
3.வெகுசன ஊடகமொன்றில் அறிக்கையாக வெளிவருவதன் மூலம்
4.காலத்திற்கு ஏற்ற தன்மையை கொண்டிருத்தல் மூலம்
5.அதிக தாக்கத்தை பெறுநர் மீது செலுத்துவதன் மூலம்

45) நபரிடை தொடர்பாடல், தன்கைத் தொடர்பாடல் செயன்முறை தொடர்பான கூற்றுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A – நபரிடைத் தொடர்பில் உயர் மட்ட பின்னூட்டல் கிடைக்கும். வெகுசன தொடர்பில் தொடர்பாடுபவர் - பெறுநர் இடைவினைத் தொடர்பு உயர் மட்டத்தில் பேணப்படும்

B – நபரிடை தொடர்பில் தொடர்பாடுபவர் - பெறுநர் இடைவினைத் தொடர்பு பலவீனமானது. வெகுசன தொடர்பு ஒரு வழித் தொடர்பு (one way) தொழிற்பாட்டை கொண்டது.

C – நபரிடைத் இரு வழித் தொடர்பாடல் தொழிற்பாட்டை கொண்டது. வெகுசன தொடர்பு உயர் மட்ட மூலதனச்செலவீனங்களைக் கொண்டது

D –நபரிடைத்தொடர்பில் உடனுக்குடன் தூண்டல் - துலங்கலை விளங்கிக் கொள்ளலாம். வெகுசன தொடர்பில் உடனடியாக தூண்டல் - துலங்கல் வெளிப்பாட்டை அறிய முடியாது.

1) A, B உண்மையானவை C,D பொய்யானவை
2) A, C உண்மையானவை B,D பொய்யானவை
3) C, D உண்மையானவை A,B பொய்யானவை
4) A, D உண்மையானவை B,C பொய்யானவை
5) B, C உண்மையானவை A,D பொய்யானவை

46) "செய்தியாளருக்கும் செய்தி மூலத்திற்குமான தொடர்பு மிகச் சரியான செய்திகளை வழங்குவதற்கு அடிப்படையானது" இக்கூற்றின் அடிப்படையில் மிக வலுவான செய்தி மூலமாக அமையக்கூடியது
1) விரிவுரைகளும் கூட்டங்களும்
2) செய்தியாளர் மாநாடுகள்
3) செய்தி முகவர்கள்
4) அறிக்கைகள்
5) நாட்குறிப்பேடு

47) "ஊடகக் கொள்கை என்பது தனியார் அரச ஊடக உரிமைக்கு ஏற்ப வேறுபட்ட மைகின்றன" அரசாங்க வெகுசன ஊடகக் கொள்கையை பிரதிபலிக்காத அம்சமாக கொள்ளக்கூடியது
1) அரசாங்க ஆட்சியினை உறுதிபடுத்திக் கொள்ளுதல்
2) அபிவிருத்தி தொடர்பிலான தகவல்களை அறிக்கையிடுதல்
3) பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்குதல்
4) தேசிய நலன் சார்ந்த விடயங்களை வலுப்படுத்தல்
5) நாட்டின் அபிவிருத்தி சார் செய்திகளை மக்களுக்குத் தெரியப்படுத்தல்

48) மாணவர்களின் நூலகப்பயன்பாடு தொடர்பிலான செயற்பாட்டினை ஆய்வு செய்வதற்கும், தகவல்களை பெறுவதற்கும் மிகவும் பொருத்தமான ஆய்வு வழிமுறையாக அமையக்கூடியது
1) கலந்துரையாடல் மூலம்
2) செயன்முறை மூலம்
3) வினாக்கொத்து மூலம்
4) பேட்டி மூலம்
5) உற்றுநோக்குதல் மூலம்

49) செய்திக் கதைகளில் இடம் பெற்ற வாக்கியங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன இவற்றில் வழு இன்றிய வாக்கியமாக அமையக்கூடியது
1) போதைப் பொருள் கடத்தலை முறியடிப்பதற்கு மூன்று பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டது.
2) நேற்று இன்றும் நாளையும் கடும் காற்றுடன் மழை பெய்யும்.
3) ஐக்கிய தேசியக் கட்சி இம்முறை மேதினக் கூட்டத்தை கண்டியில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
4) என்மீது என் மனைவியே விவாகரத்து வழக்குத் தொடர்ந்து போனமாதம் விவாகரத்துப் பெற்று பிரிந்து விட்டோம்.
5) இன்றும் நாளையும் மழை பெய்யும்.

50) பின்வருவனவற்றில் அபிவிருத்தி ஊடகவியலின் இயல்பை பிரதிபலிக்காதது
1) மக்கள் சிந்தனையிலும் சமூக அமைப்புக்களிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் வல்லமை கொண்டவை
2) பொது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல்
3) அதிகாரிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் தகவல் தொடர்பை உருவாக்கிக் கொடுத்தல்.
4) பிரச்சினைகளில் மேலோட்டமாக கவனம் செலுத்துகின்றது அதே வேளை சம்பந்தப்பட்ட நபர்களில் அதீத கவனம் செலுத்துகின்றன.
5) மக்கள் பிரச்சினைகள் அவற்றை தீர்ப்பதற்கான செயல்முறைகளை கவனத்தில் கொள்கின்றன.

### பகுதி II

1)
1. கட்புல தொடர்பாடல் (visual communication) எண்ணக்கருவை அறிமுகம் செய்து, நான்கு எடுத்துக்காட்டுக்களைக் குறிப்பிடுக?

2. கட்புல (காட்சி வடிவ) தொடர்பு மொழி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் மூன்று கீழே இடம்பெற்றுள்ளன. அவை பற்றி விபரிக்குக.
அ) விளம்பரங்கள்
ஆ) போக்குவரத்து
இ) கலைகள்

3. எழுத்து மூலமான தொடர்பாடலை அறிமுகம் செய்து, நிறுவனம் ஒன்றில் பெருமளவில் பயன்படுத்துகின்ற வடிவங்கள் நான்கினைக் குறிப்பிடுக?

4. "நிறுவனம் ஒன்றின் வெகுசன தொடர்பு அதிகாரியிடம் தொடர்பாடல் மற்றும் ஊடகத் தேர்ச்சி நிலைகள் காணப்படுதல் அவசியமானது. வினைத்திறனுள்ள தும், வினைதிறன் மிக்கதுமான எழுத்து மூல ஆவணம் ஒன்றைத் தயாரிப்பதற்கு பொதுசன தொடர்பு அதிகாரியிடம் (Public Relation Officer) காணப்பட வேண்டிய எழுத்து மூல தொடர்பாடல் தேர்ச்சிகள் நான்கை குறிப்பிட்டு, அவற்றில் இரண்டைப் பற்றி விபரிக்குக?

2)
1. "தொடர்பாடல் செயலொழுங்கின் அடிப்படை உள்ளக தனியாள் தொடர்பாடலாகும்." உள்ளக தொடர்பாடல் செயலொழுங்கின் மூன்று படிமுறைகளையும் குறிப்பிடுக?

2. "ஞாபகமும் ஞாபகப்படுத்தலும் உளவியல் செயலொழுங்குகளாகும் தகவல்களை ஞாபகத்தில் வைத்திருப்பதற்கு கையாளக் கூடிய நான்கு உத்திகளைக் குறிப்பிட்டு அவற்றில் இரண்டைப் பற்றி சுருக்கமாக விளக்குக?

3. "சீரற்ற தகவல்களின் அடிப்படையில் எடுக்கப்படுவது சீரற்ற தீர்மானமாக அமையும்" பிரச்சினை ஒன்றைத் தீர்ப்பதற்கு தேவையான மிக அடிப்படைக் காரணியை குறிப்பிட்டு, தீர்மானம் எடுக்கின்ற தொழிற்பாட்டின் ஆறு படிமுறைகளையும் குறிப்பிடுக?

4. பிரச்சினை ஒன்றிற்கு ஆரோக்கியமான தீர்மானத்தை எட்டக்கூடிய நான்கு வழிமுறைகளைச் சுட்டிக்காட்டி அவற்றில் இரண்டைப் பற்றி விபரிக்குக?

3)
1."கற்றல்" என்பதை வரையறை செய்து, அதன் இயல்புகள் நான்கினைக் குறிப்பிடுக?

2. கற்றல் தொடர்பான இரு பிரதான கோட்பாடுகளைக் குறிப்பிட்டு, அவற்றில் உள்ளடக்கப்படுகின்ற பிரதான இரு கற்றல் விதிகளை எடுத்துக்காட்டி சுருக்கமாக விளக்குக?

3. 'குறித்த ஒரு நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக நிகழ்கின்ற கருத்து வெளிப்பாடு அல்லது பரிமாற்றம் பயனுள்ள பேச்சு ஆகும்." பயனுள்ள பேச்சு ஒன்றில் நீ அவதானிக்கக் கூடிய நான்கு இயல்புகளைக் குறிப்பிட்டு, அவற்றில் ஒன்றைப் பற்றி விபரிக்குக?

4."ஒன்றாக கருமமாற்றும் மனிதர் குழுக்கூட்டம்." குழுவாக செயற்படுகின்ற சந்தர்ப்பங்கள் நான்கினைக் குறிப்பிட்டு, அத் தொடர்பாடல் வகையில் நீர் அவதானிக்கக் கூடிய தனித்துவமான நான்கு அம்சங்களை விபரிக்குக?

4) "மொழி என்பது மனிதன் தனது கருத்தை வெளியிடப் பயன்படுத்திய சக்தி வாய்ந்த ஊடகம்"

1. தொடர்பாடல் கருமங்கள் மற்றும் வெகுசன ஊடக செயற்பாடுகளின் போதும் மொழி பயன்படுத்தப்படும் நான்கு வடிவங்களை (பேதங்களை) குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக?

2. " நவீன ஊடகங்களின் மொழிப் பயன்பாடு இலத்திரனியல் மொழியாக மாற்றமடைந்துள்ளது. நவீன ஊடகங்களின் மொழிப் பயன்பாட்டில் எதிர்நோக்க கூடிய இரண்டு மட்டுப்பாடுகளைச் சுட்டிக்காட்டி, அவற்றில் ஒன்றை விபரிக்குக?

3." பொது மக்கள் தொடர்பு நிலைகளில் ஊடக கலந்துரையாடலும் பிரதான இடம்பெறுபெறுகிறது" ஊடகக் கலந்துரையாடல் (Press Meet) என்றால் என்பதனைச் சுருக்கமாக விளக்கி, அதனை நடைமுறைப்படுத்துகின்ற போது கவனத்தில் கொள்ளவேண்டிய இரு இயல்புகளைக் குறிப்பிடுக?

4. ஒத்துணர்வு (Empathy) ஆரோக்கியமான தொடர்பாடல் அணுகுமுறைக்கு பயன்படும் நான்கு வழிமுறைகளை குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக?

5) **ஷெனோன் மற்றும் வீவர் ஆகியோரால் முன்வைக்கப்பட்ட தொடர்பாடல் மாதிரி கீழே தரப்பட்டுகின்றது**

[பெறுகை] → உச்சஸ்தானம் → [ஊடுகடத்தி தகவல் மூலாதாரம்] → [தடை]

1. குறித்த ஒரு செய்திக்கான தகவல்கள்கிடைக்கப்பெறுகின்ற மூலங்கள் நான்கினைக் குறிப்பிட்டு, அவற்றினைப் பயன்படுத்துவதன் மூலம் கிடைக்கப்பெறுகின்ற நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக?

2. தொடர்பாடல் செயன்முறையின் அடிப்படைக்கூறுகளில் ஒன்றாகிய தடையின் பேதங்களைக் கீழே தரப்பட்டுள்ள அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக?

அ) மொழி ஆ) கருவி

இ) கருத்தேற்றம் ஈ) ஆயத்தநிலை

3. "சிறுவர் துஷ்பிரயோகம்" என்னும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. சிறுவர் உரிமை, சட்டம் தொடர்பாக சட்டத்தரனி குமார் விரிவாக விளக்கமளித்தார். மேற்படி கருத்தரங்கு தொடர்பாடல் செயலொழுங்கிற்கு ஊடுகடத்தியாக பயன்படுத்தியிருக்க கூடிய எறிவை சார், எறிவை சாரா ஊடக உபகரணங்கள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக?

4. மேற்குறித்த மாதிரிக்கும் ஒஸ்குட் மற்றும் ஷ்ராம் மாதிரிக்கும் இடையிலான இரண்டு வேறுபாடுகளைக் குறிப்பிட்டு விபரிக்குக?

6) "விழிப்புணர்வு மிக்க பெறுநர் மற்றும் ஊடக எழுத்தறிவு பற்றிய செயலமர்வின் பின்னர் நல்ல பாடல்களை இரசிப்பதற்கும், நல்ல படங்களைப் பார்ப்பதற்கும், ரெலி நாடகங்களைப் பார்ப்பதில்லை என்ற தீர்மானத்திற்கும் மாலா வந்தாள்".

1.ஊடக எழுத்தறிவு என்ற எண்ணக்கருவை சுருக்கமாக விளக்கி, விழிப்புணர்வு மிக்க பெறுநர் ஆகிய மாலாவிடம் இனங்காணக்கூடிய இரு இயல்புகளைச் சுட்டிக்காட்டுக?

2. குமார் கிராமத்தின் பிரச்சினை ஒன்றை இனங்கண்டு, அவற்றை மக்களிற்கும், ஆட்சியாளருக்கும் தெரியப்படுத்தவும், கவனத்தில் கொண்டுவரச் செய்யவும் செய்திக் கதை ஒன்றினை எழுதினான். இவ்வாறான ஊடக அறிக்கையிடல் போக்கு எவ்வாறு அழைக்கப்படும்? அதில் நீர் அவதானிக்க கூடிய இரு இயல்புகளைக் குறிப்பிடுக?

3. தொலைக்காட்சி, இல்ல கலாசாரம் என்ற எண்ணக்கருவை விளக்கி, அவற்றின் ஊடாக வன்முறைகள் வெளிக்கொனரும் விதத்தை நான்கு எடுத்துக் காட்டுகளை அடிப்படையாகக்கொண்டு விபரிக்குக?

4. பொறுப்பு வாய்ந்த பிரஜை என்ற அடிப்படையில் கூட்டாக வாழும் சமூகத்தை உருவாக்கும் அடிப்படையில் தொடர்பாடல் செயன்முறைகளையும், வெகுசன ஊடக அறிக்கையிடல்களையும் மேற்கொள்ளும் நான்கு வழிமுறைகளைக் குறிப்பிட்டு விபரிக்குக?

7) "ஆக்கரீதியான தொடர்பாடல் பிரவேசங்களைத் தொடர்பாடல் நிலைகளிலும், வெகுசன ஊடக அறிக்கையிடல்களிலும் அவதானிக்க முடிகிறது."

1. ஆக்கரீதியான தொடர்பாடல் வடிவங்கள் நான்கினை எடுத்துக்காட்டி அவற்றில் அவதானிக்ககூடிய இரு இயல்புகளைத் தருக?

2. மரபு சார்ந்த அடிப்படையிலும், கிராமிய மக்கள் மத்தியிலும் பின்பற்றப்பட்டு வருகின்ற ஆக்கத் தொடர்பாடல் வடிவங்கள் நான்கினைக் குறிப்பிட்டு, அவை மக்கள் மத்தியில் வலுவுள்ள தொடர்பாடல் ஊடகமாக இருப்பதற்கான காரணிகளை இரண்டு அம்சங்களைக் கொண்டு விபரிக்குக?

3. பத்திரிகை ஒன்றில் நீர் அவதானிக்க கூடிய ஆக்க ரீதியிலான அறிக்கை யிடல்கள் நான்கினை எடுத்துக்காட்டி அவற்றில் இரண்டைப்பற்றிச் சுருக்கமாக விளக்குக?

4. தொடரறா ஊடகவியலில் (Online Media) இணையம் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. நவீன ஊடகம் (New media) என்ற அடிப்படையில் தொடரறா ஊடகத்தின் தனித்துவமான அம்சங்கள் நான்கினைக் குறிப்பிட்டு விபரிக்குக?

# க.பொ.த. (உயர்தர) மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்

**English** **Time: 2 hours**

**Answer all questions on this paper itself.**

## Part I

**Test 1**

**Complete the following text with a suitable word given below. One is done for you.**

| but, | first, | once, | who, | whom |
|---|---|---|---|---|

Mr. Silva once went to see Kamal ..................... works in Bank of Ceylon. ...................... he talked to the receptionist ........................ mood was not pleasant. Mr.Silva told her about the person ........................ he wanted to meet ..................... She didn't hear him. She was reading a book which was titled as " Anupa and His Friends". *[ 5marks ]*

**Test 2**

**A survey was done in a class of 40 students regarding the games they like. Study the bar – chart and fill in the blanks using the following words.**

| more, | most, | less, | least, | equal |
|---|---|---|---|---|

The (1) .................. number of students like cricket. (2) ...................... students like tennis than football. The number of students who like tennis is (3) ...................... than the number of students who like kabadi. (4) ...................... number of students like netball and tennis. Number of students who like chess is the (5) .................. .

[ 5marks ]

**Test 3**

**The following are good and bad habits for road safety. Write G for good and B for bad in the blanks.**

1. Travel on food board. ----------------------------------------------

2. Give a clear signal for the bus to stop . -----------------------------

3. Don't toot your horn all the time ----------------------------------

4. Use mobile phones while driving . ------------------------------

5. Pedestrians should use the pavement. ---------------------------

[5marks]

**Test 4**

**Underline the correct answer.**

a) ......................... is famous for Kantha embroidery.

1. Sri Lanka 2 India 3. Japan

b) Number of officials supervise a kabadi game is ................

1. five 2. four 3. seven

c) Stars were all hidden by the murky sky, 'Murky ' means .............

1. dark 2. clear 3. cold

d) A component in the computer system that is compared to human brain is ....

1. monitor 2. mouse 3. CPU

e) Feminine gender for administrator is ..........................

1. administratoress 2. administratrix 3. administrix

[ 5 marks]

**Test 5**

**Read the given poem and answer the questions given below.**

Boy in a faded blue pull over,
Poor boy, thin smiling boy,
Ran down the door shouting,
Singing, flinging his arm wide,
I stood in the way and stopped him,
"What 's up?" I said. "Why are you happy?"
He showed me the shining five rupee.
"I found it on the road," he said.
And he held it to the light.
That he might see it shining bright.
"And now will you spend it,
Small boy in blue pull over?"
"I'll buy – I'll buy
I'll buy a buckle for my belt."
Slim boy, smart boy,
Would buy a buckle for his belt
Coin clutched in his hot hand.
He ran off laughing, bright. The coin I 'd lost an hour ago:
But better his that night.

1. Why was the boy happy?

--------------------------------------------

--------------------------------------------

2. How did he plan to spend it?

--------------------------------------------

--------------------------------------------

3. How does the author identify the boy?

--------------------------------------------

--------------------------------------------

4. Whom did the coin belong to?

--------------------------------------------

--------------------------------------------

5. What are the adjectives used by the poet to describe the boy?

[ 5 marks ]

**Test 6**

**Read this short text and answer the question given below.**

In ancient times when people looked up at the starry night sky, they thought they saw shapes in groups of stars. Constellations of stars after heroes and beasts from stories and after every day objects. You probably know some constellations. They Big Dipper looks like a giant pot with a long handle. The constellation Orion is named after a hunter in Greek mythology. You can see his belt, marked by three bright stars and his sword which hangs from his belt. [ 5 marks]

1. What is a constellation ?

--------------------------------------------

2. How did the ancient people name the constellations ?

--------------------------------------------

3. What are the constellations mentioned here?

--------------------------------------------

4. What is the shape of the Big Dipper ?

--------------------------------------------

5. What does Orion look like ?

--------------------------------------------

**Test 7**

**Read the text and answer the questions below.**

King Alfred was a famous English ruler. He was called Alfred the Great because he did many things. He brought fame and prosperity to the country. Above all he saved the country from foreign invasions. To do this he had to fight many battles. He was victorious in most of the battles. But he was defeated in the battle against the Danes and he had to flee for his life. He disguised himself as a poor wanderer and sought shelter in an old woman's cottage. She was baking cake at the fire when she wanted to go out. So she asked the strange visitor to stay and watch her cake. She reminded him to do so but he began to think of plans to defeat the enemy and forgot to watch the cake, though he was looking at the fire. When the woman returned she found that the cake was burnt. As she did not recognize the stranger she began to chide him, because he had allowed the cake to spoil. The king bore it with patience since he did not want to show his identity.

1. What was King Alfred's service to the country?

--------------------------------------------

--------------------------------------------

2. By whom was he defeated?

--------------------------------------------

3. Where did he seek shelter?

--------------------------------------------

4. Why did he forget to watch the cake?

--------------------------------------------

5. Why didn't the woman recognize the king?

--------------------------------------------

[ 5 marks ]

**Test 8**

**The following are some questions asked from a student at an interview. Match the questions with the answers . Write the number of the question in the correct box.** [ 5 marks ]

1. What is your name?
2. When is your birthday?
3. Tell me about your parents?
4. Are there any other extra curricular activities?
5. Have you ever been punished for any misbehaviour?
6. What does R.P.A. stand for ?
7. Where do you live?
8. Do you do any sports?
9. Why do you want to apply for a prefect post?
10. What are your future ambitions?

My father is a principal and my mother is a housewife.
I want to be a doctor and a good citizen one day.
I live in Danpallassa near Narammala.
Because I think I can help my fellow students to behave well.
I was born on the 22nd March in 1990.
Ranasingha Patabandi Arachchilage
Yes, I'm a member in the College Rugby Team.
Yes, Sir only once for been late to the class after practice.
Yes, Sir, I'm the secretary of the English Club.
I'm R.P.A.Senaka

**Part II**

**Test 9**

**You want to meet Dr. R. Rajeevan, the president of Nallur Lions Club to get some information about Lions Club as your have to write an article for your school magazine. Write a letter to the secretary of the club requesting an appointment to meet their president.**

--------------------------------------------

--------------------------------------------

--------------------------------------------

--------------------------------------------

--------------------------------------------

--------------------------------------------

[ 10 marks]

**Test 10**

**Transform the following sentences into Active or Passive.**

1. The visitor was inquired by the natives.

--------------------------------------------

2. The ball was hit by John.

--------------------------------------------

3. Raju sells fruits.

--------------------------------------------

4. The officer confirmed the matter.

--------------------------------------------

5. T.B.Jaya opened new schools.

--------------------------------------------

[ 5 marks]

# பொது அமைதியைக் குலைக்கும் கட்சிகளைத் தடைசெய்யத் தயார்

## முதல்வர் ஜெயலலிதா எச்சரிக்கை



(சென்னை)

பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் கட்சிகளைத் தடை செய்ய தமிழக அரசு தயங்காது என முதல்வர் ஜெயலலிதா சட்டசபையில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மாமல்லபுரத்தில் நடந்த சித்திரைத் திருவிழாவில் கலந்து கொள்ளச் சென்ற வன்னியர் சங்கத்தினருக்கும், மரக்காணம் காலனி மக்களுக்கும் இடையே கலவரம் வெடித்தது. பலர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக ராமதாஸ், அன்புமணி ராமதாஸ் உள்ளிட்ட ஏராளமான பா.ம.க.வினர் கைது செய்யப்பட்டனர். தமிழக அரசு திட்டமிட்டு பா.ம.க.வினர் மீது வழக்குப் போடுவதாக குற்றம் சாட்டினார்.

இந்நிலையில் சட்டசபையில் வடமாவட்டங்களில் நிலவும் பதற்றம் குறித்து காங்கிரஸ், கம்யூனிஷ கட்சிகள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தன. இந்தத் தீர்மானத்திற்கு பதிலளித்து. பேசிய முதல்வர் ஜெயலலிதா கூறியதாவது, பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கும் கட்சிகளைத் தடை செய்ய தமிழக அரசு தயங்காது. தமிழக அரசும், பொலிஸாரும் திட்டமிட்டு வழக்கு தொடர்வதாக ராமதாஸ் பேசுவது அபத்தமானது. பிணையில் வெளிவந்த பின்னரும் பா.ம.க.வினரை தூண்டிவிடும் வகையில் பேசி வருகிறார். ராமதாஸ் மீது தமிழக அரசு சார்பில் அவதூறு வழக்கு தொடரப்படும். பா.ம.க.வின் சட்டவிரோத நடவடிக்கைகளைப் பொறுத்துக் கொள்ள முடியாது. ராமதாஸ் கைது செய்யப்பட்ட பின்னர் பொதுச்சொத்துக்களுக்கு பா.ம.க.வினர் சேதம் ஏற்படுத்தினர். கலவரத்தின் போது சேதமான சொத்துக்களுக்கு பா.ம.க. விடமிருந்து நஷ்ட ஈடு பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சேதம் குறித்து கணக்கிடப்பட்ட பின்னர் பா.ம.க.விடமிருந்து நஷ்ட ஈடு பெறப்படும்.

அரசியல் கட்சிகள் தங்களது எதிர்ப்புகளை ஜனநாயக முறைப்படிதான் தெரிவிக்க வேண்டும். வன்முறையில் ஈடுபடக்கூடாது. அரசியல் கட்சிகள் மற்றவர்களுக்கு முன்மாதிரியாக திகழ வேண்டும். ஆனால் பா.ம.க.வினர் வன்முறையில் ஈடுபட்டனர். இதனால் வடமாவட்ட மக்கள் அச்சத்தில் உள்ளனர். இதனைப் போக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. வன்முறையில் ஈடுபடும் எந்த அரசியல் கட்சிகளையும் தடை செய்ய அரசு தயங்காது எனக் கூறினார்.

இந்தியச் செய்திகள்

# சென்னையை தாக்கியது 'மகாசென்' சூறாவளி

(சென்னை)

சென்னை உள்ளிட்ட பல்வேறு வட மாவட்டங்களில் மகாசென் என பெயரிடப்பட்ட புயலின் தாக்கத்தால் நேற்றுமுன்தினம் இரவு சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்துள்ளது. தற்போது சென்னைக்கு 850 கிலோமீற்றர் தொலைவில் மையங்கொண்டுள்ள மகாசென் புயல் வங்கதேசம் மற்றும் மியன்மார் இடையே எதிர்வரும் 17ஆம் திகதி கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மகாசென் புயல் காரணமாக தமிழகத்தில் மழை பெய்யலாம் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், நேற்றுமுன்தினம் இரவு சென்னையில் பலத்த சூறைக் காற்றுடன் கன மழை கொட்டித் தீர்த்தது. இச்சூறாவளி தொடர்ந்து வட மேற்குத் திசையில் நகர்ந்து 36 மணி நேரத்தில் வட கிழக்குத் திசையில் நகரும். பின்னர் மே 17ஆம் திகதி அது வங்கதேசம் - மியன்மார் இடையே கரையைக் கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, சென்னையைப் போலவே வேலூரிலும் பலத்த சூறாவளிக் காற்றுடன் கன மழை பெய்துள்ளது. கனமழையின் தாக்கத்தால் அப்பகுதியில் அமைந் துள்ள 50 வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும், 50 குடிசை வீடுகள் கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வருவாய்த்துறையினர் மீட்புப் பணிகள் செய்து வருவதுடன், புயலால் பாதிக்கப்பட்ட மக்கள் அங்குள்ள அரசு பள்ளியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

# பிரதமர் பதவி விலகினால் சி.பி.ஐ. விசாரணை நடக்கும்




அதிகரித்து வரும் பாலியல் குற்றங்களைத் தடுக்க, இளம் குற்றவாளிகளுக்கான வயது வரம்பை 18இலிருந்து 16ஆகக் குறைக்க வேண்டும் என மத்திய அரசுக்கு நாடாளுமன்ற நிலைக் குழு பரிந்துரை செய்துள்ளது. நிலைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. வயது வரம்பைக் குறைப்பதற்கான காரணத்தையும் நிலைக்குழு விளக்கியுள்ளது. 2010ஆம் ஆண்டில் 22740 குற்றங்களை இளம் குற்றவாளிகள் செய்துள்ளதாகவும், 2011ஆம் ஆண்டில் மேலும் 10.5வீதம் அதிகரித்துள்ளதாகவும் நிலைக்குழு விளக்கம் அளித்துள்ளது.

குறிப்பாக 16 முதல் 18 வயதுக்கு உட்பட்டவர்களே குற்றச் செயல்களில் அதிகம் ஈடுபட்டு இருப்பது தற்போது தெரியவந்துள்ளது என்றும் நிலைக்குழு கூறியுள்ளது. பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளும் ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருவதாகக் கூறியுள்ள நிலைக்குழு, அதிகரித்து வரும் பாலியல் குற்றங்களைத் தடுக்க, இளம் குற்றவாளிகளுக்கான வயது வரம்பை 18இலிருந்து 16 ஆகக் குறைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது.



ஊட்டியில் கோடை சீசனையொட்டி, நேற்று 12வது ரோஜா கண்காட்சி நடந்தது. இதில், 15 அடி உயரத்தில், 20 ஆயிரம் ரோஜா மலர்களினால் வடிவமைக்கப்பட்ட புறா, சுற்றுலாப்பயணிகளைக் கவர்ந்தது.

# இந்தியப் பெண்களின் சக்திக்கு தலை வணங்குகிறேன் - மோடி



(ஆமதாபாத்)

இந்தியப் பெண்களின் சக்திக்கு தலை வணங்குகிறேன் என அன்னையர் தினத்தை முன்னிட்டு தனது வாழ்த்தைத் தெரிவித்தார் குஜராத் முதல்வர், நரேந்திர மோடி.

18 அமெரிக்க நகரங்களில் வீடியோ கான்பரன்ஸ் தொழில்நுட்பம் மூலம், இந்தியாவில் இருந்தவாறே, அமெரிக்க வாழ் இந்திய மக்கள் மத்தியில் உரையாற்றிய போது இவ்வாறு கூறினார்.

இந்தியக் குடும்ப அமைப்பு பலத்தை அதிகரிக்கிறது. வெளிநாடு வாழ் குஜராத்தியர் உதவுவது எனக்கு மட்டுமல்ல 6 கோடி குஜராத்தியர்களுக்குப் பயனளிக்கும். உங்களது பாராட்டு எனக்கு மேலும் பலத்தைக் கூட்டுகிறது என்றார்.

நர்மதா குடிநீர்த் திட்டம், குஜராத்தில் நர்மதா குடிநீர்த் திட்டத்தை 9000 குடும்பங்களுக்குக் கிடைக்க வழி செய்யும் திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றார்.

நாம் அனைவரும் குஜராத் வளர்ச்சிக்கு பாடுபடுவோம். குஜராத் மாநிலத்தின் ஒவ்வொரு பகுதியும் வளர்ச்சியின் அடிப்படையிலே மேம்பாடு அடைகிறது. ஒவ்வொரு பிரச்சினையையும் இந்தியாமட்டுமல்ல உலகமே எதிர்கொண்டுவருகிறது என்றார்.

# சமூக நலத்திட்டங்களில் திரை நட்சத்திரங்கள்





(டில்லி)

நடிப்பது ஒருபக்கம் இருந்தாலும், மக்களுக்குச் சேவை செய்வதில் பாலிவுட் பிரபலங்கள் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர். கடந்த 40 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது மகாராஷ்டிரா மாநிலம்.

இம்மாநில மக்களுக்கு தங்களால் இயன்ற அளவு உதவிகளைபாலிவுட் பிரபலங்கள் செய்து வருகின்றனர்.

நடிகர் சல்மான்கான், தனது பங்காக 2500 தண்ணீர்த் தொட்டிகளை இலவசமாக வழங்கி உள்ளார். முதற்கட்ட மாக 400 தண்ணீர்த் தொட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

தன்னை நடிகராக நினைக்காமல் ஒரு சாதாரண மனிதனாக நினைத்தே இதைச் செய்ததாக சல்மான்கான் தெரிவித்துள்ளார்.

சல்மான்கான் மட்டுமின்றி பிரபல பின்னணிப் பாடகி ஆஷா போன்ஸ்லே முதல்வர் நிவாரண நிதிக்காக ரூ.5 இலட்சம் வழங்கி உள்ளார். ராஜ்கபூர் நினைவு விருது அறக்கட்டளை சார்பில் நானா படேகர் ரூ.10 இலட்சம் வழங்கி உள்ளார்.

# கர்நாடக முதலமைச்சர் பதவியேற்பு



கர்நாடகாவின் 22ஆவது முதல் வராக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சித்தராமையா பதவியேற்றார்.

ஸ்ரீகண்டீரவா திடலில் நடந்த பதவியேற்பு விழாவில், சித்தராமையாவுக்கு ஆளுநர் பரத்வாஜ் பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

மற்ற அமைச்சர்கள் பின்னர் பதவியேற்கவுள்ளனர்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ......................................

முகவரி : ......................................

பிறந்த ஆண்டு : ......................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

......................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# பங்களாதேஷ் எதிர்க்கட்சித்தலைவருக்கு போர்க்குற்ற வழக்கில் மரண தண்டனை



(டாக்கா)

போர்க்குற்ற வழக்கில் பங்களாதேஷ் எதிர்க்கட்சித்தலைவருக்கு தூக்குத்தண்டனை விதிககப்பட்டுள்ளது. பங்களாதேஷில் கடந்த 1971ஆம் ஆண்டு நடந்த சுதந்திர போராட்டத்தின்போது துன்புறுத்தப்பட்டு பலர் கொல்லப்பட்டனர். அவர்கள் மீது நீதிமன்றம் போர்க்குற்ற வழக்குகள் நடந்து வருகின்றன. அதற்காக டாக்காவின் போர்க்குற்ற நடுவர் நீதிமன்றம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு தற்போதைய எதிர்க் கட்சியான ஜமாத்-இ- இஸ்மாகி கட்சி தலைவர் முகமது கமாருஷமான் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

சுதந்திர போராட்டத்தின் போது வடக்குப்பகுதியில் உள்ள சோஹாபூர் கிராமத்தில் பாகிஸ்தான் இராணுவ உதவியுடன் 120 விவசாயிகளை சுட்டுக் கொன்றார். அதன்மூலம் அக்கிராமத்தில் உள்ள பெண்களில் பெரும்பாலானோர் விதவைகளாகினர். விசாரணையின்போது அப்போது நடந்த கொடுமைகளை நீதிமன்றம் வந்து விதவை பெண்கள் நேரடியாக சாட்சியம் அளித்தனர்.

அதை ஏற்றுக் கொண்ட நீதிமன்றில் முகமது கமாரு' மானுக்கு தூக்கு தண்டனை (மரண தண்டனை) விதித்து நேற்றுமுன்தினம் தீர்ப்பளித்தது. இதேவேளை, தன் மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை கமாருஷ மான் மறுத்துள்ளார். அரசியல் ரீதியாக என் மீது இந்த வழக்குத் தொடரப்பட்டுள்ளது. தூக்குத் தண்டனையை எதிர்த்து மேல் முறையீடு செய்வேன் எனத் தெரிவித்துள்ளார்.



ஈரானில் அடுத்த மாதம் அதிபர் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், தலைநகர் தெஹ்ரானில் தனது ஆதரவாளர்கள் மற்றும் உறவினர்கள் புடைசூழ, தனது வேட்புமனுவை தாக்கல் செய்த முன்னாள் அதிபர் அக்பர் ஹாசேமி ர.்.ப்சஞ்ஜனியை படத்தில் காணலாம்.

# பாகிஸ்தான் – இந்தியா நல்லுறவு பேணப்படும்

இஸ்லாமாபாத் பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலில் பாகிஸ்தான் முஸ்லீம் லீக் கட்சி வெற்றி பெற்று நவாஸ் ஷெரீப் 3ஆவது முறையாக பிரதமர் பதவியை ஏற்க உள்ளார். இந்நிலையில் தேர்தல் வெற்றி குறித்து கட்சி தொண்டர்களிடம் பேசிய போது கட்சியின் வெற்றியை மக்களுக்கு சமர்ப்பிக்கிறேன். என் மீது நம்பிக்கை வைத்து வாக்குப்போட்டு வெற்றி பெற வைத்துள்ளனர். நான் எனது ஆட்சிக்காலத்தில் நல்ல முறையில் ஆட்சி செய்வேன். இந்தியா-பாக் நல்லுறவுக்கு முக்கியத்துவம் கொடுப்பேன் எனக் கூறினார்.

# 10 ஆப்கான் நாட்டவர்கள் ஈரான் எல்லைக்குள் சுட்டுக்கொலை



ஈரான் நாட்டு எல்லையில் சட்டவிரோதமாக நுழைய முயன்ற 10 ஆப்கானிஸ்தானியர்களை எல்லை பாதுகாப்பு படையினர் சுட்டுக் கொன்றனர்.

ஆப்கானிஸ்தான் மேற்குப் பகுதியில் உள்ள ஹெராட் மாகாணத்தில் இருந்து ஈரான் எல்லைக்குள் 200இற்கும் மேற்பட்ட ஆப்கானிஸ்தான் நாட்டவர் வெள்ளிக்கிழமை இரவு நுழைய முயன்றனர்.

அப்போது ஈரான் எல்லை பாதுகாப்புப் படையினர் துப்பாக்கியால் சுட்டதில் 10 பேர் உயிரிழந்தனர். 12இற்கு மேற்பட்டோர் காய மடைந்தனர்.

ஆப்கானிஸ்தானின் பொருளாதாரம் மோசமான நிலையில் உள்ளதால் வேலைவாய்ப்பைத் தேடி ஆண்டுதோறும் ஏராளமான ஆப்கானியர்கள் சட்டவிரோதமாக ஈரானுக்குள் நுழைகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கைமாறுகிறது டைனோசர்ஸ்




மங்கோலியா நாட்டிலிருந்து 7 கோடி ஆண்டுகள் பழமையான டைனோசர்ஸ் எலும்புக்கூடுகளின் படிமங்கள் கடந்த 2010ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கு கடத்தப்பட்டன.

இந்நிலையில் மங்கோலியா அரசு,' டைனோசர்ஸ் அருங்காட்சியகம் ஒன்றை அமைக்க இருப்பதாக அறிவித்தது.


இதனையடுத்து மங்கோலியாவில் இருந்து அமெரிக்காவிற்கு கடத்தி வரப்பட்ட 10இற்கும் மேற்பட்ட டைனோசர்ஸ் எலும்புக்கூடுகளின் படிமங்களை கொடுக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளது.

ஒரு நாட்டின் கலாசார நலனை கொள்ளை அடிப்பவர்களையும், சதிகாரர்களின் செயலையும் அனுமதிக்க முடியாது என்று அமெரிக்கா கூறியுள்ளது.

நாளை நியூயோர்க்கில் நடக்கும் நிகழ்ச்சியில் இவைகள் ஒப்படைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகச் செய்திகள்

# கனடாவில் காது கேளாதவருக்கு புதிய சிகிச்சையில் சாதனை



கனடாவிலுள்ள ஒண்ட்டேரியா மருத்துவர்கள் காது கேளாதவர்களுக்கு எலும்புப் பாலம் என்ற புதிய சிகிச்சை மூலமாக நன்றாகக் காது கேட்கும்படி செய்துள்ளனர்.

எலும்புப்பாலம் என்ற சிறிய கருவியை தலைமுடிக்கு உள்ள தோலுக்கு அடியில் அறுவை சிகிச்சை செய்து பொருத்திவிட்டுப் பின்னர் வெளியே ஒரு சிறிய ஒலிபெருக்கியைப் பொருத்திவிட்டால் போதும்.

இந்தக் கருவி தற்பொழுது கனடாவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. நடுக்காதிலும், வெளிக்காதிலும் பிரச்சினை உள்ளவர்களுக்கு இந்த எலும்புப்பால சிகிச்சை நல்ல பலனைத் தரும்.

பழைய கருவியைப் போன்று இது பெரிதாக இருக்காது. இதை மாட்டுவதற்கு உலேகக் கொக்கியும் தேவையில்லை. உள்ளேயும், வெளியேயும் இணைக்க காந்தம் பயன்படுத்தப்படுவதால் இது ஒரு கம்பியில்லாத தொழில்நுட்ப முறையாகும்.

கிட்ச்னெரிலுள்ள கிராண்ட் ரிவர் மருத்துவமனையில் 51 வயது கெல்லி டிக்சன்(Kelly Dickson) என்ற பெண்ணுக்கு இந்த எலும்புப்பால சிகிச்சை நல்ல வெற்றியைத் தந்துள்ளது.

இது குறித்து அறுவை சிகிச்சை செய்த மருத்துவர் சுமித் அகர்வால்(Sumit Agrawal) ஊடகத்திற்கு அளித்த பேட்டியில், உள் காது கேட்கவில்லை என்றால் உறுப்பு மாற்ற சிகிச்சை பலன் தரும். ஆனால் முழுக்காதும் கேட்காது என்ற பொழுது இந்த எலும்புப்பால சிகிச்சை நல்ல பலனைத் தரும்.

இந்தக் கருவி தலைமயிருக்குள் பொருத்தப்படுவதால் வெளியே தெரியாது. மேலும் இந்த அறுவைசிகிச்சை 3000 டொலர் முதல் 5000 டொலர் வரை செலவாகும் என்று தெரிவித்துள்ளார்.

# பெண்ணுக்குப் பாலியல் தொந்தரவு; ஜனாதிபதி அலுவலகம் மன்னிப்பு



தென்கொரிய ஜனாதிபதியின் முன்னாள் செய்தி தொடர்பாளர் பாலியல் குற்றங்களில் ஈடுபட்டதற்காக ஜனாதிபதி அலுவலகம் மன்னிப்புக் கோரியுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் தென்கொரிய ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பார்க் முதன்முறையாக கடந்த வாரம் (மே 5 - 9)அமெரிக்காவுக்கு சென்றிருந்தார்.

இந்தப் பயணத்தின் போது, அவருடன் சென்றிருந்த செய்தித் தொடர்பாளர் யூன் சாங்-ஜங், கொரிய அமெரிக்க பெண்ணுக்குப் பாலியல் தொந்தரவு கொடுத்ததாக புகார் எழுந்தது.

இதையடுத்து நாடு திரும்புவதற்கு முன்பே யூன் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

இதுதொடர்பாக ஜனாதிபதி அலுவலக தலைமை அதிகாரி ஹியூ டே-இயோல் செய்தியாளர்களிடம் கூறுகையில், யூன் தலைகுனிவை ஏற்படுத்தும் செயலில் ஈடுபட்டுள்ளார். அது ஒரு வெட்கக்கேடான சம்பவம்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண மற்றும் அவரது குடும்பத்தினரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், நாட்டு மக்களிடமும், வெளிநாடுகளில் வசிக்கும் கொரிய மக்களிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறோம் என்றார்.


இதற்கிடையே இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்தி வருவதாக வாஷிங்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர். ஆனால் யூன் தன் மீதான குற்றச்சாட்டை மறுத்துள்ளார்.

# நிர்ணயிக்கப்பட்ட தொகையைவிட பத்து மடங்கு அதிக ஏலம்

சீன தலைவரின் புகைப்படம் 30 இலட்சத்துக்கு ஏல விற்பனை செய்யப்பட்டது. சீனாவின் மாபெரும் தலைவர் மாவோ ஷெடாங். சீன கம்யூனிஸ்டு கட்சியை சேர்ந்தவர். இவர் மரணமடைந்து 27 ஆண்டுகள் ஆகிறது.

இந்த நிலையில் இவரது அரிய புகைப்படம் சீனாவில் ஏலத்துக்கு விடப்பட்டது. அதைப் பலர் போட்டி போட்டு கூடுதல் தொகைக்கு கேட்டனர். முடிவில் ரூ.30 இலட்சத்துக்கு அந்த போட்டோ ஏலம் போனது. இது நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட 10 மடங்கு அதிகமாகும். அதை லூஷான் மவுன்டெய்ன் என்ற சுற்றுலா நிறுவனம் ஏலத்தில் எடுத்தது.

# சமுர்த்தி புலமைப்பரிசில் திட்டத்தில் கிளி.யில் 144 மாணவர்களுக்கு வாய்ப்பு



கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் சமுர்த்தி 'சிப்தொற' புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் சமுர்த்தி கொடுப்பனவை பெறும குடும்பங்களிலிருந்து 2011 க.பொ.த. சாதாரணதரத்தில் தோற்றி 2012 உயர்தரத்திற்கு தெரிவான மாணவர்களில் கணிதம், தமிழ் பாடங்களில் திறமைச் சித்தி பெற்ற 144 மாணவர்ளுக்கு புலமை பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

சமுர்த்தி சிப்தொற திட்டத்தின் கீழ் கரைச்சி பிரதேசத்தில் 76 மாணவர்களுக்கும், கண்டாவளையில் 34 மாணவர்களுக்கும், பளையில் 14 மாணவர்களுக்கும், பூநகரியில் 20 மாணவர்களுக்கும் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் 186 மாணவர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் புலமைப்பரிசில்கள் வழங்கக் கூடியதாக இருந்தும் 144 மாணவர்களே விண்ணப்பித்தார்கள் என மாவட்ட செயலகத்தினர் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சியில் 11733 குடும்பங்கள் சமுர்த்தி உதவிகளைப் பெற்று வருகின்றனர். கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 6261 குடும்பங்களும், கண்டாவளையில் 2552 குடும்பங்களும், பளையில் 911 குடும்பங்களும், பூநகரியில் 2009 குடும்பங்களும் சமுர்த்தி உதவிகளைப் பெறுகின்றனர்.

சமுர்த்தி திட்டத்தின் கீழ் அந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் பல்வேறு திட்டத்தின் கீழ் பல நன்மைகளை பெறுவதாக மாவட்ட சமுர்த்தி செயலகம் தெரிவிக்கிறது. இந்த 2013 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களுக்கும் மாதாந்தம் 5000 ரூபா வழங்கும் இத்திட் டம் காணப்படுவதாகவும் அதற்கு பொருத்தமாக மாணவர்கள் விண்ணப்பிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றனர் மாவட்டச் செயலகத்தினர்.

இதேவேளை இன்று சமுர்த்தி 'சிப்தொற' திட்டத்தின் கீழ் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் "கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன், வடக்கு கிழக்கு சமுர்த்தி திட்டப்பணிப்பாளர் நடேசராஜா கிளிநொச்சி சமுர்த்தி ஆணையாளர் திருமதி ஜெயராணி, பிரதேச செயலர்களான நாகேஸ்வரன், முகுந்தன், சத்தியசீலன், வசந்தகுமார் மாவட்டச் செயலக உதவித்திட்டப் பணிப்பாளர் கௌரிதாசன் மற்றும் சமுர்த்தி ஆணையாளர் உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (29)

## வட்க்கை....

காயமடைந்தவர்களாவர்.

அனர்த்த பாதிப்புக்களை அடுத்து அப்பகுதிக்கு வருகைதந்த பிரதேச செயலர் மற்றும் இராணுவத்தினர் வீழ்ந்த பனை மரங்களை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். அத்துடன் பொதுமக்கள் அப்பகுதியிலுள்ள ஆலயம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டதுடன் அவர்களுக் கான உதவிகளை பிரதேச செயலகம் ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரதான வீதிகள் பலவற்றின் குறுக்கே மரங்கள் வீழ்ந்தமையால் போக்குவரத்துக்களும் சிறிது நேரம் தாமதமானது. அத்துடன் யாழ். இலுப்பையடிச் சந்தையில் தொலைத்தொடர்பு கோபுரமொன்றும் சரிந்து வீழ்ந்துள்ளது.

பல பகுதிகளில் மக்களின் வீட்டுக்கூரைகள், வர்த்தக நிலைய கூரைகள் என்பன தூக்கி வீசப்பட்டன. அத்துடன் கைதடி வெளிப் பகுதிகளில் காணப்பட்ட வர்த்தக விளம்பர பதாதைகளும் தூக்கி வீசப்பட்டிருந்தன.

நீர்வேலிப் பகுதிகளில் பெருமளவான வாழைமரங்கள் முறிந்து வீழ்ந்தன. நேற்றைய அசாதாரண காலநிலையால் பாடசாலைகளுக்கான மாணவர் வருகையும் வெகுவாகக் குறைந்து காணப்பட்டதுடன் அரச அலுவலகங்களிலும் பணியாளரின் வரவில் வீழ்ச்சி காணப்பட்டது.

இதேவேளை குடாநாட்டில் நேற்றைய அசாதாரண காலநிலையால் 42 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் 8 வீடுகள் முற்றாகவும், 200 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளதாக அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிலிருந்தே மேற்படி 42 குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளதாகவும் தெல்லிப்பழை, சங்கானை, ஊர்காவற்றுறை, பிரதேச செயலர் பிரிவில் 8 வீடுகள் முழுமையாகவும், 200 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கப் படுவதாகவும் வீடுகளைத் திருத்துவதற்கு கூரைத்தகடுகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட கடுமையான காற்று மற்றும் பலத்த மழையினால் 3 வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. கரைச்சிப் பகுதியில் பன்னங்கண்டியிலும், கண்டாவளையில் பரந்தன் குமாரசாமிபுரத்திலும், பூநகரியில் முழங்காவில் பகுதியிலுமே இவ்வாறு கூரைகள் தூக்கி வீசப்பட்டன.

எனினும் மாவட்டத்தில் இடப்பெயர்வுகள் எதுவும் ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

அதேபோன்று முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் சுழல்காற்று பலத்த மழையினால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர். மன்னார் விடத்தல்தீவில் நேற்றுக்காலை சுமார் 3 நிமிடங்கள் வரை வீசிய சுழல்காற்றினால் 10 வீடுகளின் கூரைகள் பறந்தன. அத்துடன் இக்கிராமத்திலுள்ள மின்கம்பங்களும் உடைந்து வீழ்ந்துள்ளன. (125,பா,இ,02,05,40)

## அதிகாலை...

மாதா சொரூபத்தை தாங்கியிருந்த மண்டபம் அப்படியே இடிந்து வீழ்ந்து சேதமடைந்துள்ளது.

சம்பவ நேரம் வழிபாடுகளிலிருந்த மக்கள் ஆலயத்தின் வேறு பகுதியில் இருந்ததால் இடி மின்னல் தாக்கத்திலிருந்து தப்பிக்கொண்டனர் எனவும் தெரியவருகின்றது.

மேலும் இந்த ஆலய கார்மேல் மாதா காட்சி கொடுத்த நாள் நேற்று என்றும் அந்த ஆலய பங்கு மக்கள் தெரிவித்துள்ளனர். (68,பா,27,20)

## வல்வெட்டித்...

சமயத்தில் இடி மற்றும் மின்னல் தாக்கம் காரணமாக இக் கடற்றொழிலாளி கடலில் மூழ்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவருடன் கூடச்சென்ற மற்றுமொரு தொழிலாளி இச்சம்பவத்தின்போது மயக்கமடைந்தார். இவர் நேற்றுக்காலை கரை திரும்பி விட்டார்.

ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தங்கவேலாயுதம் அருளானந்தம் (வயது - 18) என்பவரே கடலில் மூழ்கி காணாமற்போயுள்ளார்.

மரணமடைந்திருக்கலாம் என்று நம்பப்படும் இவரது சடலம் நேற்றிரவு வரை கண்டுபிடிக்கப்படவில்லை. இவரது சடலத்தைத் தேடும் பணிகளுக்காக ஆதிசக்தி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் சுமார் 45 படகுகளுடன் தயார் நிலையில் உள்ளனர். இன்று அதிகாலை முதல் தேடுதல்கள் நடத்தப்படவிருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டது. (116,01)

## 13 ஆவது...

படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். 13 ஆம் திருத்தச் சட்டத்தில் மாற்றங்கள் செய்யப்படுமா என்பது குறித்து அரசாங்கம் இதுவரையில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாற்றங்கள் செய்யப்பட்டால் அது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சர்வதேச சமூகத்திற்கு அளித்த வாக்குறுதிகளுக்கு புறம்பானதாக அமையும் என அவர் தெரிவித்துள்ளார். வட மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் அரசாங்கம் இந்தியாவுடன் இணைந்து பல சந்தர்ப்பங்களில் உறுதிமொழிகளை அளித்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு அப்பாலான தீர்வுத் திட்டத்தை முன்வைப்பதற்கு முன்னதாக, 13 ஆம் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் வட மாகாணசபைத் தேர்தல்களை நடத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கத்தின் நன்மைக்காக அரசியல் சாசனத்தில் மாற்றம் செய்யப்பட்டால் அது ஒட்டு மொத்த தேசிய நல்லிணக்க முனைப்புக்களுக்கு பாதகமானதாகவே அமையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# போலாட்டின் விஸ்வரூப அதிரடியில் மும்பையிடம் வீழ்ந்தது சன்ரைசர்ஸ்

போலார்ட் துடுப்பாட்டத்தில் விஸ்வரூபமெடுக்க ஹைதரபாத் சன்ரைசர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் மும்பை இன்டியன்ஸ் 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

ஐ.பி.எல் இன் 62 ஆவது போட்டி நேற்றிரவு மும்பை வான்கடே மைதானத்தில் இடம்பெற்றது. நாணயச்சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய சன்ரைசர்ஸ் முன்னணி வீரர்களின் சராசரியான ஆட்டத்தில் 20 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது. அவ்வணி சார்பாக பட்டேல் 26, தவான் 53, விகாரி 41, வைட் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் மலிங்க 2, ஜோன்சன் 1 விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 179 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி எனக் களமிறங்கிய மும்பை இன்டியன்ஸ் ஸ்மித் 21, சச்சின் இணை சிறந்த அடித்தளமிட்டது. பின்னர் சச்சினுடன் தினேஷ் கார்த்திக் இணைந்து சிறப்பாக விளையாடிய போதிலும் சச்சின் (38) காயமடைந்து வெளியேறினார். இதன் பின் ரோகித் சர்மா இணைந்தார். எனினும் கார்த்திக் (30) ஆட்டமிழக்க ராயுடு வந்தவேகத்திலேயே (02) நடையைக் கட்டினார்.

ஆனால் சர்மாவுடன் இணைந்த போலார்ட்டின் அதிரடியில் அனல் பறந்தது. பெரேரா, மிஸ்ராவின் ஓவர்களில் பந்து எல்லைக் கோட்டைத் தாண்டியது. 27 பந்துகளில் 8 சிக்ஸர், 2 பவுண்டரிகள் அடங்கலாக 67 ஓட்டங்களை போலார்ட்டும், சர்மா (20) ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற 3 விக்கெட்டுக்களை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்று 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக போலார்ட் தெரிவானார்.

## கைத்தொழில்துறை...

தொழிற்துறைகளை மேம்படுத்துவது தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

இதனிடையே பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற பல்வேறு அபிவிருத்தி செயற்திட்டங்களை அமெரிக்க பிரதிநிதிகளுக்கு விளக்கிய அமைச்சர், மேலும் இதுபோன்று இணைந்து செயற்படும் பட்சத்தில் அமைச்சின் ஊடாக முன்னெடுக்கப்படும் செயற்திட்டங்களை விரிவாக்கம் செய்ய முடியுமென்றும் எடுத்து விளக்கினார்.

ஐக்கிய அமெரிக்கா இராச்சியத்தின் அபிவிருத்தி நிதியின் பொருளாதார அபிவிருத்திப் பணிப்பாளர் ரூசெல் பஸார் தலைமையிலான குழுவினருடன் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் அமெரிக்க ஐக்கிய இராச்சியத்தின் அபிவிருத்தி நிதியின் ஹவேகா பின் ப்ளஸ் கருத்திட்ட அபிவிருத்திப் பிரதானி மைக்கல்கர் ஐக்கிய அமெரிக்கத் தூதுவராலயத்தின் அரசியல் பிரிவின் மைக்கல் ஏரின், அமைச்சின் செயலாளர் சிவஞானசோதி, அமைச்சரின் ஆலோசகர் வீ. ஜெகராஜசிங்கம், ஈ.பி.டி.பி. யின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.தவராஜா, கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உறுப்பினர் சிந்தன் டி. சில்வா, அமைச்சின் திட்டப்பணிப்பாளர் அஜித் ஏக்கநாயக்க ஆகியோர் உடனிருந்தனர்.

## கைதடியில்...

நேற்று மு.ப. 10.15 மணியளவில் நடைபெற்ற இந்த விபத்தில் யாழ். நகரிலிருந்து வவுனியாவிற்கு பயணித்தவர்களும் வவுனியா, பரந்தன், பளைப் பகுதிகளிலிருந்து யாழ். நகர் நோக்கி பயணித்தவர்களுமே இவ்வாறு காயங்களுக்குள்ளாகினர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து காயமடைந்தவர்கள் ஏ-9 வீதியில் பயணித்த வாகனங்களில் ஏற்றப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இந்த விபத்து காரணமாக சுமார் 2 மணி நேரம் கைதடி பாலத்தின் ஊடாக ஏ-9 வீதியின் போக்குவரத்து தடைசெய்யப்பட்டிருந்தது. இதன் பின்னர் பாரம்தூக்கியின் உதவியுடன் விபத்துக்குள்ளாகியிருந்த இரண்டு பயணிகள் பஸ் வண்டிகளும் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்டதன் பின்னர் ஏ-9 வீதியூடான போக்குவரத்து வழமைக்குத் திரும்பியது.

இந்த விபத்துச் சம்பவம் குறித்து சாவகச்சேரி பொலிஸ் பொறுப்பதிகாரி வன்னியாராச்சி தலைமையிலான் போக்குவரத்து பொலிஸ் பிரிவைச் சேர்ந்த தம்மிக்க, விக்கிரமரட்ண ஆகியோர் அடங்கிய பொலிஸ் பிரிவினர் ,விசாரணையை மேற்கொண்டுள்னளர். இந்த விபத்தில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருபவர்களின் விபரம் வருமாறு,

நீற்ரா (வயது - 39) கொக்குவில், வி.தனுகாந்தன் (வயது - 14) வவுனியா, பி.கிருஜா (வயது - 25) யாழ். நகர், த.ரோய் (வயது - 27) குருநகர், புனிதபாமினி (வயது - 44) ஸ்ரான்லி றோட், மங்களேஸ்வரி (வயது - 48) பிரமந்தனாறு, விசுவமடு, சந்திராதேவி (வயது - 57) எஸ. முருகேசு (வயது - 64) கிளிநொச்சி, பி.றொபீன்சன் (வயது - 19) ஊர்காவற்றுறை, ஜெகதா (வயது - 32) ஏனையவர்கள் சிறு சிறு காயங்களுக்குள்ளாகிய நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றதாகவும் மேலும் தெரியவருகின்றது. (பா.இ.130,80,15)

## நகர்கிறது...

இந்த மகாசென் சூறாவளியின் தாக்கத்தினால் மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம், திருகோணமலை உள்ளிட்ட மட்டக்களப்பு வரையான கரைகளுக்கு அப்பாற்பட்ட கடல் பகுதிகளில் 700 கிலோ மீற்றர் மணித்தியாலத்திற்கு அதிகமான காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு அத்துடன் விட்டுவிட்டு மழையும் பெய்யக் கூடும்.

வடக்கு மற்றும் கிழக்கு கரைகளுக்கப்பால் உள்ள கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவோர் அல்லது கடற்பிரயாணங்களை மேற்கொள்வோர் மிகவும் அவதானமாக இருக்குமாறும் கேட்கப்படுகின்றனர்.

இலங்கைக்கு மேலாகவும் அயலிலும் காற்றானது பலமாகவும் அதாவது 60 கிலோ மீற்றர் மணித்தியாலத்தில் காணப்படும். காற்றானது தென்மேற்குத் திசையாக வீசும்.

நாட்டின் பெரும்பாலான பகுதிகள் முகிலால் மூடப்பட்டு காணப்படும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் விட்டுவிட்டு மழை காணப்படும்.

இதில் சில இடங்களில் 200 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி காணப்படக் கூடும். மத்திய மாகாணம், சப்ரகமுவ மாகாணம், மேல் மாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் தென் மாகாணங்களில் விட்டுவிட்டு மழை காணப்படும். இதில் பலத்த மழை வீழ்ச்சியாக 100 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி காணப்படும். ஏனைய பகுதிகளில் ஓரளவு மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

# வடக்கில் தேர்தல் நடத்துவதா? அரசியல் கட்சிகளுடன் மாநாடு

(கொழும்பு)

வடக்கு மாகாணசபைத் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் நடத்துவது குறித்து முக்கிய அரசியல் கட்சிகளுடன் ஜனாதிபதி கலந்துரையாடுதவதற்கு திட்டமிட்டிருக்கிறார்.

உகண்டா சென்றுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, நாடு திரும்பியதும் வடக்கு மாகாணசபைக்குத் தேர்தலை நடத்துவது தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளுடனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனும் தனித் தனியாகப் முக்கிய பேச்சுக்களை நடத்தவுள்ளதாக ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

வரும் செப்ரெம்பரில் வடக்கு மாகாணசபைக்குத் தேர்தலை நடத்துவது தொடர்பாக, ஆளும் கூட்டணியில் எழுந்துள்ள கொள்கை முரண்பாடு தொடர்பாக ஆராய்வதற்கே இந்தக் கலந்துரையாடல்கள் நடத்தப்படவுள்ளது என்று தெரியவருகிறது.

வடக்கு மாகாணசபைக்குத் தேர்தலை நடத்தி, அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு ஆளும் கூட்டணியில் உள்ள இடதுசாரிக் கட்சிகள் ஆதரவு தெரிவிக்கின்ற அதேவேளை, வேறு சில கட்சிகள் அதற்குப் பகிரங்கமாக எதிர்பபுத் தெரிவித்துள்ளன.

கூட்டணிக் கட்சி உறுப்பினர்கள் அண்மையில் அமைச்சரவைக் கூட்டத்தில், தேர்தலை நடததுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கருத்துகளை வெளியிட்டனர்.

இந்தநிலையிலேயே கூட்டணிக் கட்சிகளுடன் தேர்தலை நடத்துவது குறித்து ஆராய ஜனாதிபதி திட்டமிட்டுள்ளார்.

அத்துடன் இந்த விவகாரம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தவும் ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

# புதிய தேர்தல் சட்டம் விரைவில் அறிமுகம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்துவதற்காகப் புதிய சட்டங்கள் அறிமுகப்படுத்தப் படவிருக்கின்றன.

தற்போதுள்ள தேர்தல் சட்டத்திலுள்ள இடைவெளிகளை நிரப்பி உள்ளூராட்சி மன்றங்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்ப வழி செய்வதற்காக புதிய சட்டங்களை உள்ளூராட்சி மற்றும் மாகாணசபைகள் அமைச்சு கொண்டுவரவுள்ளது என தகவல்கள் தெரிவிக்கின்றன.

விகிதாசார பிரதிநிதித்துவம் கூடிய வாக்குகளைப் பெற்றவர் வெற்றி பெறல் மற்றும் பழைய முறை ஆகிய இரண்டையும் கலந்து உள்ளூராட்சிமன்ற தேர்தல்களை நடத்துவ்தற்காக அரசாங்கம் கடந்த வருடம் இரண்டு சட்டங்களைக் கொண்டுவந்தது.

# அவல வாழ்வை சகிக்க முடியாது மாற்று இடத்தில் குடியமர்த்துங்கள்

## கோணாப்புலம் நலன்புரி மக்கள் கோரிக்கை



அனர்த்தப் பாதிப்புக்களைப் பார்வையிடச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனைச் சூழ்ந்துகொண்ட கோணப்புலம் நலன்புரி மக்கள் தம்மை மீள்குடியேற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கும்படி கோரிக்கை விடுத்தனர்.

நேற்று அதிகாலை வீசிய மினிசூறாவளியினால் கோணப்புலம் நலன்புரி முகாமில் தங்கியுள்ள வலிகாமம் வடக்கு மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பில் கண்டறிவதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமசந்திரன் சென்றபோது, அம்மக்கள் இந்தக் கோரிக்கையினை முன்வைத்தனர்.

23 வருடங்களுக்கு மேலாக எமது நிலங்களை நாங்கள் விட்டு வெளியேறி இன்று சொல்லொனா துன்ப துயரங்களை அனுபவித்து வருகின்றோம். ஒருவரின் முற்றத்தில் இன்னொருவர் வ்டு கட்டி வாழும் நிலையில் நர்ங்கள் வாழ்ந்து வருகின்றோம.

வலிகாமம் வடக்கு முகாம் மககள் என்றவுடன் பிரதேச செயலகம் தொடக்கம் பொலிஸ் நிலையம் வரை ஒரு வித்தியாசமான போக்கில் எம்மைப் பார்க்கும் நிலையே காணப்படுகின்றது.

கடந்த முறை ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களினால் இடம் பெயர்ந்து பாடசாலைகளில் தங்கியிருந்தபோது அங்கு பல பிரச்சினைகளை நாங்கள் எதிர்நோக்கியிருந்தோம்.

எமது மயிலிட்டி பிரதேசம் எமக்கு கிடைக்காது என்று எமக்குத் தெரியும். எனவே கீரிமலை மற்றும் தையிட்டி பிரதேசங்களில் எங்களை மீள்குடியேற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும என்று அவர்கள் கேட்டுக்கொண்டனர்.

இதற்குப் பதிலளித்த சுரேஷ பிரேமச்சந்திரன் இது தொடர்பில் இராணுவத்தினரிடம் கேளுங்கள் என்று தெரிவித்தார். (02)

# மின் கட்டண எதிர்ப்பு போரில் முஸ்லிம் காங்கிரஸ் மும்முரம்

(கொழும்பு)

மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்க் கட்சிகளினால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள ஆர்ப்பாட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் கலந்துகொள்ளவுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளுமாறு தொழிற்சங்க பிரதிநிதிகளினால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு மானசீக ரீதியான ஆதரவு வழங்கப்படும். எனினும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியற் தலைவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ளமாட்டார்கள் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.

ஆனால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தொழிற் சங்க பிரதிநிதிகள் கலந்துகொள்வர் என அவர் குறிப்பிட்டார்.

மின்சாரக் கட்டண அதிகரிப்புக்கு எதிராக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கப்பட்ட வேண்டும் என கட்சியின் அதியுயர் பீட கூட்டத்திலும் தீர்மானிக்கப்பட்டதாக ஹசன் அலி மேலும் தெரிவித்தார்.


# மாற்று வலுவுள்ளோருக்கான பொருளாதார வலுவூட்டலும் துணைச்சாதனங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகளும்



கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தலைமையில் மாற்று வலுவுடையோருக்கான பொருளாதார வலுவூட்டலும் துணைச்சாதனங்கள் வழங்குவதற்கான ஏற்பாடும் எதிர்வரும் 15.05.2013ம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

**இடம் : கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவுச்சபை மண்டபம்**

கிளிநொச்சி மாவட்ட மாற்றுவலுவுள்ள பயனாளிகள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்கப்படுகிறீர்கள்.

**போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன**

பூநகரி பிரதேச செயலகத்திலிருந்து காலை 8.00 மணி
முழங்காவில் மகா வித்தியாலயத்திலிருந்து காலை 8.00 மணி
தர்மபுரம் மகா வித்தியாலயத்திலிருந்து காலை 8.30 மணி
வன்னேரிக்குளம் மகா வித்தியாலயத்திலிருந்து காலை 8.30 மணி
பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்திலிருந்து காலை 8.30 மணி



(C/2526)

**மேலதிக தொடர்புகளுக்கு: 021-228 5393**
**மகேஸ்வரி நிதியம்**


இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 மே 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.